# அலைகள் தேடும் கரை

ஸனீரா காலிதீன்



அலைகள் தேடும் கரை

# அலைகள் தேடும் கரை

(நாவல்)

ஸனிறா காலிதீன் (மக்கீன்)

பேசும் பேனா

இந்நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் உள்ளடக்கமானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கைத் தேசிய நூலகம் - வெளியீடுகளில் உள்ள பட்டியற் தரவு

காலிதீன், சனீரா.
அலைகள் தேடும் கரை / சனீரா காலிதீன். -
களுதற : நூலாசிரியர், 2009. - ப. 110; ச.மீ.21

ISBN 978-955-51618-0-0 விலை: 180.00

i. 894.8113 டிடிசி 21 ii. தலைப்பு

நாவல் - தமிழ்

| | | |
|---|---|---|
| நூல் | : | அலைகள் தேடும் கரை |
| ஆசிரியர் | : | © சனீரா காலிதீன் |
| முதற் பதிப்பு | : | 2009 |
| விலை | : | 180.00 |
| அச்சுப் பதிப்பு | : | POSITIVE GRAPHICS<br>63, பள்ளி வீதி, பேருவளை<br>அலை.பேசி : 071-9293073 |
| வெளியீடு | : | பேசும் பேனா<br>63, பள்ளி வீதி, பேருவளை<br>அலை.பேசி : 071-9293073, 077-68481118 |

**ISBN 978-955-51618-0-0**

முத்துக்குளிப்பு

என் கல்விக்கு வழிகாட்டிய

என் தாய் மாமன்

**ஜனாப் ஏ.எல்.எம். ஜெயினுலாப்தீன்**

என் தந்தை

**ஜனாப் பி.எல்.எம். காலிதீன்**

என் தாய்

**உம்முல் ஹஸீனா**

ஆகியோருக்கு

இந்நூல் சமர்ப்பணம்.

## துறை

அநுபவம் இலக்கியப் படைப்பின் வெற்றிக்கு அநுகூலமானது. அமுத்தம் பெறாத அநுபவம் இலக்கிய வெற்றியை அடைந்து விடாது. இக்கருத்துடன் நோக்கும் போது வியக்கவைக்கும் ஒரு சிறந்த நாவலாக இந்நாவல் உயர்கிறது. சமூகத்தை மதிப்பீடு செய்து, மனித வாழ்க்கையின் சாரத்தை உள்வாங்கி மனிதனுக்குரிய நாவலாகவும் இது மதிப்புப் பெறுகிறது எனலாம். தத்துவ விளக்கமோ, தத்துவத்தின் எதிர்மறையோ மையமாகக் கொண்ட நாவலல்ல இது, ஆனால், தத்துவவாதிகள் தேடக்கூடிய விளைவுகள் இந்நாவலில் பொதிந்துள்ளதெனலாம்.

இலங்கையின் முதல் பெண் எழுத்தாளரான செ. செல்லம்மா 1824களில் "இராசதுரை" எனும் நாவலை எழுதி பெண் நாவலெழுத்தாளர் வரிசையை ஆரம்பிக்கின்றார். இந்த வரிசையின் இன்றைய இடத்தை 'ஸனீறா காலிதீன்' அடைகிறார். இந்த அடைவில் ஏற்பட்ட வித்தியாசமான ஒரு நாவல் தான் இப்புத்தகம்.

நடைபெறும் வாழ்க்கையை யதார்த்தமாக எடுத்துக் காட்டும் உரைநடையையே நாவல் என்கிறோம். இந்நாவல், நடப்பியலை - யதார்த்தத்தை மட்டும் காட்டி நிற்பதல்ல. இயற்கை நிலையையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது. 'ரியலிஸம்' 'நெச்சுரலிஸம்' இரண்டும் பொதிந்து நிற்கும் முதல் நாவலெனவும் இதைத்துணியலாம். இவ்விதம் எழுதுவதற்கு, மனித வர்க்கத்தைக் கூர்ந்து கவனித்தல், மனிதர்களது ரகங்கள், மனப்போக்குகளின் வித்தியாசங்கள், எண்ணங்கள், உணர்ச்சிகள், அமுத்தங்கள், அர்த்தங்கள் என்பவற்றின் பின்னணிகள் அறியப்பட வேண்டும். இந்நாவலாசிரியர், இவற்றையெல்லாம் எவ்விதம் அறிந்தார் என வியக்க வைக்கும் நாவல்தான் இது.

இந்நாவலாசிரியர் அநீதிகளைக் கண்டு அல்லல்பட்டாரோ என்னவோ, அநீதிகளுக்கான தண்டனைகளைத் தன்னிச்சைப்படி அவர் கொடுக்கவில்லை. நடப்பதெல்லாம் நடக்கின்றன. வாசகனைத்தான் மிக மனக்கஷ்டத்துள் அவை ஆழ்த்துகின்றன. இயற்கை வாதம் இதுதான். யதார்த்தம் எவற்றை அடைய வைக்கின்றதோ அவை நடைபெறலாம். படைப்பாளி இவற்றைப் பற்றிக் கவலையடையவில்லை. இது தான் இந்நாவலுக்குப் பெரும் வெற்றியை அளித்திருக்கின்றது.

களுத்துறைப் பகுதியின் சூழலில் நடைபெறும் உருக்கமான கதை இது. இது நடக்கின்றதோ இல்லையோ இருக்கின்றது. அன்றாடம் காணும் அவலங்கள் அப்படியே படம் பிடித்துக் காட்டப்படும் கதை இது. கதை சொல்லும் பாணி நாவல் உருவத்தை உண்டு பண்ணி நிற்கின்றது. விரிந்த ஒரு சூழலின் குறித்த தனிப் பண்பை நிறுத்திச் சித்திரிப்பது பெரும் முயற்சி. இம்முயற்சிகளில் இந்நாவலாசிரியர் பெரும் வெற்றியடைந்துள்ளார். பாத்திரங்களை தனிநபராக உறுத்திக்காட்டி குண ஒழுக்க முறைகளை முத்திரையிட்டுக் குறிப்பிடும் மேன்மை இந்நாவலின் சிறப்புக்கோர் அத்தாட்சி எனலாம்.

அநீதியைக் கண்டு வெளிப்படும் உள்ளக் கொதிப்பு வாசகனுக்கு ஏற்படுவதால், கலை வடிவின் உருவ உள்ளடக்கச் சாதனைகளை இந்நாவல் பெற்று நிற்கின்றது. சுருக்கமான இக்கருத்தை விரிவாகவும் விளக்கமாகவும் வாசகர்கள் மட்டுமல்ல, தத்துவம் பேசுவோரும் ஏற்படுத்தலாம் எனக் கூறுவதில் அமைதி பெறுகின்றேன்.


ஏ.இக்பால்

"றிபாயா மன்ஸில்
தர்கா நகர்
*034-5080784*

# கரை

நமது தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு 'தீபம் தீயாகிறது' நாவல் மூலம் நாவலாசிரியையாகப் பரிணமித்த சகோதரி ஸனீரா காலிதீன் அவர்கள் நமது இலக்கிய உலகில் வெகுவாக அறியப்படாதவராயினும், தனது எழுத்துக்களால் ஒருதொகை இலக்கிய ஆர்வலர்கள், வாசகர்களது கவனத்தைத் தன்பக்கம் ஈர்த்துக் கொண்ட சிறப்புக்குரியவர்.

தினகரன், வீரகேசரி ஆகிய தேசிய பத்திரிகைகளிலும், சுமதி, கடல், அரங்கம் ஆகிய சிற்றிலக்கிய ஏடுகளிலும் சிறுகதைகள் எழுதிய இவரது இலக்கிய ஆளுமை சிலாகித்துப் பேசத்தக்கதாகும்.

முஸ்லிம் பெண் எழுத்தாளர்களில் சிறுகதையாளராகவும், நாவலாசிரியராகவும் பிரகாசிக்கும் ஒரு சிலருள் இவரது படைப்புலகம் வித்தியாசமானதாயும், அதே சமயம் தனது பகைப்புலத்தின் மரபு சார்த்த நியமங்களிலிருந்து மாறுபட்டதாயும் காணப்படுகின்றது.

ஒரு சராசரி வாசகனை, அவனது வழமையான எதிர்பார்க்கைகளை பல விதங்களில் ஏமாந்து போகவைக்கும் சராசரியல்லாத இவரது எழுத்துக்கள் வழமையான கதைகூறும் பாங்கிலிருந்து விலகி நிற்பதும், அவையே நேர்படுத்தப்பட்ட பெண்ணியம் சார்ந்திருப்பதும் தனித்ததொரு அடையாளமெனலாம்.

**நாஜிபா ஹம்ஸா,**

அதிபர்,

களுத்துறை முஸ்லிம் மகளிர், மகா வித்தியாலயம்

# திரை

மனிதவாழ்க்கையே இலக்கியங்களாகின்றன. கிராமியம் அந்த இலக்கியங்களுக்கு அழகூட்டுகின்றது. எனது முதல் நாவலைப் படித்தவர்களின் வேண்டுகோள்களே எனக்கு இந்நாவலை எழுதத்தூண்டியது . சமூகத்தை ஊடுருவிய எனது பார்வையில் நிலைத்து நித்தியமானவையே இந்நாவலாகும். அலைகள் கரையைத் தொடுகின்றன. கரைகின்றன. சில சிற்றலைகள் கரைகாணப்போகும் வேளை பேரலைகளால் சிதறிச் சிதைகின்றன. மீண்டும் மீண்டும் முயலுகின்றன.

றிஸாயாவின் குடும்பத்தை அலைக்கழித்து பின் தள்ளுகின்றது சீதனம் எனும் ஓரலை. மற்றுமோர் அலையால் ஸுலைஹாவின் வாழ்வு தத்தளிக்கின்றது.

சமூகத்தில் தோன்றித் தோன்றித் தொடரும் இவ்வாறான பேரலைகளால் சிதறிப் பல வழிகளிலும் அலைக்கழிக்கப்படுகின்றது பெண்ணின் வாழ்வு. சமூகப் பெருங்கடலில் இவ்வாறாக அலையும் அலைகள் எண்ணற்றவை. அவ்வாறு கரையைத்தேடி முயலும் றிஸாயா சகோதரிகளின் உள்ளக்கிடங்கின் ஊமைத் தவிப்புகளுக்கு இந்நாவல் மூலம் உருக்கொடுத்துள்ளேன். இந்நாவல் நூலுருப்பெறுவதில் முழுமையாக உழைத்தவர்களுக்கும் எமது பாடசாலை அதிபர் திருமதி. நாஜிபா ஹம்ஸா அவர்களுக்கும் எனது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இந்நாவல்பற்றி வாசக உள்ளங்களின் கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றேன்.

33, டி.அல்விஸ் பிளேஸ்
களுத்துறை, தெற்கு.

நன்றி

ஸனிறா காலிதீன்

# 1.

**இரவும்** பகலும் இணையத் துடிக்கும் அழகிய அந்தி-மாலை... கொட்டங்காய் மரங்களை மருவியோடுகிறது களுகங்கை. நதியோடுள்ள இடைவெளியைக் குறைத்துக்கொள்ள முயன்று... அதனை அண்மி வந்து நீளுகின்றது ரயில்பாதை. ரயில்பாதை ஓரமாக அழகிய பூந்தோட்டம் ஒன்று அசைந்து வருவது போல்.... நடைபயின்ற இளம்பெண்கள் ஒவ்வொருவராகக் கலைந்து செல்ல.... அவள் தனியாக நடக்கிறாள். நதியிலே தவழ்ந்த மாலைத்தென்றல்.... அவள் கூந்தலில் குறும்பு செய்கிறது... நழுவி விழுந்த முன்றானையைத் தூக்கித் தலையில் போட்டு... தோளிலே மாட்டிக்கொள்கிறாள். அவளது கைச்சுமை கனக்கிறது... கையிலிருந்த துணிப்பார்ஸலை மறுகைக்கு மாற்றியபடி தண்டவாளத்தை விட்டு விலகி நடந்து தார்ப்பாதைக்கு மாறிக்கொள்கிறாள் மஸீயா....

இரண்டு நாட்களுக்குள் எல்லாம் தைத்துக் கொடுத்துவிட வேண்டும்.. என நினைத்த போது.. அவளது கால்கள் படபடத்தன. அவள் அவசரமாக நடக்கிறாள். கையின் சுமை நடையின் வேகத்தைத் தடுக்கிறது... சுமை அழுத்துகிறது. வாழ்வில் உயர்வான இடத்தை அடைய வேண்டுமென்ற ஆவலில் வேகமாக இயங்கியவள் தான் அவள். குடும்பச்சுமை அவளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டிருக்கிறது.

தந்தையின் இழப்பினால்... அவள் குடும்பத்தை அலைக்-கழித்த வறுமையின் கோரத்தாண்டவம்... அவள் படிப்பைப் பலி

கொண்டது... தங்கைமாரினது படிப்பும் பலிகொள்ளப்படாமலிருக்க... அவள் சுமைதாங்கியானாள். ஆரம்பத்தில் ஆசைக்காகத் தைக்கப் பழகினாள். ஒன்றிரண்டு உடுப்புகள் தைத்தபோது... உம்மா பார்த்துப் பெருமைப்பட்டாள்..

"இது எங்கட மஸீயா தச்சது..." என்று வீட்டுக்கு வந்தவர்களுக்கெல்லாம் காட்டத் தொடங்கினாள். உம்மாவின் பெருமை பூத்த முகமும் சிரிப்பும் அவளுக்கு உற்சாகமூட்டவே.... தையல் அவளுக்குக் கைவந்த கலையானது.

வீட்டினுள் நுழைந்ததும் உடைமாற்றிக் கொண்டு, பரபரவென்று துணிகளை வெட்டத் துவங்கினாள் மஸீயா....

"இதென்தியன்... தண்ணிச்சொட்டாலும் குடிச்சாமத் தொடங்கீட்டா..." அத வெச்சிட்டுத் தேத்தண்ணியக் குடீங்கொ...." கூறியபடி கதவடியில் வந்து அமர்ந்து கொள்கிறாள் ஆயிசா. இரண்டு கோப்பைகளில் தேநீர் கொண்டுவந்து... ஒன்றைத் தாயின் கையில் கொடுத்து விட்டு... மற்றதைச் சகோதரிக்கருகில் வைத்தாள் றிஸாயா...

"மால மஃருபுக்கு அத வெய்ங்கொ... பொறகு வெட்டுங்கொ.." தாயின் வார்த்தைக்கு அடங்கினாள் மஸீயா. மஸீயாவுக்கு அடுத்தவள் றிஸாயா... அவளும் சகோதரிக்குதவியாக ... அவள் வேலையில் பங்கு கொண்டாள்.

இரவின் போர்வை கனக்கிறது. தையல் இயந்திரத்தோடு சேர்ந்த மனித இயந்திரங்களாக இயங்கிக் கொண்டிருந்தனர் இரு சகோதரிகள்... எங்கோ சுவர்க்கடிகாரமொன்றில் மணி பன்னிரண்டு அடித்து ஓய்கிறது. மஸீயா தைப்பதில் மூழ்கியிருந்தாள். அவள் தைத்துப் போட்ட சிறுவர் உடைகளுக்கு பொத்தான் தைத்துக் கொண்டிருந்தாள் றிஸாயா. அவளது இமைகள் கனமேறிக்கொண்டு வந்தன. தூக்கம் அவளோடு கண்ணாமூச்சி விளையாடத் தொடங்கியது. சகோதரிக்குக் காட்டிக் கொள்ளாமல் அவள் சில கணங்கள் இமைகளை மூடித்திறந்தாள். ஆனாலும் உறக்கத்தை வெல்ல அவளால் முடியவில்லை... அவள்... இரண்டு மூன்று தடவை தூங்கி விழுந்த போது. மஸீயா தன் வேலையை நிறுத்திக் கொண்டாள்.

உம்மாவுக்கும் தங்கையாருக்கும் பக்கத்திலே பாயிலே போய்ச் சாய்ந்தாள் றிஸாயா. சாய்ந்தவள் உடனேயே தூங்கிப் போனாள். குப்பி விளக்கின் சுவாலையைக் குறைத்து, விடிவிளக்காக்கி விட்டு, உறங்க மனமின்றி பலவீனமான அவ்வொளியில் கல்லாய்ச் சமைந்திருந்தாள் மஸீயா. அறைக்குள் மூத்த சகோதரனின் குறட்டையொலி கேட்டது. "நானா ஒழுங்காக ஒரு தொழில் செஞ்சால் ஊட்டுச் செலவயாவது சமாளிச்ச ஏலுமே..." என அவள் எண்ணினாள். அவளது அண்ணன் அர்சாத் ஒரு மாதத்திற்காவது ஒரு தொழிலில் நின்று பிடிக்க மாட்டான். அவனது பணத்தேவைகளும், வீட்டுச் செலவுகளும், சகோதரி-களின் படிப்புச்செலவும் எல்லாம் எப்படி அவள் சமாளிப்பாள்? நீண்டதாகப் பெருமூச்சு விட்டாள் மஸீயா. விளக்கின் சுடர் துடித்தது. ஏதோ நினைத்துக் கொண்டவளாய்க் கடிகாரத்தைப் பார்த்தாள். நேரம் இரண்டரையைத் தாண்டியிருந்தது. காலையில் தையல் வேலைக்குப் போகவேண்டுமென்ற நினைவு வந்ததும் எழுந்து போய், வரிசையாக உறங்கிக் கொண்டிருந்த தாய்க்கும் உடன்பிறப்புகளுக்கும் அருகே தலையணையொன்றைப் போட்டுப் படுத்துக் கொண்டாள். தாயும் சகோதரிகளும் அயர்ந்து தூங்கினர். 'உம்மா.. பாவம்... தூக்கத்திலாவது கவலைகளை மறக்கட்டும்...' என எண்ணியவளாக துணியொன்றால் உம்மா-வைப் போர்த்தி விட்டுத் தூங்க முயன்றாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. மனப்பாரங்களை உறக்கத்தில் இறக்கி வைக்க அவளும் விரும்பினாள். ஆனால் உறக்கம் அவளிடம் தள்ளாடி வந்தது.

# 2.

**அர்சாத்** தங்கை மஸீயாவைச் சுற்றிச்சுற்றி நின்றான்... அவனுக்குத் தேவைப்பட்ட பணம் கிடைத்ததும் மெல்ல வீட்டை விட்டு வெளியில் நழுவினான். இது வழமையாக நடக்கும் விடயமாதலால் அதை யாரும் பொருட்படுத்தவில்லை.

அன்று மாலையே யாருடனோ மோட்டார் சைக்கிளில் சென்று விழுந்ததாக காலிலும் கையிலும் கட்டுகளோடு வந்து நின்றான். "நீயும் பொம்பிளயாப் பொறந்தீந்தால் எனக்கு லேசாயிச்சேந்துதுடா.." என ஆயிசா வாய்பாடினாள். பயிர் சுமக்கும் பூமி களையும் சுமப்பது போல... பொறுப்பற்ற ஒருவன் தனக்குத் தலைமகனாக வாய்த்திருப்பதை எண்ணி ஆயிசா மனம் நொந்தாள். அவனால் தன் பெண்பிள்ளைகளுக்கு விடிவு கிடைக்கும் என எதிர்பார்க்க வேண்டிய அந்தத் தாயுள்ளம், அவன் எந்தத் தொல்லையில் சிக்குவானோ? எந்த வம்பில் போய் மாட்டுவானோ? என அஞ்சித் தவித்தது. அவனுக்கு வைத்தியம் செய்வதும் பணம் செலவழிப்பதுமாக ஒரு வாரம் கழிந்தது. அவன் பழையபடி பொறுப்பில்லாமல் சுற்றத் தொடங்கினான்.

"சோத்தத் திண்டுட்டு... இந்தச் தச்ச ஸுட்டுகளக்கொண்டு பெய்த்துக் குடுங்கொ மகன்.." கூறியபடி தரையில் பாயை விரித்தாள் ஆயிசா.

"எனக்கிப்ப ஏலா.."

"ஓனக்கெப்பவன் ஏண்டிய..?" கோபத்தோடு கேட்டாள் ஆயிசா.

விரித்த பாயிலே கடதாசி போட்டு உணவுத்தட்டுகளைக் கொண்டு வந்து வைத்தாள் நஜ்மா. நிஸ்ரின் கிளாஸில் தண்ணீர் கொண்டு வந்தாள். மகன் சாப்பிடும் வரை எதுவும் பேசாமல் அவனுக்கு உணவு பரிமாறினாள் தாய். 'தின்னச்செல்ல ஒண்டும் செல்லசடு' என்பது அவள் எண்ணம். அவன் முணுமுணுப்போடு சாப்பிட்டு முடித்தான். தைத்த உடுப்புகளைக் கொண்டு போகும்படி மகனை மறுபடி பணித்தாள் தாய். அவன் மறுத்தான்.

"ஓனக்கென்தியன் ஏண்டிய..?"

"எனக்கு வேற வேலீச்சி...."

"வேற வேல... சம்பாரிச்சப் போறா..?" அவளது தொனியில் சிறிது காரம் கூடியது.

"நான் சம்பாரிச்சிக் காட்டியனே..." கூறிவிட்டு மேசை மீது கட்டி வைக்கப்பட்டிருந்த உடுப்புப் பார்ஸலைச் சுமந்து கொண்டு வெளியேறினான் அர்சாத். தாயின் மனம் இளகியது. "பாவம்..." அவள் தனக்குள் முணுமுணுத்தாள்.

மஸீயா தையல் தொழிற்சாலையொன்றில் தைக்கச் செல்வதோடு வேறு இடங்களுக்கும் ஓடருக்கு உடைகள் தைத்தாள். அவளது உடலுழைப்பில் காலம் கரைந்தது. அவர்களது குடும்ப வண்டி தட்டுத்தடுமாறி நகர்ந்தது. றிஸாயா படித்துவிட்டுத் தொழில் தேடிக்களைத்துக் கொண்டிருந்தாள். நஜ்மா நிஸ்ரின் இருவரும் படித்துக் கொண்டிருந்தார்கள்.

அன்று ஆயிசாவைக் காண மர்லியா வந்திருந்தாள். திருமணங்கள் பேசிக்கொடுப்பது தான் அவள் தொழில். பக்கத்து ஊர்க்காரியான அவள் ஆயிசா வீட்டுக்கு வந்தபோது மஸீயா உள்ளே தைத்துக் கொண்டிருந்தாள். நஜ்மா புத்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டிருந்தாள். வாசலில் மர்லியா ஆயிசாவோடு பேசுவது, அறைக்குள்ளிருந்த இருவரினதும் காதில் தெளிவாக விழுந்தது. அவர்கள் மஸீயாவைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனாலும் மஸீயாவோ நஜ்மாவோ அதில் கவனம் செலுத்தவில்லை. தங்கள் வேலைகளில்

மூழ்கியிருந்தார்கள். ஆயிசாவோடு அறைக்குள் வந்த மர்லியா மஸீயாவையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"கோபி கொஞ்சும் ஊத்துங்கொ..." நஜ்மாவைப் பணித்தாள் ஆயிசா. அவள் எழுந்து செல்ல மஸீயாவும் எழுந்து குசினிக்குள் சென்றாள்.

"ஆரன் தாத்தா..?" கேட்டபடி குசினிக்குள்ளிருந்து எட்டிப் பார்த்தாள் றிஸாயா.

"புரோக்கர் பொம்புள..." மெதுவாகக் கூறினாள் மஸீயா. நஜ்மா கோப்பியைக் கொண்டு வந்து மர்லியாவின் கையில் கொடுத்தாள். அவள் வாங்கிக் கொண்டாள்.

"ஒங்கட மகளுக மல்ல பஸந்து..." என்றாள் மர்லியா சிரித்தபடி. ஆயிசாவும் சிரித்துக்கொண்டாள்.

"தையல்... பின்னல் எல்லம் ஏலும்..." எனக்கூறியபடி மகள் தைத்த உடுப்புகளைக் காட்டினாள் ஆயிசா.

ஆயிசாவின் ஒன்றுவிட்ட சகோதரியான மர்யம், தன் ஆண்மக்கள் மூலமாக ஆயிசாவுக்கு அற்பசொற்ப உதவிகளைச் செய்து வந்தாள். அவள் தான் மர்லியாவை ஆயிசாவின் வீட்டுக்கு அனுப்பியிருந்தாள். மர்லியா வந்து விட்டுப் போய் இரண்டு நாட்களில் மர்யம் வந்தாள். ஆயிசா அவளை அன்போடு உபசரித்தாள். மகள் விடயமாக மர்யத்தின் புறத்திலிருந்து உதவிகள் கிட்டும் என்ற எதிர்பார்ப்பு அவள் மனதுள் இருந்தது. மகளின் வாழ்வு பற்றிய எண்ணமே அவளுள் நிறைந்திருந்தது. மகளின் அழகுக்குப் பொருத்தமான நல்ல தொழிலில் உள்ள ஒரு மருமகனை அவளது இதயம் வேண்டியது. அவளிடம் வசதிகள் இல்லாதபோதும் அவளது இதயத்தில் ஆசைகள் எழத்தான் செய்தன. அந்த ஆசைகள் அவளையும் மீறி வார்த்தைகளாக வெளிவந்தன. ஆனால் மர்யத்தின் மனம் அதை ஏற்கவில்லை. "எவனச் சரி பாத்துக் குடுத்துடு.." என்றாள். அவளது வார்த்தைகள் ஆயிசாவின் மனதை நோகச் செய்தாலும் அவள் காட்டிக் கொள்ளவில்லை. மர்யம் பேசியதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டிருந்தாள். 'மரியம் தாத்தாவ அசடாக்கிக் கொண்டால் ஒதவிக எடுக்கேலாப் போகும்...." என்பது அப்பேதைத் தாயின் எண்ணம்.

# 3.

**காலையிலேயே** வெளியில் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தான் அர்சாத். தாயார் கொண்டு வந்து கொடுத்த கோப்பியைக் குடித்து விட்டு தொழிலொன்றுக்குப் போவதாகத் தாயிடம் கூறிக்கொண்டு வீட்டிலிருந்து வெளியேறினான். தலையில் முக்காட்டோடு அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஆயிசா. பெண்மக்கள் நால்வரும் பின்னால் வந்து நின்றனர்.

"தொழிலொன்டுப் போறாம்... தண்ணிக் கோப்பைல வெத்திலயொண்டப் போட்டு வெச்ச ஏலாப்பெய்த்த...." பின்னால் திரும்பி அருகில் நின்ற மஸீயாவிடம் கூறினாள் ஆயிசா.

"போனத்துக்கு ... திரும்பி ஓடிவாரொண்டும்...." என்றாள் றிஸாயா. அதைக் கேட்டுக் களுக்'கெனச் சிரித்தாள் நஜ்மா. கூடவே நிஸ்ரினும் சிரித்தாள். அவர்களை முறைத்துப் பார்த்துவிட்டு உள்ளே சென்றாள் ஆயிசா.

அர்சாத் சென்று சில நாட்களில் திரும்பி வந்தான். மறுபடியும் அவன் தொட்டதற்கெல்லாம் மஸீயாவிடம் பணம் கேட்டுக்கேட்டு வாங்கத் தொடங்கினான். அவளிடம் பணம் வாங்குவது அவனுக்கும் உறுத்தலாகத்தான் இருந்தது. என்றாலும் வெளியுலகில் பலரோடும் பழகுவதால் அவனுக்குப் பணம் தேவைப்பட்டுக் கொண்டிருந்தது.

"சம்பாரிச்சால் தாரன்.." என்று சொல்லிச் சொல்லியே வாங்கிக் கொண்டிருந்தான். அவன் சம்பாதித்தால் கிடைக்கும்

என்ற நம்பிக்கையில் அல்ல, அவனது தேவைகளுக்கும் பணம் வேண்டுமே என்பதற்காக மஸீயாவும் இயன்றவரை அவனுக்குப் பொறுக்கிப் பொறுக்கிக் கொடுத்தாள்.

குடும்பவண்டி 'நொண்டி நடை' போட்டது. வீட்டுப் பொருளாதாரம், குமர்களின் சுமை, மகனின் வேலையற்ற நிலை, இவைகளால் இதயம் நைந்து, ஒடுங்கிப் போயிருந்தாள் ஆயிசா. அதனால் மர்யத்துக்கும் மற்ற உறவினர்க்கும் வளைந்து வளைந்து நல்ல முகம் காட்டிக் கொண்டிருந்தாள். அவள் குடும்பத்தாரிடம் தாழ்வதும், பணிவதும் அவளது பெண்மக்களுக்குப் பிடிக்க-வில்லை. அவர்கள் தாயைக் கடிந்து கொள்ளும் போதெல்லாம் "தேவப்படுகிய மனிசரெலியன்..." என்பாள் ஆயிசா.

ஆயிசாவின் வீட்டுக்கு இடையிடையே மர்லியா வந்து போனாள். ஏதோ ஓர் நப்பாசையில் தான் மர்லியாவை அவள் வரவழைத்துக் கொண்டிருந்தாளேயொழிய தனது இயலாமையை அவள் உணராமலில்லை. அன்று மர்லியா வந்த போது வீட்டில் அர்சாத் நின்றான். அவனைக் கண்டதன் பிறகு மர்லியாவின் மனதில் புதுப்புது யோசனைகள் தோன்றின. "அயிசாத்தா... மாத்திக்கட்டிய விசயமொண்டு கொண்டாறனே..." என்றாள். "அப்ப நல்லொரு விசயமாப் பாத்துப் கொண்டாங்கவே" மாற்றுவதென்றால் நல்லதொரு சம்பந்தம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை ஆயிசாவின் மனதில் முளைவிட்டது. மறுபடி மர்லியா வருவதை ஆவலோடு எதிர்பார்க்கத் தொடங்கினாள்.

திடுதிப்பென ஒருநாள் நாலைந்து பெண்களோடு வந்தாள் மர்லியா. வந்த பெண்களை வாசலில் உட்கார வைத்து விட்டுக் குசினியில் வந்து ஆயிசாவோடு ரகசியம் பேசினாள் மர்லியா. மஸீயாவுக்கு நல்லதொரு புடவையை உடுப்பாட்டி வந்த பெண்களுக்கு முன்னால் ஒரு வாங்கில் அவளை அமரவைத்-தார்கள். புரிந்தும் புரியாத உணர்வுகளோடு மனம் இலேசாகப் படபடக்கும் நிலையில் தரையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் மஸீயா.

வந்த பெண்களை உபசரித்தாள் ஆயிசா. சிறிது நேரத்தின் பிறகு "நாங்க பெய்த்து செல்லியனுப்பிய" என ஆயிசாவிடம் கூறிவிட்டு அவர்கள் சென்றனர். ஆயிசாவும் அவள் பெண்-

மக்களும் அவர்கள் என்ன முடிவைச் சொல்லுவார்களோ எனக் காத்திருந்தனர். மர்லியா முடிவோடு வந்தாள். முடிவைக் கேட்டபோது அசந்து போனாள் ஆயிசா.

தனிவீடும், நகையும், பணமும் தேடி அவள் எங்கு போவாள்? தொடர்ந்து சில நாட்கள் மௌனம் காத்தனர். மீண்டும் ஒருநாள் மர்லியா இரண்டு பெண்களைக் கூட்டிக்கொண்டு வந்தாள். அவர்களும் மஸீயாவைப் பார்த்து விட்டுப் போனார்கள். முடிவைச்சொல்லியனுப்புவதாகக் கூறிவிட்டுச் சென்றார்கள். தங்கள் முடிவைச் சொல்லியும் அனுப்பினார்கள். ஆனால் அவர்களது எதிர்பார்ப்புகள் ஆயிசாவால் அணுக முடியாதளவு எல்லை கடந்து நின்றன. தொடர்ந்தும் பல தடவைகள் பலரது கண்களுக்கு காட்சிப்பொருளாகி அலுப்படைந்தாள் மஸீயா. ஆயிசா அலுப்படைய வில்லை. தெரிந்த தெரிந்த தரகரை எல்லாம் தேடித்தேடி நடந்தாள்.

"இந்த மாதிரி அலைய வேணம் உம்மா" தாயைக் கடிந்து கொண்டாள் மஸீயா. றிஸாயாவுக்குக் கூட தாயின் அலைச்சல் பிடிக்கவில்லை. என்றாலும் மஸீயாவுக்கு நல்வாழ்வுகிட்ட வேண்டுமென்பதற்காக அவள் எதுவும் பேசவில்லை. குடும்ப பாரத்தைச் சுமப்பதில் தாய்க்கும் சகோதரிக்கும் துணைபுரிவதற்காக அவள் எடுத்த தொழில் முயற்சிகள் எதுவும் கைகூடவில்லை. எனினும் விடாது முயன்றாள் றிஸாயா.

"அண்டைக்கு எழுதிப்போட்ட வேல சரிவரல்லயோ மகள்."

"இல்ல" தாயின் கேள்விக்கு ஒரே வார்த்தையில் பதில் கூறிவிட்டு இருந்த இடத்தை விட்டு எழுந்து சென்றாள் றிஸாயா. தாயின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல அவளால் முடியாது. ஒன்றில் தாயின் முகம் வாடும், அல்லது அவள் பொய் சொல்ல வேண்டும்.

தூரத்தில் கேட்ட சைக்கிள் மணியொலி குசினியில் இருந்த றிஸாயாவை முன்வாசலுக்கு இழுத்து வந்தது. ஓடிவந்து வாசற்படியில் நின்றாள். தபாற்காரன் அவர்கள் வீட்டைக் கடந்து சென்று கொண்டிருந்தான். மெல்லியதொரு ஏமாற்றம் முகத்தில் படர திரும்பி உள்ளே சென்றாள் றிஸாயா.

"காய்தம் வந்தா..?" உள்ளேயிருந்து கேட்டாள் மஸீயா. "இல்ல" எனக்கூறியபடி அடுப்படிக்குள் நுழைந்தாள் றிஸாயா. உம்மாவினதும் தாத்தாவினதும் எதிர்பார்ப்பில் எழுகின்ற கேள்வியே அவளைக் கொல்லாமல் கொன்றது. அவளிடமிருந்து வெளிப்பட்ட நீண்டதொரு சுடுமூச்சு அடுப்பிள் நெருப்போடு சங்கமமானது.

# 4.

**வானத்திரையில்** சிந்திய வர்ணக்கலவைகளால் இயற்கை எழில் ஓவியம் தீட்டியது. முற்றத்தில் போடப்பட்டிருந்த கல்லின் மீதமர்ந்து அந்த அழகில் லயித்துப் போயிருந்த நிஸாயாவின் உள்ளத் திரையிலே எண்ணக்கலவைகள் அழகுக் கோலங்கள் காட்டின. மௌமாக அவளது இதயம் எங்கேயோ தாவித்தாவி மீண்டது. உடலில் மோதிச் செல்லும் மென்காற்று ஏதோ சேதி சொல்லிச் சென்றது. ஒரு வருடத்திற்கு முன் அவளுள் புகுந்து கொண்ட அந்த நினைவு. இப்போது முழுமையாக அவளை ஆட்கொண்டிருந்தது.

பள்ளிக்காலத்தின் இறுதிக்கட்டத்திலேயே அவள் வாழ்வில் அவன் நுழைந்தான். அவன் எதற்காக வந்தவனோ எதுவும் தெரியாது. பாடசாலைக்குப் போகும் போது மட்டுமே அவனைக் காண முடிந்தது. ஆரம்பத்தில் வெறுமையாகச் சந்தித்து மீண்ட இருசோடி விழிகளில் சலனம் தோன்ற ஆரம்பித்த போது அவளது இதயத்தடாகத்திலும் மெல்லலைகள் மெல்லப் பரவின. தொடர்ந்த நாட்களில் புன்முறுவலோடு ஒருவரையொருவர் கடந்து செல்ல. அவன் தென்படாது போனால், அவளது விழிகள் தேட வெள்ளைத்தாளாக இருந்த அவளது இதயத்தில் அவனது நினைவை அவளாகவே வரைந்து கொண்டாள்.

காலத்தின் கடுகதி வேகத்தில் அண்மி வந்த பரீட்சை அவர்களின் ஊமைச்சந்திப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தது. பரீட்சை துவங்கியதோடு அவளது நினைவில் அவன் ஞாபகம் மறைந்து

போனது. பரீட்சை முடிந்தபின் மீண்டும் அவனது நினைவு தலைதூக்கியது. மிகமிக அதிகமாக அவனை நினைத்த போதும் அந்த நினைப்பை மனதினுள்ளே புதைத்து வைத்தாள். ஒருநாள் அவனிடமிருந்து கடிதம் வந்தது. அவனது உள்ளத்தின் உணர்வுத் தேக்கங்கள் வரிவடிவங்களாக உடைப்பெடுத்திருந்தன. அந்த வரிவடிவங்கள் அவளிதயத்தில் ஆழப்பதிந்தன. அவனோடு நேருக்கு நேர் நின்று ஒரு வார்த்தை கூடப்பேசாத போதும், கற்பனையிலேயே அவளது இதயம் கனிந்தது. காலத்தின் ஓட்டத்தோடு சளைக்காது அவனது கடிதங்களும் வந்தன. அவளது பரீட்சையின் பெறுபேறுகளும் திருப்திகரமாக வந்தன. அவள் தொழில் முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கினாள். பரீட்சையில் சித்தியடைந்து விட்டால் தொழில் கிடைக்கும் என ஆயிசா நம்பினாள். 'இப்ப படிச்சி முடிஞ்சிட்ட, தொழில் கெடச்ச பொறகு...' எனப்பறபல வேலைத்திட்டங்களை அவளது எண்ணப் பொதியிலே சுமந்து கடிதங்களை எதிர்பார்க்கத் தொடங்கினாள் ஆயிசா.

"சாச்சீ.." என்றபடி வேலிக்கடவலைக் கடந்து கொண்டு ஆயிசாவீட்டு வளவினுள் நுழைந்தான் மர்யத்தின் இளைய மகன் இர்சாத். ஆயிசாவும் பெண்மக்களும் முற்றத்தில் நிற்பதைக் கண்டு அவனும் அங்கேயே நின்று கொண்டான். மர்யத்தின் மக்களில் அவன் தான் ஆயிசாவீட்டோடு மிக நெருக்கமாகப் பழகினான். தேவையான சில உதவிகளையும் செய்தான். வாரத்தில் ஒருநாளாவது அவன் ஆயிசா வீட்டுக்கு வரத் தவறமாட்டான். றிஸாயாவின் கடித எதிர்பார்ப்பு அவனுக்குத் தெரிந்திருந்தது.

"குடிச்ச எனசரி கொண்டரவா..?" கேட்டபடி வீட்டினுள் சென்றாள் மஸீயா...

"உள்ளுக்கு வா மகன்..." எனக் கூறியபடி அவளைத் தொடர்ந்து உள்ளே சென்றாள் ஆயிசா.

"இப்பிடி இரிச்சியன்..." என்றபடி அங்கிருந்த கல்லில் அமர்ந்தான் இர்சாத். ஆயிசா வீட்டு முற்றம் விசாலமானது. நல்ல காற்றோட்டமுள்ள இடம். றிஸாயாகூட முற்றத்திற்கு வந்தால். அக்கல்லில் தான் அமர்வாள்.

“புரோக்கர் பொம்புள வந்தோ றிஸாயா?” யோசனையோடு கேட்டான் இர்சாத்

“வாரதும் போறதும் தான்” என்றாள் றிஸாயா

“எல்லாம் சரியாக வரும்” கூறியபடி நஜ்மா கொண்டு வந்து கொடுத்த தேநீர்க்கோப்பையை வாங்கினான்.

“மஸீயா தச்ச இருந்துட்டா...?” நஜ்மாவைப் பார்த்தான். அவள் “ஓமெ”னத் தலையாட்டினாள். மஸீயா விடயத்தில் அவனும் முயன்று கொண்டுதானிருந்தான். அண்ணன்மாரைப் போல் பெரிதாக அல்லாவிட்டாலும் அவனாலும் இயன்றவரை உதவ முடிந்திருந்தது. அதனால் மஸீயாவுக்கு நல்லதொரு விடயம் அமைவதை அவனும் எதிர்பார்த்திருந்தான். ஆயிசாவின் வீட்டுக்கு வந்தபோதெல்லாம் அவன் மஸீயாவைப் பற்றிப் பேசுவான். அல்லது நஜ்மாவினதும் நிஸ்ரினினதும் படிப்பு பற்றிக் கேட்பான். அர்சாதுக்கில்லாத அக்கறை அவர்களில் அவனுக்கிருந்தது.

# 5.

**"வாங்கோ** ரிஸாயா" அழைத்தபடி உள்ளிருந்து வந்தாள் அமீர் ஹாஜியாரின் மனைவி ஸமீனா. சுமந்து சென்ற உடுப்புப் பர்ஸலை மேசை மீது வைத்து விட்டு அங்கிருந்த கதிரையில் அமர்ந்தாள் ரிஸாயா. கூடச் சென்ற நஜ்மாவும் அங்கே அமர்ந்து கொண்டாள்.

"மஸீயா வரல்லயா..?"

"இல்ல ஸமீனா தாத்தா.. ரெண்டு மூணு ஓடர் இரிச்சி

தாத்தா தச்சிய"

"மஸீயாவ மிச்சம்நாள் காணல்ல"

"காமண்டுக்குப் போக நானா வேணமென்டலியன்.." என்றாள் ரிஸாயா, ஸமீனாவின் கேள்விக்குப் பதிலாக.... மஸீயாவுக்குத் திருமணப்பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்த படியால் அவளை ஆடைத்தொழிற்சாலைக்குப் போக வேண்டா-மெனக் கூறிவிட்டான் அர்சாத். அதனால் அவள் உடைகளை வீட்டுக்குத் தருவித்துத் தைத்து அனுப்பினாள். வேறு ஓடர்களுக்கும் அவள் தைத்துக் கொண்டிருந்தாள்.

"ஆ.. நஜ்மா" என்ற படி அங்கே வந்தாள் ஹாஜியாரின் தங்கை சுரையா டீச்சர்.

"இப்ப வந்தா...?"

நஜ்மா தலையாட்டினாள்.

"ரெண்டு நாள் காணல்ல டீச்சர் லீவா?" நஜ்மா கேட்டாள்

"ஓ.. சரியான சோம்பர..... நான் போகல்ல.."

வெடுக்கெனத் திரும்பி அவளைப் பார்த்தாள் றிஸாயா. ஸமீனாவோடு கதைத்துக்கொண்டிருந்தவளை சுரையாவின் இவ்வார்த்தை திசைதிருப்பியது. அவள் பார்வை சுரையாவின் மீது பதிந்தது. செல்வச் செழிப்பான தோற்றம். அதில் அசதியோ, பலவீனமோ மருந்துக்குக் கூடக் காணப்படவில்லை. அவள் அதிகமதிகம் பாடசாலையில் காணாமற் போய் விடுவதாக நஜ்மா அடிக்கடி கூறுவாள். அப்போதெல்லாம் ஏதாவது காரணம் இருக்குமென அவள் நினைத்தாள். ஆனால், இப்போது தான் உண்மை புரிந்தது. 'லீவு அவசியம் தேவை தான். முக்கிய வேலைகள் இருந்தால், சுகவீனம் என்றால் அல்லது ஓய்வு கொஞ்சம் தேவையென்றால் லீவு எடுக்கலாம். சோம்பலுக்கும் லீவா?' என எண்ணி அவள் வியந்தாள். வீட்டுக்கு வந்த பிறகும் அவள் இதே சிந்தனையாகவே இருந்தாள்.

இன்னொரு தடவை வருடத்தின் இறுதிக்கட்டம் நெருங்கிக் கொண்டிருந்த வேளை. தைப்பதற்குத் துணிகள் கொண்டு வருவதற்காக ஒரு முற்பகல் வேளையில் அவள் ஆயிசாவோடு அங்கு சென்றாள். அப்போதும் சுரையா வீட்டிலிருந்தாள்.

"இண்டைக்கும் லீவா?" எனக்கேட்டாள் றிஸாயா.

"ஒருநாள் மிஞ்சி ஈந்த... அத இண்டைக்கு எடுத்த" எனப்பதிலளித்தாள் சுரையா

"மிஞ்சினத்தயெல்லம் எடுத்துடோணுமா?" விவரம் புரியாத வினாவொன்றை உதிர்த்தாள் ஆயிசா.

"ஈச்சிய லீவு தானே.. நான் எல்லம் எடுக்கிய

என்துக்கன் உடுகிய.." என்றாள் சுரையா. உடனேயே... "உம்மா வெளப்பமில்லாமக் கேக்கிய..." என்றாள் றிஸாயா. அவள் படித்தபோது வெளியில் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. அதற்கு அவர்களது பொருளாதாரம் இடந்தரவில்லை. அவள் போலவே

நஜ்மாவும் வேறு வகுப்புகளுக்குச் செல்லாது பாடசாலையில் படிப்பதையே நம்பியிருந்தாள். இந்த சுரையா போன்றவர்களால் தங்களைப் போன்ற வசதியற்றவர்களின் கல்வி என்னாகும் என எண்ணிப்பார்த்தாள் றிஸாயா. அவள் வீட்டுவேலைகளில் நஜ்மாவை அதிகம் பங்கு கொள்ள விடாது தானே எல்லாம் செய்தாள்.

கடலுள் தள்ளாடும் சுமைகொண்ட ஓடம்போல் வீட்டுச் செலவுகளில் மூழ்கிப்போனாள் மஸீயா

"மஸீயா கெடச்சிய சல்லியால காசு முட்டீல கொஞ்சுத்த போட்டு வெய்" என ஆயிசா அடிக்கடி கூறுவாள். ஆனால் அவ்வாறு போட்டு வைப்பதற்கு வாய்ப்பில்லாமல் வீட்டுச் செலவுகள் மேலோங்கி நிற்கும். இது ஆயிசாவுக்குத் தெரியும் என்றாலும் நான்கு பெண்பிள்ளைகள் இருக்கும் இடத்தில் 'சேமிப்பு' என எதுவும் இல்லையே என்ற ஆதங்கத்தில் அவள் இவ்வாறு கூறிக்கொண்டிருந்தாள்.

"எப்பிடியன் உம்மா சேக்கிய? எடுக்கிய சல்லி ஒண்டுக்குமே போதா" மஸீயா இவ்வாறு கூறினால் தான் ஆயிசா வாய்பொத்துவாள்.

சில நாட்களில் மஸீயா இரவில் தைத்துக் கொண்டிருக்கும்போது அர்சாத் முணுமுணுப்பான்.

"சத்தமில்லாமத் தை..." என இரைவான். அவள் உடனே தைப்பதை நிறுத்தி விட்டு எழுந்து விடுவாள். இவன் பொறுப்பான ஒரு சகோதரனாயிருந்தால் தான் இரவு விழித்து ஏன் தைக்க வேண்டும்' என எண்ணிக் கவலைப்படுவாள்.

வயது ஏறஏற இளையவள் நிஸ்ரினின் மனதிலும் அவர்களது ஏழ்மை தாக்கத்தை ஏற்படுத்தத் துவங்கியிருந்தது. தன் சக நண்பியரின் நிலைமையும் தனது இயலாமையும் அவளுள் தாழ்வுணர்வை ஏற்படுத்தியிருந்தது.

அன்றும் வகுப்புத்தோழிகள் வீட்டுக்கு வந்தபோது அவள் தடுமாற்றம் அடைந்தாள்.

"புட்டுவமொண்டாலும் இல்ல" என அவள் முணுமுணுத்த-போது "பங்குல இருப்பாட்டு" எனக் கூறிவிட்டு உள்ளே சென்றாள் றிஸாயா. பழைய வாங்கும் கயிற்றுக் கட்டிலும் தான், அவர்களது முன்வாசலில் இருந்தன. றிஸாயாவுக்கு இதுவொன்றும் புதிதல்ல. அவளும் நிஸ்ரினின் வயதை..... வகுப்பை.... அனுபவத்தைக் கடந்து வந்தவள் தான்.

இப்போது கூட, தெரிந்தவர் யாராவது தம் வீட்டுக்கு வந்து விட்டால் அவள் மனம் கூனிப்போவாள்.

# 6.

**தலையைக்** கைகளால் அழுத்தியபடி படுத்திருந்தாள் மஸீயா. ஆயிசா அவள் அருகில் அமர்ந்து அவளது நெற்றியில் எண்ணெய் தேயத்துக் கொண்டிருந்தாள்.

"வேறெங்கயன் நோவு.." தாய் பரிவோடு கேட்டாள் "இங்க இங்கயெல்லம்" தோட்பட்டை முதுகு கால் எல்லாம் தொட்டுக் காட்டினாள் மஸீயா.

"கொஞ்சும் படுத்துட்டெழும்பு.." கூறியபடி மகளின் முதுகை அன்போடு தடவினாள் ஆயிசா. உடல் அயர்ச்சி அவளைக் கட்டிலை விட்டு எழ விடாது நீண்ட நேரம் தூங்க வைத்தது. அவள் கண் விழித்தபோது றிஸாயா தைத்துக் கொண்டிருந்தாள். அவசரமாக ஏழ முயன்றவளை "எழும்ப வேணம்" எனத் தடுத்தாள் றிஸாயா

தங்கை தடுத்தும் கூட எழுந்து சென்றவள் முகத்தைக் கழுவி முன்றானையால் துடைத்தபடி வந்தாள்.

"எழும்பு றிஸாயா.."

"நான் தச்சியனே.."

"நீயும் தையல்காரியாகீட வேணம்.." கூறியபடி தொடர்ந்து தைக்க விடாமல் அவளது கைகளைப் பிடித்தாள் மஸீயா. தன் சகோதரிகளைப் பற்றி அவளுள் விரிந்த கனவுக்கோலம் மிக விசாலமானது. றிஸாயா தையல்காரியாகி சம்பாதிக்கக்கூடாது

கல்வித்துறையோடு தொடர்புள்ள ஒரு தொழிலைச் செய்ய வேண்டும் என மஸீயா ஆசைப்பட்டாள். தன் தங்கைமார் கல்வி கற்று உயரவேண்டும், வாழ்வில் வளம் காணவேண்டும் என அவள் கனவு கண்டாள். அவளது கல்வி இடைநிறுத்தப்பட்ட போது அவளது மனம் தாக்கப்படவில்லை. துன்பத்தை உணர முடியாத பருவம் அது. அப்போது தையல் தைக்கும் ஆசையில் அவள் மூழ்கியிருந்தாள். தொடர்ச்சியாக அழுத்திய வறுமைச் சுமையே அவளுக்குப் பொறுப்புக்களை உணர்த்தியது. மனதில் துடிப்புடன் அவசரம் அவசரமாக உழைத்து தேவைகளை நிறைவேற்றி ஏதோவோர் விடிவுக்காய் இன்னுமே அவள் இயங்கிக் கொண்டிருக்கின்றாள்.

ஆயிசா பெண்பிள்ளைகளோடு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது, மர்யம் தன் இரண்டாவது மகன் சாஜஹானிற்குப் பெண் பார்த்துத் திரிந்தாள். ஆயிசாவின் குமர்ப்பாரம் ஒன்றாவது குறைத்தபிறகு மர்யத்தின் மகனுக்குப் பெண் எடுக்கலாம் தானேயென மர்லியா நினைத்துக் கொண்டாள். ஆனால் மர்யம் அவ்வாறு நினைக்கவில்லை. கொழுத்த சீதனம், வீடு என வசதியான இடத்திலிருந்து நஸீராவைத் தேடியெடுத்தாள். மர்யம் வீட்டுக்கல்யாணம் ஆடம்பரமாக நடந்தபோதிலும் ஆயிசாவும் மகனும் மாத்திரமே அதில் கலந்து கொண்டனர். ஆயிசாவின் பெண்மக்கள் கல்யாணத்திற்கு வராததற்கு மர்யம் குறை கூறினாள்.

கல்யாண சந்தடிகள் ஓய்ந்து

"இப்பதான் வரக்கெடச்ச.." எனக் கூறியபடி ஆயிசா வீட்டில் நுழைந்தான் இர்சாத்

"அடுத்த மாப்புள இவரு..... நீங்க எத்தின லச்சமன் எடுக்கிய..?" துடுக்காகக் கேட்டாள் நஜ்மா.

"நான் எடுக்கியல்ல நஜ்மா" என்றான் இர்சாத் அமைதியாக.

"பொண்ணட வாப்பா ஒரு மகளுக்குக் குடுத்த சீதனத்துக்கு எங்கடுட்டுல நாலு பேரயும் குடுக்கேலும்" என்றாள் றிஸாயா.

"நஜ்மா அந்தத் தேங்காவக் கொஞ்சும் திருவு மகள்" என்றபடி தேநீர்க் கோப்பையோடு வந்தாள் ஆயிசா.

"சாச்சி"

தேநீரை இர்சாதிடம் கொடுத்துவிட்டு சுவரோரமாகத் தரையில் அமர்ந்தாள் ஆயிசா.

"இர்சாத் நானா இப்ப கொழுத்து" என்றபடி எழுந்து சென்றாள் நஜ்மா. அவளைப் பார்த்துப் புன்னகைத்து விட்டுத் தேநீரை உறிஞ்சினான் இர்சாத்.

"சாச்சி யோசிச்ச வேணம்....." சொற்ப நேரம் அங்கு நிலவிய அமைதியைக் கலைத்தான் இர்சாத்.

"இல்ல மகன்"

"இங்கயப்பத்தி நானாங்க பேசிக்கொண்ட. எனசரி விசயம் சரிவந்துட்டால் எடுத்துச் செய்தொண்டும்.."

"அல்லா அதுகளுக்கு ஒண்டுக்கு ஆயிரமாகக் குடுக்கட்டும்.."

அவள் கைகளை ஏந்துகிறாள். அவளது மனதின் நெகிழ்வு குரலில் தெரிகிறது.

மர்யத்தின் மக்களில் அவள் அன்பும் மதிப்பும் வைத்திருந்தாள். மர்யத்தை விட நல்லவர்கள் அவர்கள்.... அவர்கள் தன் குமர்களைக் கரைசேர்க்க உதவுவார்கள் என அவளும் நம்பினாள். இருந்தாலும் மூன்று குமர்களைக் கரைசேர்க்கும் பாரம் லேசுப்பட்டதா? எண்ணிப் பெருமூச்சு விட்டாள் ஆயிசா.

"சின்னவள உட்டாலும் மூணு கொமரலியன் மகன்" என்றாள்.

"மூணு கொமருக்கும் மூணு பேர் எங்கசரி பொறந்து தானே இரிச்சும்.... இல்லயா ரிஸாயா" என்றான் இர்சாத்.

ரிஸாயா புன்னகைத்தபடி" தேட வேணுமே" என்றாள்

"தேடுவோம்" என அவன் கூறும்போதே

"என்தியன் இர்சாத் நானா தேடப்போற..?" என்றபடி உள்ளேயிருந்து வந்தாள் நஜ்மா. வந்தவள் ஆயிசாவுக்குப் பக்கத்தில் தரையில் அமர்ந்து கொண்டாள்.

இர்சாத் எதுவும் பேசவில்லை. மென்சிரிப்போடு அவளையே பார்த்தபடியிருந்தான்.

# 7.

**காலம்** மாதங்களை உருட்டிக் கொண்டிருந்தது. மஸீயாவைப் பெண்பார்க்க நான்கு பெண்கள் வந்திருந்தனர். அவர்களிள் ஒருத்தி ஐந்தாறு வயதுடைய சிறுமியொருத்தியைக் கையில் பிடித்திருந்தாள். அவள் மஸீயாவைக் கண்டதும்

"மஸீயாவா?" எனக்கேட்ட போது மஸீயா அவளை உற்றுப்பார்த்தாள். அவள் பழக்கமானவள் போல இருந்தாள்.

"என்னத் தெரியாதா?" அவள் மீண்டும் கேட்டபோது 'தெரியும்' என்பதுபோல மஸீயா தலையசைத்தாள். "ஒனக்கெப்பிடியன் தெரீம்? எனக்கேட்டாள் வந்தவர்களில் வயதானவள்.

"என்னோட படிச்ச..... இவ ஏண்ட வயசு" என்றாள் மற்றவள். "இது ஏண்ட மூத்த புள்ள" என்றாள் மீண்டும் அவள் அந்தச் சிறுமியைக் காட்டி. வயதானவளின் முகம் இறுகிப்போனது. மஸீயாவின் முகத்திலும் சட்டென ஒளி குன்றியது.

"நீங்க சிறிசிலேயே முடிச்சீச்சுமே" என்றாள் றிஸாயா குறுக்கிட்டு.

"வாப்போவ்.. பய்னெட்டு வயசிலேயே என்னக் குடுத்திட்ட" என்றாள் அவள்

"எனக்கே இப்ப இருவத்துரெண்டாகிய. பய்னெட்டுல நாங்க படிச்சிய.." என்றாள் றிஸாயா சிரித்தபடி. மற்றவளின் முகத்தில் கோணல் மாணல்கள் விழுந்தன. "இவக்கு இருவத்தஞ்சி.."

என்றாள் ஆயிசா தணிந்த குரலில். வழமையான உபசாரங்கள் முடிந்து அவர்கள் போவதற்காக எழுந்தனர்.

அவர்களில் ஒருத்தி.. "பெய்த்துச் செல்லியனுப்பிய" என்றாள். வயதானவள் ஒன்றும் பேசாது போனாள். அவர்கள் முற்றத்தைக் கடந்த போது "பொல்லாத கெழவி" என்றாள் நஜ்மா. "ஒண்டும் சொல்லியனுப்பத் தேவில்ல...." என முணுமுணுத்தாள் றிஸாயா.

"மஸீயா தாத்தாவப் பாக்கவந்த ஆள்களப் பாக்காட்டி" என நிஸ்ரின் கூற" கட்டயும் நெட்டயும் கறுப்பும்.." எனத் தொடர்ந்தாள் நஜ்மா.

"இந்த விசயம் வேணம் உம்மா" என்றாள் நிஸ்ரின். அலுப்போடு எழுந்து சென்ற மஸீயா

"வேலயெல்லம் அப்பிடியே" என்றபடி தையல்மெசினுக்கு முன்போய் அமர்ந்தாள்.

அதன் பிறகும் பல தடவைகள் பலர் வந்தனர் அவளைப் பார்க்க. அவள் தன் பாட்டில் தன் வேலையில் இருந்துவிட்டாள். உடுத்திக்கொண்டு அவர்கள் முன் காட்சிப்பொருளாக வரவில்லை. ஆயிசாவும் அவளை வற்புறுத்தவில்லை.

நாட்கள் உருண்டு புரண்டு வாரங்களாகின. கொழும்பில் துணிக்கடையொன்றில் சேர்ந்த அர்சாத் நாலைந்து நாட்களில் திரும்பி வந்தான். அவனைக் கண்டதும்

"பழய குருடி கதவத் தொறவு தான்" எனத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள் ஆயிசா. ஆனால் அவன் மறுபடி போவதற்கே வந்ததாகக் கூறியபோது அவள் ஆறுதல் அடைந்தாள்.

"ரெண்டு நாள்ள நான் போற உம்மா" என அர்சாத் கூறியபோது அவனுக்கு விருப்பமான உணவுகளைச் சிரமம் பாராது செய்து கொடுத்தாள் ஆயிசா.

"இப்பிடியெல்லாம் செஞ்சால் நானா போறல்ல உம்மா" என்றாள் றிஸாயா. ஆனால், "இல்லாட்டி எனக்கு ஏரணம் எறங்கியல்ல" எனக்கூறிவிட்டாள் ஆயிசா. அர்சாத்தைத் தங்கள்

கடைக்கு வரும்படி மர்யத்தின் மக்கள் எவ்வளவோ வற்புறுத்தினார்கள். ஆனால் அவன் மறுத்துவிட்டான். அவன் அவர்களது கடையில் நிற்பதை ஆயிசாவும் விரும்பவில்லை. அர்சாத் கொழும்புக்குச் சென்று விட்டான்.

அன்று...

ஆயிசாவின் வீட்டுக்குத் தன் புதிய மருமகளைக் கூட்டி வந்திருந்தாள் மர்யம். அவர்களை நல்லபடி உபசரித்து கலகலப்பாகப் பேசினார்கள் ஆயிசாவும் மக்களும். மருமகளின் அங்கங்களில் தங்கங்கள் பளபளத்தன. அவளின் ஒவ்வொரு அசைவிலும் வளையல்கள் கலகலத்தன. காதுகளில் பெரிதாகத் தொங்கியவை அவளது தலையசைப்பில் மின்னல் ஜாலம் காட்டின. மர்யத்தின் முகத்திலும் பெருமை கனத்தது. அவளது மருமகளையே பார்த்துக்கொண்டிருந்த நிஸ்ரின் அவளருகில் நெருங்கி அவளது காதில் தொங்கியதைப் பிடித்துப் பார்த்தாள். மர்யத்தின் பார்வை அவளை முறைத்தது. இதனை அவதானித்த றிஸாயா, தங்கையை அழுத்தமாகக் கிள்ளி மெல்ல உள்ளே தள்ளினாள். மர்யமும் மருமகளும் போன பிறகும் கூட அவளது மருமகள் அணிந்திருந்த நகைகளையே நினைத்துக் கொண்டிருந்தாள் ஆயிசா.

குசினிக்கதவில் நீட்டிக் கொண்டிருந்த ஆணி நிஸ்ரினின் கையில் குத்தி இரத்தம் கசிந்தது.

"ஆணியக் குத்திக் கொண்டோ..... பார்வ கேள்வி இல்லயோ?" ஆயிசா மகளைக் கடிந்து கொண்டாள்.

"இந்தக் கதவுலேம் சாரியோ..?" என்றாள் அங்கே வந்த றிஸாயா. "வா எண்ண பூசியு  ட.." எனக்கூறியபடி நிஸ்ரினை இழுத்துக் கொண்டு உள்ளே போனாள் ஆயிசா. சுத்தியலை எடுத்து வந்து நீட்டிக்கொண்டிருந்த ஆணியைத் தட்டி வளைத்தாள் நஜ்மா. ஒவ்வொரு தட்டலுக்கும் கதவு கழன்று விடப் போவது போல் ஆட்டம் கண்டது.

"ஆருசரி வந்து பாக்கோணும் எங்கட கதவ.." என்றாள் றிஸாயா. பலகை உடைந்து...... உடைந்த இடங்களில் கோணியும் பழைய துண்டியும் சேர்ந்து கதவாக அமைந்திருந்தது.

“இந்தூட்டுல பொறுமதியானதுக்கு உள்ளது ஊட்டு மனிசதான்..” என்றாள் நஜ்மா.

“மெய்தான்” என்றாள் றிஸாயா

வீட்டில் பெறுமதியானவை தாங்கள் தாம். ஆனால் இருக்குமிடம் பள்ளமல்லவா. பள்ளத்தைக் கீழ்நோக்கித்தான் பார்ப்பார்கள். அஸ்ரான்..... அவன் தான் அவள் இதயத்தில் உள்ளவன். அவனது குடும்பமும் அவ்வாறு தானே நோக்கு-வார்கள்? எண்ணச்சுழலில் சிக்கித் தவித்தாள் றிஸாயா.

# 8.

**முற்றத்துக்** கல்லில் அமர்ந்து கல்லாய்ச் சமைந்திருந்தாள் றிஸாயா. மரக்கிளைகளினூடே தோன்றிய மாலைச் சூரியனின் சிலந்தி வலைப்பின்னல் அவள் மீது தங்க முலாம் தெளித்துக் கொண்டிருந்தது. அஸ்தமனச்சூரியனின் அழகில் அதிகம் மயங்கிப் போகிறவள் அவள். செக்கர் வானின் வண்ணங்களில் அவளுள் புதுப்புது எண்ணங்கள் உயிர்த்தன. அன்று காலையில் வந்திருந்த அவனது கடிதம். அதன் இனிய வரிவடிவங்கள். றிஸா.... இனிய றிஸா..... என அவளுள் ரீங்கரித்த அவனது குரல் எல்லாம் மென்தென்றலின் தழுவலாய் அவள் இதயத்தை நிறைக்க உள்ளம் அவன் பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தது.

"றிஸாயா.." என்ற சகோதரியின் அழைப்பில் திடுக்கிட்டெழுந்தாள் அவள்.

"தாத்தா..."

"இந்த பொத்தனப் புடிச்சால் மஹ்ருபுக்கு பாங்கு செல்ல முந்தி முடிவிச்சிடேலும்..." என்றாள் மஸீயா. றிஸாயா உடுப்புகளுக்கு பொத்தான் பிடிக்க.... மஸீயா பரபரவெனத் தைத்தாள். மஃரிப் தொழுகைக்கான பாங்கொலிகேட்ட போது, அவர்கள் இருவரும் தம் வேலையை நிறுத்தினர். மஃரிப் தொழுது விட்டு வேலையைத் தொடர்ந்தாள் மஸீயா... றிஸாயாவும் அவளுக்கு உதவியானாள்.

நானா வீட்டிலில்லாத படியால் இரவு ஒரு மணி வரை விழித்திருந்து தைத்தாள் மஸீயா. ஹஜ்பெருநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அயலில் உள்ளவர்களும் பெருநாள் உடுப்புகள் தைப்பதற்கு அவளிடம் கொடுத்திருந்தனர். அதனால் இரவு பகல் பாராது இயங்கினாள் மஸீயா.

ஒரு வாரம் உருண்டது.

அன்று ஆயிசாவின் வீட்டுக்கு சாஜஹான் வந்திருந்தான். அவன் திருமணம் முடித்து முதல் வரும் பெருநாள். ஆதலால் அவன் ஆயிசாவின் குடும்பத்துக்குப் பெருநாள் உடுப்புகள் கொண்டு வந்தான். ஆயிசா அதனை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டாள்.

"அடுத்த வரிசம் இர்சாத் நானாட புதிய பெருநாளா...?" இர்சாத் வந்த போது கேட்டாள் நிஸ்ரின்.

"இப்ப அத நெனச்சுமில்ல." எனக் கூறிய இர்சாதிடம்

"என்துக்கன் நெனச்சுமில்ல...?" எனக்கேட்டாள் நஜ்மா

"மஸீயாடயும் நிஸாயாடயும் விசயமுக முடியோணும்..." என்று கூறிச் சிரித்தான் இர்சாத். விழிகள் விரிய... இமைக்கவும் மறந்து... அவனையே பார்த்திருந்தாள் நஜ்மா. இந்தக் குடும்பத்தில் இவனுக்கு இவ்வளவு அக்கறையா? வினாவெழுப்பியது அவளது உள்ளம். நாட்களின் தேக்கம் வாரங்களாகி வாரங்கள் மாதங்களின் நதியோட்டமாயின.

நஜ்மா உயர்தரப் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்தாள். பாடசாலைக்குப் போவதும் வீட்டில் படிப்பதுமாக அவளது நேரம் கழிந்தது.

அன்று பாடசாலை விட்டு அவள் நிஸ்ரினோடு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது...... அவர்களுக்கருகில் வந்து நின்றது மர்யத்தின் வீட்டு வாகனம். அதை ஓட்டி வந்திருந்தான் இர்சாத். அவன் அவர்களை வேனில் ஏறும்படி சைகை செய்ய....

"வேணம்..... நாங்க நடந்து போற...." எனக்கூறிவிட்டு அவர்களிருவரும் மேலே நடக்க முனைந்த போது...

"ஏய் நஜ்மா ஏறு.." எனக்காரமாகக் கத்தினான் இர்சாத். திடுக்கிட்டு நின்றாள் நஜ்மா. மறுகணம்...... அவன் வேனின் கதவைத் திறந்து விட எதுவும் பேசாது இருவரும் ஏறிக்கொண்டனர். அவன் அமைதியாக வேனை ஓட்டினான். யாரும் பேசவில்லை. அவர்களை வீட்டுக்கு முன்னால் இறக்கி விட்டபோது திரும்பி அவனை நோக்கினாள் நஜ்மா. அவனது இதழ்களில் மெல்லிய-தொரு புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. இதை றிஸாயாவிடம் கூறினாள் நஜ்மா.

"நாங்க ஏலாண்டவும் இர்சாத் நானாக்குக் கோவம் பெய்த்த..." என்றாள் நிஸ்ரின்.

"பாவம் இர்சாத்..." என்றாள் றிஸாயா.

அவளும் இர்சாத்தும் ஒரே வயதுடையவர்கள். இருவேறு பாடசாலைகளில் சமவகுப்புகளில் கற்றவர்கள். அதனால் இருவரும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதை இன்று வரை நிறுத்தவில்லை. படிப்பு முடிந்து அவன் தந்தையோடும் சகோதரனோடும் வியாபாரத்தில் இணைந்தான். றிஸாயா தொழில் தேடிக்கொண்டிருக்கின்றாள்.

அவளது உள்ளக்கிடக்கைகளை அறிந்து அவளுக்கு அவன் உதவ முயன்று கொண்டிருந்தான்.

அவளது அஸ்ரானைப் பற்றி. அவன் தேடிப்பார்த்து

திருப்தியடைந்தான். ஆனால் அவன் உயர்ந்த இடத்தில் இருந்தான். அவன் றிஸாயா விடயத்தில் எந்தளவுக்குத் துணிந்து வருவான் என்பதை இர்சாதால் எடைபோட முடியாதிருந்தது.

தனது பாடசாலை வாழ்க்கை முடியும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருப்பதை நினைத்த போது நஜ்மாவுக்குக் கவலையாக இருந்தது. ஓடுகின்ற இந்த நாட்கள் ஓடி முடிந்து விட்டால் தான் வீட்டுக்குள் அடங்க வேண்டியது தான் என எண்ணியவளின் எண்ணத்திரையிலே பாடப்புத்தகங்கள் நண்பிகள் கேலிப்-பேச்சுகள், விவாதமேடைகள், போட்டிகள் என வரிசை வரிசை-யாகக் காட்சிகள் ஓடின. இன்னும் சில நாட்களில் இவை-யெல்லாம் ஓடுகின்ற ரயிலின் காட்சிகளாக மறைந்து விடப்

போகின்றன என எண்ணியவள் சர்மிளா டீச்சரை நினைத்துக் கொண்டாள். தினமும் பூக்கும் காலைநேரப் பூவாக சிரித்த முகத்தோடு மாணவியரை எதிர்கொள்ளும் அந்த எழில் முகம், அதையும் காண முடியாமல் போகப்போவது, பெரும் இழப்பாகத் தோன்றியது அவளுக்கு. இந்த இழப்புகளைச் சமாளிப்பது எவ்வாறு? எனத்தடுமாறியவள்.

'எல்லம் உட்டுட்டுப் படிச்சோம்...' என மன ஓடத்தைத் திசைதிருப்பினாள். அவள் படிப்பதில் மூழ்கிப்போக றிஸாயா வேலைசெய்து களைத்துப்போனாள். மஸீயா தைத்துக் களைத்தாள். வீட்டு வேலைகளில் நிஸ்ரினின் உதவியும் தேவைப்பட்டது. அவள் முணுமுணுப்போடு அரைகுறையாக எதையாவது செய்வாள். சில வேளைகளில் மறுப்பாள். இதனால் றிஸாயாவிடம் அவள் அதிகமதிகம் ஏச்சுக்கேட்டாள். அன்றும் அப்படித்தான்.

"அந்தப் பிங்கான் கோப்பைகளக் கழுகு நிஸ்ரின்..." என்றாள் றிஸாயா..... சமையல் செய்து முடித்த களைப்போடு "நானும் படிச்சோணும்..." எனச் சிணுங்கினாள் நிஸ்ரின்.

"இப்ப படிச்சிய நேரமோ..." எனக்கேட்ட றிஸாயாவிடம் "அவள்டடச் செல்லாத..." எனக் கூறியபடி வந்த ஆயிசா. பீங்கான் கோப்பைகளைக் கழுவத் தொடங்கினாள். நிஸ்ரினை ஏசத் தொடங்கினாள் றிஸாயா.

அந்தச் சத்தத்தில் நஜ்மாவும் மஸீயாவும் கூட எழுந்து வந்தனர். "உடுங்கொ உம்மா..." எனக் கூறியபடி தாயின் வேலையைப் பொறுப்பேற்றாள் மஸீயா.

# 9.

**பள்ளத்தை** நோக்கிய நீரென நாட்கள் பாய்ந்தோடின. நஜ்மாவின் பரீட்சையும் முடிந்தது. பரீட்சையைத் திருப்திகரமாக எழுதி விட்ட நிறைவோடு அவள் வீட்டு வேலைகளில் ஈடுபட்டாள். இப்போது மஸீயாவும் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். தன் உழைப்பின் மூலம் அவள் பெற்ற ஊதியத்தைக் குடும்பத்தின் ஒவ்வொரு தேவைக்குமாகப் பங்குபங்காகப் பிரித்துப் பகிர்ந்தவள்..... தன் தேவைகள் என எதையும் கொள்ளாது, தன் மூச்சுக்களையெல்லாம் உழைப்பதில் கழித்தவள், தங்கையின் படிப்புச் செலவு குறைந்ததில் நிம்மதியடைந்தாள்.

அவளது நிம்மதி றிஸாயாவுக்கும் மன ஆறுதலைத் தந்தது. நஜ்மாவும் வீட்டுவேலைகளில் வரிந்து கட்டிக் கொண்டு நின்றாள். சமையல் செய்தாள், முற்றம் பெருக்கினாள், விறகு பிளந்தாள், தனக்குப் பெரியதொரு ஓய்வு கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் வீட்டில் சுறுசுறுப்பாக வளைய வந்தாள்.

அர்சாத் வீட்டுக்கனுப்பிய பணத்தில் நாலைந்து கதிரைகளை வாங்கிப்போட்டிருந்தார்கள். கயிற்றுக் கட்டிலும் வாங்கும் வாசலிலிருந்து விடைபெற்றிருந்தன. பூச்சாடியும் வைக்கப்பட்டு, முன்வாசல் நேர்த்தியாக இருந்தது.

வாசலில் றிஸாயா இர்சாத்தோடு பேசிக்கொண்டிருந்தாள். குசினியிலிருந்து வந்த நஜ்மா இர்சாதின் குரல் கேட்டு வாசலுக்கு வரக்காலெடுத்தவள்..... அப்படியே பலகைச் சுவரில்..... சாய்ந்து

கல்லாய்ச் சமைந்தாள். வாசலில் கேட்ட வார்த்தைகள் ஒருகணம் அவளைத் திடுக்கிடச் செய்தன.

"நான்.. நஜ்மாவத்தான் முடிச்சிய..."

"ரெண்டு வரிசமாக நான் விரும்பிக்கொண்டீச்சிய..."

"..............."

"இத... இப்ப... ஒத்தர்டயும் செல்ல வேணம்..."

"................"

நஜ்மா விக்கித்து நின்றாள். கனமாக அவள் இதயத்துள் பாய்ந்த ஏதோ ஒன்று உடல் முழுதும் சில்லிட்டுப் பரவியது. கால்களிலும் இரு கைகளிலும் சிறு நடுக்கம். வாசலில் எதிர்க்குரல் எழவில்லை. றிஸாயா ஊமையாகி விட்டிருந்தாள். நல்ல வேளை நடுவில் திரைச்சீலை மறைத்திருந்தது. நஜ்மா மெல்ல அவ்விடத்தை விட்டகன்றாள். உள்ளே மஸீயா மேசையில் துணிகளைப் போட்டு அளந்து கொண்டும் வெட்டிக் கொண்டுமிருந்தாள். மேசைக்குப் பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டாள் நஜ்மா. அவள் உள்ளம் போர்க்களமாகியிருந்தது. தொடர்ந்து வந்த நாட்களில்... அவள் இரவில் தூக்கம் துறந்தாள். நின்ற இடம் இருந்த இடத்திலெல்லாம் அவளுள் இந்நினைவே இடம் கொள்ளத் துவங்கியது.

"இர்சாத் நானாக்கு இப்பிடியொரு எண்ணம் ஈந்தீச்சி...."

என எண்ணியெண்ணி மனம் கனிந்தாள்... அந்த நினைப்பிலோர் இனிமையும் கலந்திருந்தது. கணத்துக்குக்கணம். அவளையறியாமலேயே அவள் மனம் அவன் பால் இழுபட்டுக் கொண்டிருந்தது. அவள் மீண்டும் வந்தபோது, அவன் முன்னால் செல்லத் தயங்கியவள் வேலைச்சாட்டில் குசினிக்குள்ளேயே நின்று விட்டாள். இப்படி எந்தநாளும் ஒளிந்திருந்தால் இர்சாத்துக்கும் றிஸாயாவுக்கும் மட்டுமல்ல வீட்டில் மற்றவர்களுக்கும் விளங்கிப் போய்விடும் என்பதை அவள் அறிந்திருந்தாள். இரண்டு வருடங்களாகத் தன் எண்ணத்தை மூடி மறைத்து இர்சாத் எவ்வளவு இயல்பாகப் பழகுகிறான். தன்னாலும் அவ்வாறிருக்க ஏன் முடியாது என எண்ணியவள்...... வெகு பிரயத்தனப்பட்டு அவனோடு சில வார்த்தைகள் பேசினாள். என்றாலும் அவனோடு

நேருக்கு நேர் நின்று பேசத்திறனிழந்தாள். அவன் எதிரிலே போய் நின்று அவனது பார்வையைத் தாக்குப் பிடிக்கும் சக்தியை அவள் இழந்தாள். அவன் பார்வை பட முற்றத்தில் நடமாடினாள். வாசலுக்கு வந்து போனாள். அவன் வாசலில் ரிஸாயாவோடு பேசிக்கொண்டிருந்தாலும் அப்பாலும் இப்பாலும் அவள் தென்படும் இடமெல்லாம் அவனது விழிகளும் அலைந்தன. நாளடைவில் அவன் தங்கள் வீட்டுக்கு வருவதில் தான் அவளது சந்தோசம் இருந்தது. அவளது இதயமும் அவனைக் காணத் தவித்தது.

"இர்சாத் எங்களுக்கெப்பிடியன் நானாவாகிய.....?"

தைத்துக் கொண்டிருந்த மஸீயாவிடம் கேட்டாள் ரிஸாயா

"எங்கட உம்மும்மாட உம்மாவும் அவங்கட உம்மும்மாட உம்மாவும் தாத்தாவும் தங்கச்சியுமாம்" தையல் மெசினின் சத்தத்தினூடே மஸீயா கூறியவற்றைக் கூர்மையாக உள்வாங்கிக் கொண்டன நஜ்மாவின் செவிகள். அவன் வந்த போதெல்லாம் ரிஸாயாவின் விழிகள் அவளை நோக்கிய விதங்கள் வித்தியாசமானதாக இருந்தன. ஆனால், அவள் எதையும் கண்டு கொள்ளாது நடந்து கொண்டாள். நாட்களின் நகர்வில் அவளது இதயத்தின் தளும்பல் மெல்ல மெல்ல அடங்கியது.

இர்சாத் ரிஸாயாவைப் பற்றியும் யோசிக்கத் தொடங்கியிருந்தான். அவன் நஜ்மாவைக் கைப்பிடிக்க வேண்டுமானால் முதலில் மஸீயாவும், ரிஸாயாவும் கரைசேர வேண்டும். ரிஸாயாவின் எதிர்பார்ப்பு நிறைவேறாது போய் விடுமோ என்ற சந்தேகம் இர்சாத்தின் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. ரிஸாயா இதனை உணராதிருப்பது அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

"ஒருக்கச்சரி பேசியில்ல தானே..."

"காயிதத்தில பேசியதானே..."

"இதுகள நம்ப வேணம் ரிஸாயா..." இர்சாத் அலுத்துக் கொண்டான்.

இர்சாத் கூறுவதில் உண்மையிருந்தாலும் அவளால் தன் இதயத்திலிருந்து அவன் நினைவை அப்புறப்படுத்த முடியாதிருந்-

தது. அவள் காத்திருந்தாள். அந்தக் காத்திருப்பில் காலம் நகர்ந்தது. வெள்ள நீரோட்டமாக வந்து கொண்டிருந்த அஸ்ரானின் கடிதங்களும் இப்போது தட்டுத்தடுமாறித்தான் வந்து கொண்டிருந்தன. காலப்பறவையின் சிறகடிப்பு மெல்ல மெல்ல வேகம் குறைவது போல. அவர்களது எண்ணப்பரிமாற்றமும் படிப்படியாகக் குறைந்து வந்து.... இல்லையென்றானது. அப்போதும் அவள் இதயம் அவன் நினைவைச் சுமந்திருந்தது. தன்னுள் தானாகவே புதுப்புதுக் கனவுகளை..... கற்பனைகளை வளர்த்துக் கொண்டு வாழ்வில் கரைகாணும் நாளை அவள் காத்திருந்தாள்.

# 10.

**மகனால்** ஒரு குமர்ப்பாரமாவது குறையட்டுமே என்ற நினைப்பில் அவனுக்கும் மஸீயாவுக்கும் மாற்றுச்சம்பந்தம் தேடினாள் ஆயிசா. மாற்றுச்சம்பந்தங்கள் பொருத்தமாக வந்து அமையவில்லை. மர்லியா கொண்டுவந்த சம்பந்தங்களில் எல்லாம் அர்சாத்துக்கேற்ற ஜோடி அமைந்திருந்தாலும் மஸீயாவுக்கு வரன் இல்லை. ஒன்றில் அவளை விட வயதில் குறைந்தவனாயிருப்பான். அல்லது அவளுக்கு எட்டாத வயதில் இருப்பான்.

"அர்சாதுக்குத் சரிவார.. மஸீயாக்குத்தான்..." என இழுந்தாள் ஆயிசா...

"இது நல்லம் ஐசாத்தா..."

"வயஸு கூடவலியன் மர்லியா..."

"நாப்பத்தஞ்சி இரிச்சும் குடுத்துப் போடுங்கொ..." இலேசாகச் செல்லிவிட்டு அமைதியாக இருந்தாள் மர்யம்.

'எளிமயத்தவிர ஏண்ட புள்ளைக்கு என்தியன் கொற' என எண்ணிய ஆயிசா வேதனையில் பேச்சிழந்தாள். மர்யமும் மர்லியாவும் ஏதேதோவெல்லாம் சொல்லிப் பார்த்தனர். ஆனால் ஆயிசாவின் மனம் அதற்கு இடம்தரவில்லை. மர்யம் முகத்தைக் கோணலாக்கிக் கொண்டு போய்விட்டாள். மர்லியாவும் இந்த விடயத்தை இதோடு விட்டு விட்டாள். அர்சாத் கடையில் நிற்பதால் அவனுக்குச் சம்பந்தங்கள் பேசி வந்து கொண்டிருந்தன.

மர்லியா மர்யத்தோடு ஆயிசாவுக்கு ஏசினாலும் ஆயிசாவுடனான தொடர்பை விட்டுவிடாமல் ஒட்டவைத்துக் கொண்டிருந்தாள்.

"நல்ல விசயமுக வரும்" என ஆயிசாவுக்கு நம்பிக்கையூட்டி பல இடங்களில் தேடிக்கொண்டுமிருந்தாள் மர்லியா.

"மர்யம் தாத்தாக்குப் பொம்புளப் புள்ள இருந்தால் வௌங்கும்..." வேதனைப் பட்டுக் கொண்டாள்.

ஆயிசா...

அன்று போன மர்லியா ஒரு மாதத்திற்குப் பிறகு மீண்டும் வந்தாள். "ரெண்டு பேருக்கும் பேசிக்கொண்டு வந்த. நஸீபிருத்தால் நடக்கும்" என்றாள் மார்லியா.

"எங்கயன்...?" ஆவலோடு கேட்டாள் ஆயிசா.

"ஊருல தான் மகனுக்குச் சல்லி தாராம் அத எடுத்து மகளுக்குக் குடுக்கேலும்..."

ஆயிசாவின் முகம் சிறிது மலர்ந்தது. றிஸாயாவும் நிஸ்றினும் கூட அங்கே வந்தார்கள். மர்லியாவின் பேச்சிலிருந்து அவர்களுக்கும் ஓரளவு நம்பிக்கை பிறந்தது. மஸீயா உள்ளே தைத்துக் கொண்டிருந்தாள்.

உட்பக்கமாக எட்டிப் பார்த்துப் பார்த்து மெதுவாகப் பேசினாள் மர்லியா.

"ஆலமெல்லம் தேடினாலும் காலடீலயாம் நஸீபு..." என்றாள் மர்லியா.

"துவாக் கேட்டுக் கொங்கொ...." என்றாள் ஆயிசா றிஸாயாவைப் பார்த்து.

அவக்கு கிட்டேத்தடயோ இது...? என அஃறிணையில் றிஸாயாவைக் காட்டிக் கேட்டாள் மர்லியா.

"ஓ"

"இதுக்கும் நான் தேடியன்..." என மர்லியா கூறியபோது மெதுவாக அவ்விடத்தை விட்டகன்றாள் றிஸாயா. அவளது

உள்ளம் பிரார்த்தித்தது. 'பாவம் தாத்தா' என மஸீயாவுக்காக உருகியது அவள் உள்ளம்.

மறுநாளும் ஓடிவந்தாள் மர்லியா.

"அவங்க நாயத்துக்கெழமைக்கு வாராம். நல்லாக சங்க செய்யோனும்..." மர்லியா இட்ட பணிகளை ஆயிசாவும் மக்களும் செயல்படுத்தினார்கள்.

தன்னால் ஒரு குமர்ப்பாரம் குறைவதால் அர்சாதும் கல்யாணத்திற்கு உடன்பட்டான்.

மர்லியா கூறியது போல் ஒரு ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் நாலைந்து பெண்கள் வந்து மஸீயாவின் கைவிரலில் மோதிரம் ஒன்றைப் போட்டு விட்டுச் சென்றனர்.

மஸீயா தோடு தவிர எந்த நகையும் அணிந்திராதவள். முதன்முதலாக மோதிரத்தின் ஸ்பரிசம் பட்டதும் அவளுள் பூவொன்று பூத்தது. வாடிக்கிடந்த அவளது இதயத்தின் பூரிப்பு அவளது விழிகளில் மின்னியது. அவளது மகிழ்ச்சி வீட்டில் மற்றவர்களின் முகங்களிலும் மலர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

ஆயிசா மகனுக்குப் பேசியிருக்கும் பெண் வீட்டுக்கும் மோதிரம் போடச் சென்றாள். மர்யமும் அவளது மருமகள்மார் இருவரும் சென்றனர். அர்சாத் வாங்கிக் கொடுத்த மோதிரத்தைக் கையில் வைத்தபடி அவனுக்காகப் பார்க்க வந்த ஸபீனாவையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஆயிசா. அவளது உள்ளத்தின் அதிருப்தி முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

"மோயிரத்தப் போடு..." ஆயிசாவை நெருங்கியமர்ந்து அவள் காதுக்குள் குசுகுசுத்தாள் மர்யம்.

ஆயிசா பேசவில்லை. யோசனையிலாழ்ந்தாள். தனது பிள்ளைகளின் முகத்தில் காணக்கூடிய கனிவு, புன்னகை எதுவுமே ஸபீனாவின் முகத்தில் காணவில்லை. கர்வமும் அலட்சியமும் அவள் பார்வையில் தெரிந்தன.

'ஏன்ட புள்ளைகட கொணத்துக்கு...' என எண்ணியவளை மெல்லக் காலில் கிள்ளினாள் மர்யம்.... மஸீயாவுக்குப்

பேசியிருக்கும் சம்பந்தம் நினைவுக்கு வர மெல்ல எழுந்து சென்று ஸபீனாவின் விரலில் மோதிரத்தை அணிவித்தாள் ஆயிசா.

வீட்டுக்கு வந்த ஆயிசாவிடம் ஓடிவந்தாள் நஜ்மா ஆவலோடு அவளைத் தொடர்ந்து வந்தாள் ரிஸாயா.

"எப்பிடியன் பொண் நல்லமா?"

"ம்" நஜ்மாவின் கேள்விக்கு இது தான் பதிலானது. அவளது இந்த 'ம்' ரிஸாயாவுக்குத் திருப்தியைத் தரவில்லை. அவள் யோசனையோடு உள்ளே சென்றாள். ஆயிசா வீட்டில் யாரோடும் எதுவும் சொல்லிக் கொள்ளவில்லை. "மஸீயா தாத்தாவோட ஒண்டும் செல்ல வேணம்..." என நஜ்மாவுக்குச் சொல்லி வைத்தாள். இர்சாத் வந்தபோது அவனும் ஆயிசாவிடம் இது பற்றிக் கேட்டான்..." நல்லம் தான். அம்மட்டுப் பஸந்தில்ல. மஸீயாவச் சுட்டி புரியப்படோனும் தானே..." அவள் பேச்சு இர்சாதுக்குப் படவில்லை. அதற்குமேல் அவன் எதுவும் கேட்கவுமில்லை.

# 11.

“மிச்சம் தச்ச வேணம் மகள். மெலிதொண்டும்...”

“சல்லி வேணுமலியன் உம்மா...”

அதிகமான பணத்தேவைகள் ஏற்பட்டுள்ளதால் ஓய்வு, ஒழிவின்றித் தையல் மெசினை மிதித்தாள் மஸீயா. இனிய கனவுகளோடு களைப்பின்றி அவள் தைத்தாள். இதைக் காண ஆயிசாவுக்குத் தான் களைப்பாக இருந்தது.

தைத்த உடைகளைப் பார்சலாகக் கட்டி ஆயிசாவிடம் கொடுத்தாள் மஸீயா. உடுப்புப் பார்ஸலை எடுத்துக் கொண்டு றிஸாயாவோடு அமீர்ஹாஜியார் வீட்டுக்குச் சென்றாள் ஆயிசா. அவர்கள் சென்றபோது அமீர் ஹாகியார் வீட்டிலில்லை.

“ஹாஜியார் வர இராவாகும். பெய்த்து மகன அனுப்-புங்கே...” என்றாள் அவர் மனைவி.

“இல்ல வரங்காட்டிலும் நிச்சியன்....” மகன் வரமாட்டான் என்று அவளுக்குத் தெரியும். அவள் ஹாஜியார் வரும்வரை றிஸாயாவோடு காத்திருந்தாள். இசா தொழுகைக்கும் பிறகு தான் ஹாஜியார் வந்தார். தைத்த உடைகளைக் கொடுத்து விட்டு தைப்பதற்கான துணிகளை வாங்கிக்கொண்டு இருவரும் வீடு திரும்பும் போது இரவு எட்டு மணியைக் கடந்திருந்தது. பாதையின் இருளிலே ஒளிக்கோடிட்டவாறு வாகனங்கள் பறந்து கொண்-டிருந்தன.

பக்கத்திலே களுகங்கையாளின் மெல்லிய தளுக்கு நடையொலி கேட்டது.

"ஆத்தில உசுப்பூசாட்டம் கேக்கிய..."

"அது தண்ணிச்சத்தம் உம்மா..."

"தண்ணிக்கரைல தான் பயப்புட அசடு..."

ஆற்றில் நீரோடுகின்ற சலசல சத்தமும், காற்றின் குளிர்மையும் சேர நடந்து கொண்டேயிருக்க வேண்டும் போலிருந்தது றிஸாயாவுக்கு.

"குளுந்த காத்து.." தன் சகோதரி கரைசேரப்போகும் மகிழ்ச்சியில்....... காற்றின் குளுமையை அனுபவித்த படி நடந்தாள் றிஸாயா.

கொண்டு வந்த துணிகளை இரவோடிரவாக வெட்டி முடித்து, காலையிலேயே தைக்கத் தொடங்கினாள் மஸீயா.

கடையில் தனக்குக் கிடைக்கும் சம்பளத்திற்கேற்ப ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு பொருளாக வாங்கி வந்தான் அர்சாத். அவன் இப்போது கொழும்பிலிருந்து தினமும் வந்து போனான். திருமணத்திற்கான முழுச்செலவை ஏற்கவும் இர்சாத் தயாராயிருந்தான். ஆனால், அதற்கு ஆயிசாவும் மக்களும் உடன்படவில்லை. இருந்தாலும் அவன் மர்யத்திற்குத் தெரிந்து சிறு செலவுகளையும் தெரியாது பெரிய பணச்செலவுகளையும் பொறுப்பேற்றான்.

"கலியாணத்த கந்திரி மாஸம் வெச்சியோ மகன்...?"

"ஏலா உம்மா. இன்னம் பின்னுக்குத் தள்ளுங்கொ"

ஆயிசா கேட்டபோது அக்கேள்வியிலேயே அமுங்கிப் போனான் அர்சாத்.

"ஒரு மாஸம் ஈச்சி தானே" ஆயிசாவுக்கு அவசரம்.

"மூணு மாஸமாவது வேணும்"

இப்போது தான் பொறுப்புள்ளவனாகப் பேசினான் அவன். வேலியோரத்தில் இருந்த ஜம்புமரம் காய்த்துக் குலுங்கியது. கொக்கி

போட்டுக் கிளையை வளைத்துப் பழம் பறித்துக் கொண்டிருந்தாள் நஜ்மா. பெரிய காய்களாகத் தேடித்தேடிப் பறித்தவள், கனைப்புச்சத்தம் கேட்டுத் திரும்பினாள்.

"இர்சாத் நானாவா...?"

"நான் வந்து மிச்சன்நேரம்"

"ஜம்புக்கா தரவா?"

அவன் பேசவில்லை..... கையை நீட்டினான்.

"எறும்ப ஊதித்தின்னுங்கொ" கையிலுள்ள காய்களை அவன் கையில் கொடுத்தாள் அவள். வேலியில் காயப்போட்டிருந்த பாய்த்துண்டை எடுத்து முற்றத்தில் போட்டு அமர்ந்து கொண்டு ஜம்புக்காய்களைக் கடிக்கத் தொடங்கினான் இர்சாத்.

அவள் கிளைகளை விலக்கிப் பார்த்துப் பெரிய காய்களைப் பறித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவள் காய்களை மட்டும் பறிக்கவில்லை. அவன் உள்ளத்யையும் சேர்த்து கொக்கி போட்டு இழுத்துக் கொண்டிருந்தாள்..... அவன் பாயில் அமர்ந்து அவள் அழகை ரசித்தவாறே ஜம்புக்காய்களைச் சுவைத்துக் கொண்டிருந்தான். அவளது கைகளில் மெல்லிதானதொரு நடுக்கம். இந்த நடுக்கம் தன்னைக் காட்டிக் கொடுத்து விடுமோ என அவள் பயந்தாள். இருந்த போதும் அவ்விடத்தை விட்டுப்போய்விட அவள் விரும்பவில்லை. அவனது சமீபம் அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அவன் முன்னால் ஜம்புக்காய்கள் குவிந்திருந்தன. ஜம்புக்கனியின் நிறத்தையொத்த அவள் முகத்தின் வனப்பில் அவன் லயித்துப் போயிருந்தான். வீட்டினுள்ளிருந்தவாறு இவர்களைப் பார்த்துக் கொண்டு நின்றாள் றிஸாயா. கல்யாண ஏற்பாடுகள் மெதுவாக நடந்து கொண்டிருந்தன. அந்தச்சாக்கில் இப்போதெல்லாம் அடிக்கடி வந்து போனான் இர்சாத். இப்போது வீட்டின் ஓட்டை உடைசல்கள் மாற்றப்பட்டு, வீடு ஓரளவு திருத்தப்பட்டிருந்தது. இருந்த ஒரு அறையும் போதாததால் வாசலின் பாதியைப் பலகையினால் அடைத்து அறையாக்கியிருந்தார்கள். நாட்களின் நகர்வில் திருமண ஆயத்தங்களும் நிறைவேறிக் கொண்டிருந்தன. அர்சாதுக்கு சீதனப்பணம் கொண்டுவரும்

வைபவமும் நிகழ்ந்தது. அடுத்த வாரம் மஸீயாவுக்குப்பணம் கொண்டு போவதென முடிவாகியிருந்தது. ஆனால் அது நடக்க வில்லை..... மாப்பிள்ளைக்கு வேறு இடத்தில் திருமணம் முற்றாகி விட்டதாக செய்தி தான் வந்தது.

"அதெப்படியன் ஏலும்?"

"அவங்க ரெண்டு பேச்சிப் பேசிய"

மர்யமும் மர்லியாவும் புலம்பினார்கள். பேச்சின்றி நெஞ்சடைத்து வீழ்ந்தாள் ஆயிசா. பெண்பிள்ளைகள் நால்வரும் கதறியழ, அவள் அவசரமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்-பட்டாள். அங்கே, கரைபுரண்ட மகிழ்ச்சி வெள்ளம் பனிக்-கட்டியாக உறைந்து போனது.

# 12.

"நஜ்மா...." சிரித்த முகத்தோடு வாசற்படியருகில் நின்றாள் சர்மிளா.

"வாங்கொ டீச்சர் இரீங்கொ"

"உம்மாக்கு என்தியன்?"

நடந்தவைகளைத் திக்கித்திக்கிக் கூறினாள் நஜ்மா.

"இப்ப எப்பிடியன்?" அவசரமாகக் கேட்டாள் சர்மிளா.

"நல்லமாம் ரிஸாயா தாத்தா கிட்டநிச்சிய..... ரெண்டு நாளைக்கு நிச்சச் சென்னாம்" வீங்கிச் சிவந்த கண்களைக் கசக்கினாள் நஜ்மா. கலங்கிய கண்களோடு அவள் பக்கத்தில் வந்து நின்றாள் நிஸ்ரின்.

அவர்களோடு ஆதரவாகப் பேசினாள் சர்மிளா. நஜ்மாவைக் காண வரவேண்டுமென அவள் எண்ணியிருந்த போது தான் ஆயிசாவைப் பற்றிய செய்தி கேள்விப்பட்டது. உடனேயே சேதி கேட்க ஓடிவந்தாள். அவள் நஜ்மாவோடு பேசிக்கொண்டிருக்கும் போது அங்கே வந்தாள் அயல் வீட்டு ஸபீயா.

"பாவம் அயிசாத்தா நாகொடைலயாம். கலியாணமும் பிஞ்சிட்ட. அந்தப் பொம்புள கொமருகள வெச்சிக்கொண்டு என செய்தோ தெரியா" அவள் பேசிக்கொண்டே போனாள். அவளை எரிச்சலோடு பார்த்தாள் சர்மிளா. நஜ்மா எதுவும் பேசாது தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

"எங்கியன் மஸீயா?" கேட்டபடி உள்ளே நகர்ந்தாள் ஸபீயா.

"இதாரன்? அந்தப் புள்ளயேம் அழூட்டப் போற"

"மஸீயா தாத்தா தூக்கம்" என்றாள் திஸ்ரின்.

உள்ளே போன ஸபியா தனது அனுதாபத்தைக் கொட்ட ஆள் கிடைக்காத சோர்வில் உள்ளிருந்து திரும்பி வந்தவள்.....

"நான் போற புள்ள" எனக்கூறியபடி வெளியேறினாள். அனுதாபப்பட்டு வேதனையைக் கிளறி விட்டுப்பார்க்க வந்தவள் தன் எண்ணம் நிறைவேறாததால் ஏமாற்றத்தோடு போனாள். சர்மிளாவின் வார்த்தைகள் நஜ்மாவின் கலங்கிய உள்ளத்திற்கு ஒத்தடமாயமைந்தன.

ஆயிசாவைப்பார்க்க ஆஸ்பத்திரிக்கு காலையில் அர்சாத் போய்வருவான். அவன் இவ்வாறு செல்வது பெரிய விசயமா-யிருந்தது. நஜ்மாவும் நிஸ்ரினும் பகல் சாப்பாட்டைச் சமைத்து எடுத்துச் செல்வார்கள். நேரம் கிடைக்கிற போது இர்சாத் சென்று வருவான். மர்யம் இன்னும் போகவில்லை. இவர்களைத் தவிர அங்கு செல்வதற்கு வேறு யாரும் இல்லை.

நேரம் ஐந்து மணியைக் கடந்துகொண்டிருந்தது. நோயாள-ரைப் பார்க்க வருவோரும் போவோருமாக வார்ட் நிறைந்திருந்தது. வருவோரெல்லாம் அடுத்தடுத்த கட்டில்களில் உள்ள நோயாளரைப் பார்க்க வந்தவர்கள். ஆயிசாவின் கட்டில் பக்கம் வர யாருமே இருக்கவில்லை.

"அந்தீக்கு உம்மாவப் பாக்க ஒத்தரும் வாரல்லயா?"

பக்கத்துக் கட்டிலில் இருந்தவள் றிஸாயாவிடம் கேட்டாள். "இல்ல" என்றாள் றிஸாயா. என்றாலும் யாரும் வர மாட்டார்களா என அவளது விழிகள் தேடிச் சுழன்றன. யாராவது வருவதை அவள் எதிர்பார்த்தாள். அதனால் தாய்க்கருகில் அமர்ந்து வெளிப்புறத்தையே நோக்கியிருந்தாள்.

தாயின் சுகவீனத்திற்குப் பிறகு ஆஸ்பத்திரியில் நோயாளி-களைக் கண்டு விட்டு அவளுள் ஒருவித அச்சம் குடிகொண்-டிருந்தது.

'மக்களில் இவ்வளவு தொகையான நோயாளிகளா?' என

எண்ணினாள். நோய் யாரையுமே விட்டு வைக்காதது போல் அவளுக்குத் தோன்றியது. யாரைப்பார்த்தாலும் ஏதாவது ஒரு நோய். தன்னையும் சகோதரிகளையும் எண்ணிப்பார்த்து அவள் பயந்தாள். அல்லாஹ் காப்பாத்தோணும் எனப்பிரார்த்தித்தது அவள் உள்ளம். இந்நிலையில் அவள் மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் மறந்திருந்தாள். இடைக்கிடையே அஸ்ரானின் நினைவு எழும்போது பெருமூச்சு விடுவாள். அது இயலாமையை வெளிப்படுத்தும் ஏக்கப் பெருமூச்சாக இருந்தது. அஸ்ரான் பற்றிய நம்பிக்கை அவளுள் குறைந்து கொண்டு வந்தபோதும் அவனின் நினைவு அவள் இதயத்தைப் பலமாகப் பற்றியிருந்தது.

மூன்று நாட்கள் தாய்க்குதவியாக ஆஸ்பத்திரியில் இருந்து விட்டு வீட்டுக்கு வந்தாள் றிஸாயா..... சகோதரிகள் வாடிப்-போயிருந்தார்கள்.

"ஆரோடயன் வந்த?" ஜீவன் அற்ற குரலில் கேட்டாள் மஸீயா.

"மர்யம் பெரியும்மா வந்தீந்த அவவோட வந்த"

"உம்மா எப்போக்கன் வார?"

"ரெண்டு மூணு நாள் போகும்"

வீட்டின் வெறுமை றிஸாயாவுக்கு தாயில்லாத குறையை நன்கு உணர்த்தியது. அயலவர் இரண்டொருவர் வந்து றிஸாயா-விடம் ஆயிசாவைப் பற்றி சுகம் விசாரித்துச் சென்றனர். ஸபியா-வும் வந்தாள். ஆனால், அவர்கள் வந்து விட்டுப்போன பிறகு றிஸாயாவின் மனப்பாரம் கூடியது. அவர்களது வார்த்தைகள் யாருக்கும் ஆறுதலாக அமையவில்லை. தம் இயலாமையை, வறுமையை, தாயின் நோயை உணர்த்தி விட்டுச் சென்றனர்.

அடுத்த நாளே இர்சாத் ஆயிசாவை ஆஸ்பத்திரியிலிருந்து அழைத்து வந்தான்.

"றிஸாயா இந்த மருந்துகள நேத்தைக்கு நேரம் உம்மாக்குக் குடுங்கொ...... இதில ஈச்சிய மாவ ஊத்திக் குடுங்கொ" எனக் கூறியபடி அவள் கையில் ஒரு பையைக் கொடுத்தான் இர்சாத். இர்சாத் போய்விட்டான். இர்சாத் மட்டும்தான் எங்களுக்கு ஒதவிக் கொண்டீச்சிய' இவ்வாறு தனக்குள் எண்ணிக் கொண்டாள் றிஸாயா.

# 13.

**பிள்ளைகளின்** இடைவிடாத கவனிப்பில் ஆயிசாவின் உடல் ஓரளவு தேறிக்கொண்டு வந்தபோது இன்னொரு பிரச்சினை தலைநீட்டியது.

அர்சாதின் பெண்வீட்டார் திருமணத்திற்கு அவசரப்படுத்தி-னார்கள். பெண்வீட்டாரிடம் சீதனப்பணமும் வாங்கியாகி விட்ட பிறகு முடியாதென்று சொல்ல முடியாத நிலை. நிலை குலைந்து போனாள் ஆயிசா. யாராலும் எந்த முடிவுக்கும் வரமுடியாத நிலையில்..... பெண் வீட்டாரின் பலமான நெருக்குதலில் ஆயிசா தலையசைத்தாள்.

கலகலப்பற்றுக் கழிந்த இரண்டு வாரங்களின் முடிவில் ஆயிசாவின் மூத்த மருமகளாக ஸபீனா வீட்டுக்கு வந்தாள். ஸபீனா வந்ததிலிருந்து உம்மாவையும் தாத்தாவையும் நினைத்து அழுது கொண்டிருந்தாள். வீட்டிலுள்ளவர்கள் அவளுக்கு மாறிமாறி வேலை செய்யவேண்டிய கட்டாயநிலை.... நிஸ்ரின் முணு-முணுக்கத் தொடங்கினாள்.

ஸபீனாவை உம்மா வீட்டுக்குக் கூட்டிச் செல்வதும் கூட்டி வருவதும் அர்சாதுக்கு முக்கியமான வேலையாகியது.

"நானாக்குப் பாரமில்லயோ உம்மா. அந்தப் பெரிய பேக தூக்கிக்கொண்டு போறதும் வாரதும்," றிஸாயா கேட்டாள். "ஒகப்பில்லாத மனிசருக. போக வேண்டிய சுட்டி நானும் போன" அலுத்துக் கொண்டாள் ஆயிசா. தனது தோல்வியை எண்ணிப்-

பார்த்த போது உள்ளார்ந்த ஒரு பெருமூச்சு அவளுள் தோன்றி மடிந்தது. அவள் ஒன்று நினைக்க நடந்தது வேறாக இருந்தது.

இப்போதெல்லாம் மர்ஸியா அங்கு வருவதில்லை. "பாவம் அதுகட மொகத்தப்பாக்க எனக்குப் புரியமில்ல..." என மர்யத்திடம் கூறிவிட்டாள்.

மஸீயாவும் மனதில் பொங்கிய கனவுகளையெல்லாம் அடக்கி வைத்து சாதாரணமானாள். ஆனால் அவளைப் பார்த்து றிஸாயா மனம் புழுங்கினாள். அதிக நேரம் றிஸாயா அவளோடு கூட இருப்பதால் அவளது உள்ளத்தின் வெளிப்பாடுகளை றிஸாயாவால் உணர முடிந்தது.

தனக்குத் திருமணம் நடக்கப் போகிறது என்றே மஸீயா நம்பினாள். அந்நாட்களில் அவள் முகத்தில் பூத்துச் சொரிந்த மகிழ்ச்சியை றிஸாயா கண்டாள். அவளது ஒவ்வொரு அசைவு-களிலும் துளிர்த்த பூரிப்பையும் அவள் அறிந்திருந்தாள். திருமணம் நின்று போனதும் மஸீயா நிலைகுலைந்து போனாள்.

ஆனால், அதன் ஏமாற்றம், வேதனையெல்லாம் தன்னுள் சமாதியாக்கிக் கொண்டு வீட்டாருக்குக் கவலையில்லாதவளாகக் காட்டிக் கொண்டாள்.

"அர்சாத் வாங்கொ சோறு தின்ன" மகனையும் மருமகளை-யும் சாப்பிட அழைத்தாள் ஆயிசா.

"நீங்களும் வாங்கொ" என்றாள் ஸபீனா, பாயில் வந்து அமர்ந்தபடி.

"நீ... இரி புள்ள நான் பொறகு தின்னியன்..." கூறிவிட்டு அப்பால் சென்றாள் ஆயிசா. றிஸாயா குசினியில் வேலையாக இருந்தாள். மஸீயா தைத்துக் கொண்டிருந்தாள். அவர்களிருவரும் தாய் ஆயிசாவும் நிலைமையைச் சமாளித்துக் கடைசியில் தான் சாப்பிடுவார்கள்.

மர்யத்தின் வீட்டுக்கு அடிக்கடி போய் வந்தாள் ஸபீனா. நஸீராவின் ஆடம்பரம் அவளை வெகுவாகக் கவர்ந்தது. அவளுக்கிணையாகத் தன் நிலையையும் உயர்த்திக் கொள்ள எவ்வளவோ முயன்றாள். ஆனால் அர்சாதின் வருமானம் அதற்கு

இடம் கொடுக்க வில்லை. வீட்டுச் செலவைப் பார்க்கவும் மனைவி கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுக்கவும் முடியாமல் அவன் திணறிப் போனான்.

"மாச்சல் படாம அத வெய்ங்கொ உம்மா" வேலை செய்ய விடாது தாயைத் தடுத்தாள் றிஸாயா. தாய்க்கு நோய்கள் ஏதும் வந்து விடக்கூடாதே என்ற பயம் அவளுக்கு. ஆனாலும், ஆயிசா கேட்பதாக இல்லை. உம்மாவுக்கு ஏதுமானால் தங்கள் நால்வரினதும் நிலை பற்றி எண்ணி உள்ளூரப் பயந்தாள் றிஸாயா. போதாததற்கு ஸபீனா வேறு அங்கிருப்பதால் அவளது வீட்டார். அவளைப் பார்க்க வருவது செலவையும் வேலையையும் அதிகரிக்கச் செய்திருந்தது.

"நஜ்மா நாங்க வரவா?" கேட்டபடி புன்னகை முகத்தோடு கடவலைக் கடந்தாள் சர்மிளா. கூடவே அவள் மகளும் வந்தாள். இன்முகத்தோடு அவளை எதிர்கொண்டனர் நஜ்மாவும் றிஸாயாவும். நிஸ்ரினும் அவளைக் கண்டு ஓடிவந்தாள்.

சர்மிளாவின் கையில் துணிப்பார்ஸல் இருந்தது.

"இத மஸீயாட்டக் குடுங்கோ" என அதை றிஸாயாவின் கையில் கொடுத்துவிட்டு அமர்ந்தவள்.

"நான் இதுக்காக வரல்ல நஜ்மா, ஒங்கட உம்மாவைம் மைனியைம் பாத்துட்டுப் போக வந்த..... இனி.

உடுப்பையும் மஸீயாட்டக் குடுக்க எடுத்துக்கொண்டு வந்த" என்றாள் ஒரே மூச்சில். உள்ளிருந்து ஆயிசா வந்தாள். முன்றானையைத் தூக்கித் தலையில் போட்டபடி "மகள் மைனியப் பேசுங்கொ" என்றாள்.

சர்மிளா நீண்ட நேரம் ஆயிசாவோடும் பிள்ளைகளோடும் கதைத்துவிட்டு உடுப்புத் தைப்பதைப் பற்றியும் மஸீயாவிடம் கூறி முடிந்த பிறகு. ஸபீனா வந்தாள். அவள் உடைமாற்றி நகைகளையும் அணிந்திருந்தாள்.

"ஊட்டுக்கு மூத்த மருமகள் எல்லாரைம் நல்லாப் பாத்துக்கொங்கோ" என்றாள் சர்மிளா. ஸபீனா புன்னகைத்தாள். பார்வையால் அவளை எடை போட்டாள். ஏதோ நினைத்தவளாய்

றிஸாயாவையும் மஸீயாவையும் நஜ்மாவையும் மாறிமாறிப் பார்த்து வியந்தாள் அவள்.

"மழைக்கிருட்டீச்சி பெய்த்துடோணும்"

வெளியே வானத்தைப் பார்த்து விட்டு எழுந்தாள் சர்மிளா. நஜ்மாவின் கன்னத்தைக் கிள்ளி விட்டு "நான் வாரன்" என விடைபெற்றாள்.

# 14.

"**நஜ்மா** கலியாணூட்டுல லைட் போட்டு. வாங்கொ காட்ட" வேலிக்கம்பை விலக்கிக் கொண்டு ஓடிவந்தாள் ஸபியாவின் இளையமகள் ஸரீனா.

"எங்கியன்?" வா நிஸ்ரின்" தங்கைக்கு அழைப்பு விடுத்தபடி ஸரீனாவோடு தெருவோரத்துக்கு ஓடினாள் நஜ்மா. அயலில் ஒரு கல்யாண வீடு, வர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

"ரோட்டுல மனிச போற இங்க வாங்கொடி" ஆயிசாவின் குரல் அவர்களின் காதில் விழவில்லை. கடவல் அருகே போய் நின்றார்கள். கடவலைக் கடந்து கொண்டு உள்ளே வந்தாள் ஸபியாவின் மூத்த மகள்.

"அயிசாத்தா கலியாணூட்டுக்குப் போறா?" முற்றத்தில் நின்று அவள் கேட்டாள்.

"நான் போகல்ல புள்ள" இப்போதெல்லாம் அவள் எந்தக் கலியாண வீட்டுக்கும் போவதில்லை.

"மருமகள் போறா?"

"ஸபீனா" ஆயிசா அழைத்தாள். ஆனால் பதில் வரவில்லை. அவள் போகும் வரை ஸபீனா அறைக்குள்ளேயே அடங்கி நின்றாள்.

நிமிடங்கள் நிசப்தமாய் மறைந்து கொண்டிருந்த வேளை வாகனச் சத்தம் கேட்டதோடு நஸீரா கணவனோடு வேனிலிருந்து இறங்கி வந்தாள்.

"ஸபீனா ரெடியா?"

நஸீராவின் குரல் கேட்டதும் துள்ளிக்கொண்டு வெளியே வந்தாள் ஸபீனா. வந்தவள் "ரெடியாகீட்ட" என்றபடி நஸீராவோடு வெளியில் நடந்தாள். நஸீராவுக்கு ஈடாக முயன்று இருக்கின்ற நகைகளையெல்லாம் அவள் அள்ளி அணிந்திருந்தாள்.

கல்யாண வீடு மிக அண்மையிலேயே இருந்தது. கல்யாண வீட்டுக்கு முன்னால் வேன் போய் நின்றதும் ஓர் அகங்காரப் பார்வையோடு.... சுற்றிலும் பார்த்தபடி வேனிலிருந்து இறங்கி உள்ளே போனாள் ஸபீனா.

தங்கச்சீ என அழைத்தபடி உள்ளே நுழைந்தான் இஸ்மத். அகமும் முகமும் மலர ஓடிவந்தாள் ஸபீனா. ஆயிசா வந்து எட்டிப்பார்த்தாள். ஓர் அலட்சியப் பார்வையோடு முகத்தைத் திருப்பிக் கொண்டான் இஸ்மத்.

ஸபீனா மாமி வீட்டுக்கு வந்தால் அவளைப் பார்க்க இஸ்மத் இரண்டு மூன்று தடவை வந்து விடுவான். அவளும் நானாவைப் பற்றியே பெருமையடிப்பாள்.

"இரீங்கொ நானா கோப்பி கொண்டாரன்" என்றபடி குசினிக்கு வந்தாள் ஸபீனா. ஆயிசா கோப்பியை ஊற்றி அவள் கையில் கொடுத்தாள்.

"தங்கச்சீ " இஸ்மத் குரல் கொடுத்தான்

"ஏரக்கமுள்ள நானா. எனத்துக்கன் தங்கச்சிய எளிய எடத்தில முடிச்சிக் குடுத்தீச்சிய?" வாய்விட்டே கூறிவிட்டாள் நஜ்மா.

"பேசாமிரி" மகளைக் கடிந்து கொண்டாள் ஆயிசா. இஸ்மத் மணிக்கணக்கில் தங்கையோடு பேசினான். வீட்டில் மற்றவர்களோடு ஒரு வார்த்தை கூட அவன் பேசவில்லை. போகும் போது முகத்தைச் சுழித்துக் கொண்டு புறப்பட்டான்.

“மச்சன் வந்த பொறகு வாங்கொ பெய்த்து வாரன்” முற்றம் வரை சென்று சகோதரனை வழியனுப்பினாள் ஸபீனா. ஸபீனாவின் வருகை புகுந்த வீட்டில் நலமாக அமையவில்லை. அங்கே அவள் இன்முகம் காட்டவில்லை. மாறாக அர்சாத் முகத்திலும் படிப்படியாகக் கடுமை படரக்காரணமானாள். படிப்படியாக அவன் வீட்டுச் செலவுக்குக் கொடுக்கும் பணத்தொகையும் குறைந்து கொண்டு போனது. இதனால் ஆயிசாவும் பெண்மக்களும் திண்டாடிப் போனார்கள்.

“ஸபீனா” அழைத்தபடி கையில் சிறு பார்ஸலுடன் அறையுள் நுழைந்தான் அர்சாத். வீட்டுச் செலவுக்கு அவன் கொடுக்கும் சிறு தொகைப்பணம் இப்போது சுருங்கி சிறு சிறு பொட்டலங்களாகி ஸபீனாவின் கையைச் சேர்ந்து கொண்டிருந்தது. மனைவியின் முகத்தில் மலர்ச்சியைக் காண்பதே இப்போது அவன் நோக்கமாக இருந்தது.

“எங்கடூட்டுக்குப் போகோணும்.”

“இன்னம் ரெண்டு நாள் நிண்டுட்டுப் போம்”

“ஏலா இப்ப போகோணும்...... நானாவும் வரச்செல்லீட்டுப் போன.”

'நானா' என்ற வார்த்தையில் கட்டுப்பட்டாள் அர்சாத்.

“அப்ப ரெடியாகுங்கொ” கூறிவிட்டு வெளியில் வந்தான். வாசல் சுவரில் சாய்ந்து கால்களை நீட்டி அமர்ந்திருந்தாள் ஆயிசா. அவன் உம்மாவைப் பார்த்தபடி அப்பால் சென்றான். அவளோடு பேச அவனுக்கு நேரமில்லை.

நீண்ட சில நிமிடங்களுக்குப் பின்........

தாயிடம் கூறிக்கொண்டு மனைவியோடு வெளிக்கிளம்பினான் அர்சாத்.

“அவன் வந்த மாச்சலோட அவன இழுத்துக் கொண்டு போறாள் அவள்” ஆயிசா முணுமுணுந்தாள்.

“நானாங்க போறா?” கேட்டபடி தாயின் அருகில் வந்து அமர்ந்தாள் மஸீயா.

“ம்” ஆயிசாவின் உள்ளம் எரிந்தது.

“மைனிக்கு ஊட்டு நெனவு வந்தீச்சும்” அமைதியாகக் கூறினாள் மஸீயா.

ஆயிசாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவளது கோபத்தால் என்ன செய்து விட முடியும்? எல்லாம் சேர்த்துப் பெருமூச்சாக வெளிவிட்டாள்.

“ஈந்துக்கொண்டு யோசிச்சாமப் படுங்கொ தாத்தா” கூறிவிட்டுப் பாயை விரித்துப் போட்டாள் நிஸாயா.

“படுக்கியன் தூக்கம் வரல்ல” அமர்ந்து கொண்டு தலை நுணாவினாள் மஸீயா.

கொட்டாவி விட்டபடியே உறங்கிப் போனாள் நிஸாயா. நஜ்மாவும் நிஸ்ரினும் கூட ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். ஆயிசா வெறுந்தரையில் படுத்திருந்தாள். மஸீயா மட்டும் உறங்காதிருந்தாள். இரவில் நிசப்தத்தில் கடிகாரத்தின் ஒலி மிகத்துல்லியமாகக் கேட்டது. மாடு புல்கடிக்கும் ஓசையோடு நேரத்தை மேய்ந்து கொண்டிருந்தன கடிகார முட்கள்.

# 15.

**இர்சாத்** கூறியதைக்கேட்டு அசந்து போய் அமர்ந்திருந்தாள் றிஸாயா. மஸீயாவின் திருமணம் நின்று போனதற்குக் காரணமானவன் இஸ்மத்தா? ஆயிரமாயிரம் வினாக்குறிகள் அவளுள் எழுந்து மறைந்து கொண்டிருந்தன. தன் தங்கைக்குச் சீதனமாகக் கொடுத்த பணம் மஸீயாவின் சீதனப்பணமாக மாறக்கூடாது என்பதற்காக..... மாப்பிள்ளையைத் திசைதிருப்பியிருக்கிறான். ஸபீனா மர்யத்தின் வீட்டுக்கு அடிக்கடி போயிராவிட்டால் நஸீராவோடு நெருங்கிப் பழகியிராவிட்டால் இவ்விடயம் தெரியவந்திருக்காது.

"ஒத்தர்டயும் செல்ல வேணம்" என ஸபீனா நஸீராவிடம் சொல்ல.... அதே விதமாக நஸீரா அஸ்மாவிடம் சொல்ல.... "அயிசாச்சாச்சியாங்கள்ட செல்ல வேணம்" என அஸ்மா மர்யத்திடமும் இர்சாத்திடமும் சொல்ல.... யாரிடமும் சொல்ல வேண்டாம் எனத்தான் இர்சாத் றிஸாயாவிடமும் கூறினான்.

இஸ்மத்திற்கு மர்யம் சாபமிட்டாளாம். அஸ்மாவும் கவலைப்பட்டாளாம். ஆனால், றிஸாயா மீண்டும் மீண்டும் அதனை எண்ணிப்பார்த்து இதயம் நொந்தாள். தாயும் சகோதரிகளும் தெரிந்து கொள்ளாமல் மறைத்தாள். கரைகாணப் போகும் வேளை மஸீயாவின் வாழ்வைத் திசைதிருப்பிய இஸ்மத்தின் கயமையை எண்ணியெண்ணிக் கலங்கினாள். மஸீயாவைப் போல் வேதனைகளை இதயத்துள் இறுக்கிக்கொள்ள அவளால் முடியாது. வார்த்தைப் பரிமாற்றங்கள் ஏதும் இன்றியே ஒருவனுக்கு

இதயத்தைப் பறிகொடுத்தவள் அவள். அவனது உறுதியற்ற தன்மையை நன்றாக அறிந்த பின்னரும் அவனையே நினைத்துக் கொண்டிருக்கிறாள். தான் ஏமாற்றப்பட்டுவிட்டது 'உண்மை' என்பதை ஏற்கும் தைரியம் அவளுக்கில்லை. காலம் தனக்கு நல்லதொரு பதில் சொல்லும் எனப் போலியாக மனதைச் சமாளித்துக் கொண்டிருக்கிறாள்.

சர்மிளாவோடு ஆலோசித்து அவள் வேலைகளுக்கு விண்ணப்பிப்பது ஆயிசாவிற்குத் தெரியும். சில வேளைகளில் ஆயிசா.

"என்தியன் இப்பிடிச் சொனங்கிய?" எனக் கேட்பாள். தாயின் எதிர்பார்ப்பு அவளைத் தகிக்க வைத்தது.

"பாவம் உம்மா" எனத் தனக்குள்ளேயே கூறிக்கொள்வாள்.

மர்யத்திற்குச் சுகமில்லையெனக் கேள்விப்பட்டதால் அவளைப் பார்ப்பதற்காகச் சென்றாள் ஆயிசா. நோய் பெரிதாக இல்லை. வெறும் காய்ச்சல் தான். மர்யம் பேரப்பிள்ளைகள் இருவரையும் காலை நீட்டி உட்கார வைத்து....... அவர்களோடு விளையாடிக் கொண்டிருந்தாள். கணவர் கரீம் ஹாஜியார் சாய்வு நாற்காலியில் அமர்ந்து, அதனை ரசித்துக் கொண்டிருந்தார்.

"சட்டலங்கா புட்டலங்கா சாதிக்கொடம் மாதளங்கா" ஆயிசாவைக் கண்டு நிறுத்தினாள் மர்யம்.

"வாப்பும்மா" பேத்தி சஹ்மாவின் பிஞ்சுக்குரல் ஒலிக்க மறுபடி தொடர்ந்தாள்.

"பச்சரிசி குத்திக்குத்தி தரணி மேல்ல ஏத்தி ஏத்தி எல்லம் திண்ட கள்ளமாமி இன்ன இவ தானாம்" சஹ்மாவைச் சுட்டிக் காட்டினாள். சஹ்மா கலகலவென முத்துச்சிதறலாகச் சிரித்தாள். தம்பிப் பாலகனும் சிரிக்க, மர்யமும் கணவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

ஆயிசாவும் போய் அங்கே அவர்களோடு அமர்ந்து கொண்டாள். அஸ்மாவும் அங்கே வந்து உட்கார மர்யத்தின் கணவர் அவ்விடத்திலிருந்து எழுந்து சென்றார். முன்னர் மர்யத்தின் வீடு பெரிய தூண்களோடும், உயரமான படிகளோடும், பழைய

காலத்து வீடாகத்தான் இருந்தது. சாஜஹானும், இர்சாதும் கடைப்பொறுப்பை ஏற்றபிறகு இப்போது, வீடு நவீன பாணியில் அமைக்கப்பட்டிருக்கிறது.... ஆயிசாவின் வீடு அவ்வாறல்ல. சின்னஞ்சிறிய வீடு, ஆனால் ஓரளவு நிலம் இருந்தது.

"இந்தக்காணி எங்களுக்கெப்பிடியன் உம்மா கெடச்ச?" தங்கள் தந்தையின் இயலாமையை நன்கு அறிந்திருந்ததால் றிஸாயா ஒரு தடவை இப்படிக் கேட்டாள்.

"வெள்ளக்காரண்ட காலத்துல சண்டயொண்டு நடந்தாம். அந்த நேரம் எங்கட வாப்பாங்க வந்து குடில் அடிச்சிக் கொண்டு ஈந்தாம். ஏண்டிய மட்டுக்கும் வேலி கெட்டி மரம் மட்ட நாட்டினாம்"

"இந்த மரமுக ஒங்கட வாப்பா நாட்டினதா?"

"ஓ. இந்த மாங்க மரம்...... கொரக்க மரமுக அதாம். முந்தி இங்கயெல்லம் காடாம்" ஆயிசா தான் கேட்ட செய்தியைப் பிள்ளைகளிடம் கூறினாள்.

"அப்ப உம்மும்மா?" நஜ்மா கேட்டாள்.

"எங்கட உம்மாவும் மரியம் தாத்தாட உம்மாவும் அழ்க்காமத்திலீந்து இங்க முடிச்சி வந்தாம். எங்கட வாப்பாதான் எழுமப்பட்டுப் போன" எனக் கூறிமுடித்தாள் ஆயிசா. அந்த ஏழ்மை மூன்று தலைமுறைகளாக இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பதை எண்ணி யோசனையில் ஆழ்ந்தாள் நஜ்மா.

# 16.

**இஸ்மத்தை** நினைத்துப் பற்களை நரநரவெனக் கடித்தாள் றிஸாயா. காயப்போட்ட தென்னமட்டைகளை அடுக்கிக் கொண்டிருந்தவள், மட்டைகளைப் பிடித்தவாறே யோசனையில் ஆழ்ந்து போனாள்.

காற்றொன்று வீசியது. கனத்த கருமேகக் கூட்டமொன்று விழுந்துவிடப் போவது போன்று வானில் மிதந்து கொண்டிருந்தது. றிஸாயாவைப் பார்த்துவிட்டு... மஸீயா வந்து மட்டைகளை அடுக்கி எடுத்துச் சென்றாள். திரும்பி வந்தவள்.....

"இதயும் தாங்கொ" என றிஸாயாவின் கையில் பிடித்திருந்த மட்டைத்துண்டுகள் இரண்டையும் வாங்கிச் சென்றாள். றிஸாயா எழுந்து நின்றாள். வெம்மை மாறி வீசிய குளிர்காற்றை அவள் அனுபவித்தாளாயினும் அவளது எண்ணமெல்லாம் ஓரிடத்தில் குவிக்கப்பட்டு அவள் சிலையாக நின்றாள். முன்றானை காற்றில் படபடக்க காதோர மயிர்க்கற்றைகள் கன்னக் கதுப்புகளைத் தொட்டுத்தொட்டு விலகின.

"மழைக்கிருட்டி.... கொடீலிச்சிய பொடவ சீலய எடுங்கொ றிஸாயா" ஆயிசா குரல் கொடுத்தும் கூட அவள் அசையாது நின்றாள்.

மஸீயா ஓடிவந்து கொடியிலிருந்த உடுப்புகளை எடுத்துச் சென்றாள். அக்கணத்திலும் அவளைப் பார்த்து விட்டு....

"றிஸாயா மழவரப்போற.." எனக் கூறியபடி அவள் உள்ளே சென்றாள். தூசித்து கல்களாய் விழுந்த தூறல்..... கற்துண்டுகளாய்க் கனத்து விழுந்த போது தான் றிஸாயா உள்ளே சென்றாள்.

மழை 'சோ' வெனப் பெய்தது. வெம்மை தணிந்த அவ்வேளையிலும் மஸீயாவைப் பற்றிய சிந்தனையில் அவளது உள்ளம் வெம்பிக் கொண்டிருந்தது.

மஸீயாவின் திருமணத்திற்கு நினைத்துக் கொண்டிருந்தபடி செலவழிக்க முடியாமல் போனது இர்சாத்தின் மனதில் பெருங்குறையாக இருந்தது. அக்குறையை நீக்க அவன் ஆயிசாவின் வீட்டிற்கு மின்சாரம் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். இதனால் அவ்வீட்டில்.... குப்பி விளக்குகள் சோம்பல் முறித்த இடங்களில் ஐந்தாறு மின்குமிழ்கள் ஒளிரத் தொடங்கியிருந்தன.

"எனக்குப் படிச்ச லேசி" என்றாள் நிஸ்ரின். தங்களது ஏழ்மை நிலையால் அதிகம் மனத்தாக்கத்திற்காளாகிக் கொண்டிருப்பவள் நிஸ்ரின். அவளது நண்பிகளில் அவளைவிட ஏழ்மையானவர்கள் இல்லை. நண்பிகள் யாரும் வீட்டுக்கு வந்தால் அவள் கூனிக்குறுகிப் போவாள். "எங்கட வகுப்பு ஆள்கள்ளேயே எங்கட ஊடு தான் சிறிசி" எனத்தன் மனத்தாங்கலை நஜ்மாவோடு தான் பகிர்ந்து கொள்வாள். நஜ்மாவின் நிலையும் அவ்வாறு தானிருந்தது. சுவரொட்டி விளக்கின் ஆட்டங்காணும் சுடரில் தையல் வேலை செய்து அலுத்துப்போன மஸீயாவுக்கும் இது வசதியாக அமைந்தது. என்றாலும் அவளும் றிஸாயாவும் இதை விரும்பவில்லை.

"இதெல்லம் வேணம் இர்சாத்" என்றாள் றிஸாயா

"இல்ல றிஸாயா இதெல்லம் கட்டாயம் வேணும்" என மடக்கினான் அவன்.

அஷ்ரப் ஒரு கடையைச் செய்வதால் சாஜஹானோடு இணைந்து மற்றக்கடையைச் செய்தான் இர்சாத்.

இப்போது அவன் வியாபாரத்தில் நன்கு காலூன்றியிருந்தான். ஆயிசாவின் குடும்பத்துக்கு..... நஜ்மாவுக்கு..... தன் சம்பாத்தியத்தால்

எவ்வளவோ செய்ய வேண்டுமென இர்சாத்தின் மனம் ஆசைப்பட்டது. ஆனால் எவ்வாறு செய்வதென்று தான் அவனுக்குத் தெரியவில்லை.

"மஸீயாட கலியாணத்துக்கு வெச்சீந்த சல்லிதான் சாச்சி. அதுக்குத்தான் கரன்ட் எடுக்கிய" என ஆயிசாவிடம் கூறிவைத்தான் இர்சாத். அதனால் அவள் எதுவும் பேசவில்லை.

வீட்டு முற்றத்திலும் மின்னொளி பரவியதால் ஸபியாவும் வந்து இரவு வேளைகளில் முற்றத்தில் ஆயிசாவோடு பேசிக்கொண்டிருக்கத் தொடங்கினாள்.

'லைட்போட அயிசாவுக்குச் சல்லி எங்காலயன்?' என்ற கேள்விக்கு விடைதேடியே அவள் வந்து போனாள். நஜ்மாவும் வெளியே வாங்கைப் போட்டு அமர்ந்து காற்று வாங்கத் தொடங்கினாள். புதிது புதிதாக இனிய கனவுக்கோலங்கள் அவளுள் பூக்கத் துவங்கின. அவளது எண்ணம் அவனையே சுற்றிச்சுற்றி வந்தது. கடைமூடிய நாட்களில் மட்டுமல்லாது அந்தி வேளைகளிலும் இர்சாத் வந்து போனான். ரீங்கரிக்கும் அவள் வண்டுவிழிகளைக் கண்டு களிக்கவே அவன் வந்தான்.

"இர்சாத் நானா இந்தாங்கொ தேத்தண்ணி" என அமைதியாகத் தான் அவள் தேநீரை நீட்டுவாள். தேநீரை வாங்கும் போது அவளது மென்காந்தல் விரல்களை ரசிப்பான். தேநீரைக் கொடுத்து விட்டு அவள் நிலையடியில் நிற்பாள். அவனது விழிகள் அடிக்கடி அவளை நோக்கி நீளும். அவள் மென்மையாகப் புன்னகைப்பாள். அவளது தாமரை முகமும் வண்டு விழிகளும் அவன் மனதுக்கும், விழிகளுக்கும் குளிர்ச்சியை அளித்தன. அவளிரு கண்கள் காந்தக் குண்டுகளோ என எண்ணி வியந்தான் இர்சாத். அவனை "இர்சாத் நானா" என அவள் அழைக்கும் போது அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

ஒருநாள் றிஸாயா இல்லாத போது அவள் அவ்வாறு அழைத்ததும்.....

"நான் நானாவா?" என அவன் கேட்டு விட்டான். அதைக் கேட்டு நஜ்மா தடுமாறிப் போனாள். அவனும் உடனேயே சமாளித்து விட்டான். முன்னரைப் போல் என்றிருந்தால் நஜ்மாவும்

ஏதாவது கூறியிருப்பாள். ஆனால் இப்போது அவளுள்ளத்துள் புகுந்துள்ள கள்ளம் அவளைப் பேச விடாது தடுத்தது.

"நான் நானாவா?" என அவன் கேட்டது..... அவ்வேளை அவன் விழிகளில் விரவிய குறும்பு..... எல்லாம் கரையில் வந்து மோதி மடியும் அலைகளாக அவளிதயத்தில் மோதி மோதி இன்னும் எதனையோ அவளுக்கு உணர்த்திக் கொண்டிருந்தன. பூவாய் இதயம் மலர, அவள் தனிமையில் சிரித்துக் கொண்டாள்.

# 17.

**நஜ்மாவும்** நிஸ்ரினும் பூஞ்செடிகள் நடுவதில் மிக உற்சாகமாக ஈடுபட்டனர். நிஸ்ரின் தன் சிநேகிதிகளிடமிருந்து பூங்கன்றுகளைக் கொண்டு வந்தாள். நஜ்மா இடம் பார்த்துப் பார்த்து அவைகளை நட்டாள்.... நீரூற்றினாள். இதைப்பார்த்து விட்டு இர்சாத்தும் அவர்களுக்குப் பூச்செடிகளைக் கொண்டு வந்து கொடுத்தான். றிஸாயா இதில் பங்கு பெறவில்லை. ஆனால், முற்றத்தை, செடிகளின் செழுமையை அவள் அழகு பார்த்தாள். பூக்களின் தலையாட்டலை.... இலைகளின் அசைவை.... அவள் ரசித்தாள்.

"றிஸாயா தாத்தா பஸந்து பாக்கிய மட்டும் தான்" நிஸ்ரின் அடிக்கடி கூறுவாள். இது றிஸாயாவுக்கு விருப்பமான விசயம் தான். ஆனால் அதில் ஈடுபடும் அளவுக்கு மனஉற்சாகம் அவளுக்கில்லை. அவள் நீர் கூட ஊற்றமாட்டாள். ஒருமுறை ஆயிசா "இதுகள நாட்டிய நேரம் கொச்சிக்க மரத்த நாட்டினால் பொரோசனம்" என்றாள். இது அவளது தேவைக்குள் அடங்காத-தால் அவள் இவ்வாறு கூறினாள்.

ஆனால் ஸபீனாவோ "ஒங்கடுட்டட பஸந்துக்குப் பூந்தோட்-டமா?" எனக்கேட்டு விட்டாள். இவ்வார்த்தை நிஸ்ரினின் மனதைப் புண்படுத்தியது.

புகுந்த வீட்டில் அவள் திருப்திப்படக்கூடியதாக ஏதுமில்லை.

அவளுக்குப் புகுந்த வீட்டில் இருக்கப் பிடிக்காது. அதனால் அவள் இவ்வாறு ஏதாவது குறைகள் கூறிக்கொண்டு, ஓரிருநாட்கள் தங்கிவிட்டு பிறந்த வீட்டுக்குப் போய்விடுவாள்.

கணவன் சிலவேளை வற்புறுத்தினால்......

"எங்கட உம்மாங்க கஷ்டப்பட்டுச் செலவழிச்சி ஒங்களுக்கு முடிச்சித்தந்தது நான் கஷ்டப்படவா?" எனக்கேட்பாள்.

"கஷ்டப்படுகியா?"

"இங்க தென்னங்குத்தி அடுக்கின கெணத்தால தண்ணி எடுக்கியது எனக்குக் கஷ்டம் தானே? எங்கடூட்டுல கப்பிகெணறு. இங்க பலகக்காமரயும், பலக அடிச்ச சொகரும்" என அவள் முணுமுணுப்பாள்.

"அவ செல்லியதும் சரிதான்" என மனைவியின் கூற்றை நியாயப்படுத்தியது அர்சாதின் உள்ளம். அதன்பின், ஸபீனா தொடர்ந்து தாய்வீட்டில் தங்கினாள். அர்சாத் இடையிடையே தன் வீட்டுக்கு வந்து விட்டுப் போனான். வீட்டுக்கு ஆண்துணை இல்லாத குறையை ஆயிசாவும் பெண்மக்களும் உணரத்தொடங்கினார்கள். மஸீயாவின் உழைப்பும், ஆயிசாவின் அலைச்சலுமே அக்குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றின.

சில சமயம் தன் பிள்ளைகளின் தனிக்கு ஸபியாவின் மகள் ஸரீனாவை அழைத்தாள். ஸரீனா எப்போதும் உதவிக்கு வரத் தயாராயிருந்தாள். ஆனால், அங்கு இர்சாத் வந்து போவதை அவளது எண்ணம் வேறு வகையில் உருவகித்தது.

"றிஸாயாவப் பாக்கத்தான் வார. அவளோட தான் ஒரே பேசிய" எனத் தன் தாயோடு ரகசியம் பேசினாள் "நானும் நெனச்ச இதெல்லம் எங்க நடக்கியன்?" என ஸபீயா கூறியபோது தான் ஸரீனாவுக்கும் நிம்மதியானது. ஆயிசா அழைக்காத போதும் அவள் அங்கு போனாள் உளவு பார்ப்பதற்காக.

"இர்சாத் ஒங்கட றிஸாயா தாத்தாவயா முடிச்சப்போற?" அடக்கி வைக்க முடியாது கேட்டுவிட்டாள் ஸரீனா. அவளது திடீர்க் கேள்வியில் ஒரு கணம் திடுக்கிட்ட நஜ்மா தன்னைச் சமாளித்துக் கொண்டு "அப்பிடியில்ல" என்றாள். ஆனால்....

அவளது முகத்தைப்பார்த்து எதையோ விளங்கிக் கொண்டாள் ஸரீனா.

"அவங்கட வாப்பா பொல்லாத மனிசனேன்?"

"பொல்லாத மனிசனா?"

"சல்லிப்பிசாசாம். எங்கடும்மா செல்லிய" நஜ்மாவின் முகமாற்றத்தைக் கவனித்த ஸரீனா தொடர்ந்தாள் "வந்த மருமகளுக ரெண்டு பேரும் சல்லிக்காரீகதானே?"

"ஓ" நஜ்மா தலையசைத்தாள். "மூணாவதும் சல்லிக்காரி-யொண்டத் தேடியொண்டும்"

பளிச்சிட்ட வானத்தில் சில நேரங்களில் திடீரெனக் கருமேகக் கூட்டம் கவிவது போல், நஜமாவின் முகமும் உடனேயே வாடிப்போனது.

'மெய்தான் பெரியப்பா சல்லிப் பிசாசி தான்' அவளது உள்மனம் இப்போது தான் அதை உணர்ந்தது. மர்யத்தின் கணவர் தங்கள் குடும்பத்தோடு ஒட்டுறவின்றி இருப்பது, வசதி படைத்தவர்களோடேயே அவர் பழகுவது பற்றிய சிந்தனையில் அவள் ஆழ்ந்து போனாள். ஸரீனா போனதையும் அறியாது பெரியப்பா பற்றிய சிந்தனையில் இருந்தவள் இர்சாத்தை நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

இப்போது..... நினைத்து நினைத்துக் கனிந்த இடத்தில் கொஞ்சம் வலித்தது...... கணத்துக்குக் கணம்...... நிமிடத்துக்கு நிமிடம் அந்த வலி கூடியது.

# 18.

**அசைகின்ற** அரவமாக நழுவிச் சென்ற நாட்களில் சித்திரை மாதமும் வந்தது. சித்திரை வியாபாரம் சூடு பிடிக்கத் துவங்கிய போது இர்சாத்தும் வியாபாரத்தில் மும்முரமானான். கடையில் நிரம்பி வழிந்த வாடிக்கையாளர்களுக்கிடையில், அவன் நெருங்கிக் களைத்துப்போனான். கடையில் நேரம் போவதே விளங்காத ஓய்வில்லாத வேலை. இரவில் அலுத்துக் களைத்துப் போய் வீடு திரும்பினால், அப்படியே உறங்கிப் போவான். அதனால் அவன் எவ்வளவு முயன்றும் அவளைப் போய்ப் பார்க்க அவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. காலையில் எழுந்து கடைக்குப் போனால் எதையும் நினைக்க நேரம் இருக்காது. இரவாகும் வரை இதே நிலைதான். நாட்களின் நகர்வில் அவன் இதயம் அனலாய்த் தகித்தது.

ஒருநாள் பகல் சாப்பாட்டிற்கு வரும் சாக்கில் ஆயிசா வீட்டுக்கும் போனான். அவள் முற்றத்தில் விளக்குமாறும் கையுமாக நின்றிருந்தாள். "நஜ்மா"என்றபடி உள்ளே சென்றவன் உட்காரவில்லை, உடனேயே சென்று விட்டான்.

'கடைல யாவாரக் கெடு. அதுதான் இர்சாத்துக்கு வர நேரமில்ல' என றிஸாயா நினைத்துக் கொண்டாள். ஆனால் தஜ்மாவோ அவன் வராதிருந்ததையும் வந்து விட்டு உடனேயே போய் விட்டதையும் வைத்து ஏதோவெல்லாம் எண்ணிக் குழம்பினாள். இர்சாத் தொடர்ந்தும் பல தடவைகள் இவ்வாறு வந்து, தலையைக் காட்டிவிட்டுப் போனான். ஆனால் அவளைக்

கண்டு விட்டே அவன் செல்வான். ஒருநாள் வந்தபோது அவளைக் காணாததால்,

"சாச்சீ..." என்றபடி சென்று குசினியை எட்டிப்பார்த்தான். குசினியில் வேலையாயிருந்த அவள்.... தலையைத் தூக்கிப் பார்த்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

"இரி மகன்..." ஆயிசா பேசினாள்.

"எனக்குச் சொனங்கிய..." என்ற படி அவன் போய்விட்டான். அவனது போக்கில் அவள். அலட்சியத்தையே கண்டாள். 'பெரியெண்ணம் வந்து' என எண்ணிக் கொண்டாள்.

'ஸரீனா சென்னது சரிதான். இவங்கள நம்பசடு' எனத்தன் மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முயன்றாள். ஆனால் தோற்றுப் போனாள். வீட்டில் பெரும்பங்கு வேலைகள் அவள் பொறுப்பில் இருந்ததால் அதிலேயே மூழ்கிப் போனாள். சித்திரை முடிந்து கடையில் நெருக்கடியும் குறைந்தது. வியாபார மும்முரம் படிப்படியாகக் குறைந்து கொண்டு வந்த போது இர்சாத் முன்னர்போல் ஆயிசா வீட்டுக்கு வரத் தொடங்கினான்.

இப்போது அவளின் போக்கில் மாற்றம் கண்டான்.

'நஜ்மா முந்தி மாதிரியில்ல. இவளுக்கு என்தியன் நடந்த' எனத் தலையைப் போட்டுக் குழப்பிக்கொண்டான். முன்பெல்லாம் தேநீர் ஊற்றிக் கொண்டு வருவாள்..... நிலையடியில் நின்று சிரித்துப் பேசுவாள். ஆனால் இப்போது அவள் நிழலைக் கூடக் காணமுடியவில்லை. இர்சாத்தின் உள்ளம் வினாக்களை எழுப்பியது. அவற்றிற்கு யாரிடம் விடை காண்பது? அவளும் அவன் வரும் நேரம் பார்த்து மஸீயா தைக்கும் அறைக்குள் ஒதுங்குவாள். அல்லது ஸரீனா வீட்டுக்கே போய்விடுவாள். தன் மனச்சுமைகளை யாரிடமும் வெளிப்படுத்த முடியாத நிலையில் அவள் மனம் சோர்ந்திருந்தாள்.

இர்சாத் நஜ்மாவை உண்மையாக விரும்பியிருந்தாலும் றிஸாயாவுக்கு இதில் நம்பிக்கையில்லை. பெரியப்பாவைப் பற்றி ஏற்கனவே அவள் அறிந்திருந்தாள். அவருக்கு இருந்திருந்து வரும் நெஞ்சுவலி வீட்டில் உள்ளவர்களைப் பயமுறுத்தி வைத்திருந்தது. அதனால் வீட்டில் அவரை மீறி எதுவும் நடக்காது. அதோடு அவர்

பணக்கார சம்பந்தங்களையே தேடுபவர். அவர் சொல்வதையே ஏற்கும் தலையாட்டிப் பொம்மைகளாக மனைவியும் மக்களும் இருக்கும்போது இர்சாத் நஜ்மாவை ஏற்பதென்பது நடக்க முடியாத ஒன்று என்பது அவளுக்குத் தெரியும். இதை இர்சாத்துக்கு உணர்த்த வேண்டுமென அவள் எண்ணியிருந்தாள். இன்னும் அதற்கான வாய்ப்புக் கிட்டவில்லை.

# 19.

**"ச்சி..."** எரிச்சலோடு சேட் கொலரைத் தூக்கி விட்டான் இர்சாத். உள்ளத்தின் வெம்மையோடு வியர்வை வேறு சேர்ந்து தகித்தது. தளர்வோடு நடந்து ஆயிசா வீட்டின் முன்னால், உள்ளே போவதா? வேண்டாமா? எனத்தயங்கி நின்றான். வேலிக்கு மேலால் எட்டிப்பார்த்த நித்யகல்யாணிச் செடியில் பூக்கள் கலகலத்தன. மலர்களின் வெண்மையும்..... அவை அசைகின்ற நளினமும் அவளையே கண்முன் நிறுத்தின. மறுகணம் கடவலைக் கடந்து உள்ளே சென்றான்.

"சாச்சீ..."

புத்தகமும் கையுமாக உள்ளிருந்து வந்தாள் நிஸ்ரின்.

வாயில் பட்டும் படாமலும் "நிஸ்ரின்..." என்றான்... அவள் மலர்ச்சியோடு சிரித்தாள்.

"உம்மா தூக்கம்..... தாத்தாங்க கெணத்தடீல..." என்றவள், "றிஸாயா தாத்தா.... நஜ்மா தாத்தா..." எனக் குரல் கொடுத்தாள். அவளது குரல் கயிறாக இருவரையும் வாசலுக்கு இழுத்து வந்தது. உள்ளுக்குள் குழம்பினாலும் நேராக அவன் முகத்தைப் பார்த்த போது சிரித்து விட்டாள் நஜ்மா. அவனுக்கும் மனம் குளிர்ந்தது.

"இர்சாத் நானா..." அவள் இதழ்கள் அசைந்தன.

றிஸாயா அங்கேயே கதிரையில் அமர்ந்து கொண்டாள்.

நஜ்மா உள்ளே சென்று, தேநீர் ஊற்றிக் கொண்டு வந்து, அவன் கையில் கொடுத்தாள். அவன் சிரித்தபடி வாங்கிக் கொண்டான். அவளது மௌன ஊடல் கலைந்தது. தேநீரோடு அவன் தன் இதயமலரின் இனிய முகத்தில் மிளிர்ந்த அழகையும் பருகிக் கொண்டிருந்தான். மறுபடியும்..... நேரில் நின்று பார்த்து மனதிற்குள் மகிழும் மௌன நாடகம் தொடர்ந்தது.

காலச்சரத்திலிருந்து நாட்கள் மணிகளாக உதிர்ந்து கொண்டிருந்தன. சிறுவர் உடைகள் தைத்துக் கொண்டிருந்த மஸீயா, பெரியவர்களின் உடைகளையும் தைக்கத் தொடங்கி-னாள். அவளது தையலின் நேர்த்தியைக் கண்டு அயலில் உள்ளவர்-களெல்லாம் மணமகள் ஆடைகளையும் உடுப்புகளையும் அவளிடம் தைக்கக் கொடுத்தார்கள்.

"காது கழத்துக்கு என்தியாலும் வேங்கிக் கொளோணும் புள்ள" ஆயிசா புலம்பிப் புலம்பியே மகளின் சம்பாதிப்பில் சிறுகச் சிறுகச் சேமித்தாள். ஆனால் மஸீயா 'உம்மாக்கு மால வேங்கோணும்' என மிச்சம் பிடித்தாள். ஆயிசா, தங்கமுலாம் பூசிய மாலையொன்றையும் வளையல்களிரண்டையும் வைத்துக் கொண்டு கல்யாண வீடுகளுக்கு அணிந்து செல்வாள். வந்து அவைகளைப் பத்திரமாக எடுத்து வைப்பாள். அவை வெளிறிப் போன பிறகும் அவற்றையே அணிந்து சென்றாள். அதைக்கண்டு கண்டே உள்ளம் நெகிழ்ந்து போன மஸீயா, எப்படியோ மாலையொன்றை வாங்கித் தாயின் கழுத்தில் அணிவித்தாள். பிள்ளைகள் தாயை ஆசையோடு பார்த்தார்கள். சுருங்கிப் போன அவள் கழுத்திற்கு அம்மாலை எடுப்பாக அமையவில்லை. மெலிந்து எலும்புகள் தள்ளிய அவள் கழுத்துக்குள் மாலை பொருத்தமில்லாமல் மின்னியது.

அப்போது மஸீயாவுக்கு ஒரு உண்மை புரியத்துவங்கியது. 'இதே மாதிரி தானும் அழகிழந்து..... வளமிழந்து..... இளமையை இழந்த பிறகு நகை அணியும் காலம் வந்தால் அப்போது கூட கல்யாணம் நடக்குமோ இல்லையோ' அக்கணத்துக்குள் அவளுள் தோன்றிய வினாக்களுக்கு அவளே சாதகமான பதில் கூறிச் சமாளித்தாள்.

தாயின் மாலையணிந்த கழுந்து அவள் மனதில் நிலைத்தது. கண்ணாடிக்கு முன்னால் போய்நின்று அதில் தெரியும் தன்

உருவத்தைப் பார்த்தாள். அங்கே.... அழகும் இளமையும் கைகோத்தன. “நான் முந்தி எங்கட மஸீயாவ மாதிரி தான்” என ஆயிசா அடிக்கடி கூறுவது ஞாபகத்திற்கு வந்த போது..... அவளது இதயம் விம்மித் தணிந்தது. உடனேயே தன் எண்ணத்தைத் திசை மாற்றிக் கொண்டு அவ்விடத்தை விட்டகன்ற போது,

“இத எடுத்து வெய் மகள்” கைக்குள் மாலையைப் பொத்தியவாறு வந்தாள் ஆயிசா.

“அதப் போட்டுக்கொங்கொ உம்மா அது ஒங்கட கழுத்துல ஈச்சியது எங்களுக்கும் ஆசதானே?”

“வேணம் மகள்.... மத்தவங்க கண்டாலும்..... எங்கட எளிய தனத்துக்கு இதெல்லம் வேணம்.”

பிள்ளைகள் எவ்வளவு வற்புறுத்தியும் ஆயிசா கேட்கவில்லை. கழுத்தில் நகையணிந்து கொண்டு இருப்பது தங்கள் ஏழ்மைக்கு மீறிய செயல் என நினைத்தாள். அதனால் பிள்ளைகள் ஆசையோடு கேட்டுக் கொண்ட போதும் கூட,

“தேவைக்குப் போடியன்” எனக் கூறி மறுத்து விட்டாள். அந்தளவுக்கு அவளுள் தாழ்வு மனப்பான்மை மேலோங்கியிருந்ததை றிஸாயாவால் மட்டுமே உணர முடிந்தது.

# 20.

**இரவின்** கருமை கழுவப்பட்டுக் கொண்டிருந்த இளங்காலைப் பொழுது...... ஸுபஹு தொழுது, யாஸீன் ஓதிவிட்டு முன்வாசல் கதவைத்திறந்தாள் ஆயிசா. வாசற்படியில் நின்றவள் "நல்ல காத்து" என்றபடி முற்றத்திலிறங்கினாள். தாயின் பின்னாலேயே றிஸாயாவும் வந்து நின்றாள். மேனியில் மோதிய குளுகுளுகாற்று அவள் மனதிற்குப் புத்துணர்வையளித்தது. மலர் தாவும் வண்டாக அவள் விழிகள் சுற்றி வந்தன. நிஸ்ரின் மண்நிரப்பி..... உரம் போட்டு பேணிவரும் பூங்கன்றில் நோஞ்சான் பூவொன்று பூத்திருந்தது. நீரூற்றாமலேயே மதர்த்துச் செழித்த நித்யகல்யாணிச் செடி பூத்துச் சொரிந்தது.

"உம்மா... இங்க பாருங்கே. இது பூத்து"

"ம்" ஆயிசா பாட்டுக்கு "உம்" கொட்டி விட்டு அப்பால் சென்றாள். காற்றில் குலுங்கிய பூக்கள் றிஸாயாவின் மனதிற்கு மகிழ்ச்சியையளித்தன. அவைகளைப் பார்த்துப்பார்த்து அவள் முற்றம் முழுவதும் வலம் வந்தாள். மஸீயா தன் வேலையைத் தொடங்கிவிடுவாள் என்ற ஞாபகம் வந்த போது தான் அவளுக்கு உதவுவதற்காக உள்ளே சென்றாள்.

வேலியோரத்தில் காய்ந்த கொப்பொன்றில் சுள்ளி ஒடித்துக் கொண்டிருந்த ஆயிசா "நிஸ்ரின்" எனக்குரல் கொடுத்தாள். உடலில் நோய்கள் இல்லாதிருந்தால் அவள் இவ்வாறு தான் காய்ந்து விழுந்த ஓலைகளைத் தூக்கிக் கொண்டு வருவாள். விறகுக்

கட்டைகளைப் பொறுக்குவாள். வேலியைச் சமைப்பாள். வேலை செய்தே பழக்கப்பட்ட அவளால் ஒய்ந்திருக்க முடியாது. சோம்பியிருக்கவும் மாட்டாள்.

அன்று மாலை இர்சாத் வந்த போது.....

"அர்சாத் நானா வெளிநாடு போகப் போறாம்" என்றான். இச்செய்தியை ஆயிசாவால் ஏற்கமுடியாதிருந்தது. அவன் குடும்பத்தில் அக்கறையற்று இருந்தாலும் கூட ஆயிசாவுக்கு அவனைக் காணாதிருக்க முடியாது. "அவளுகளுக்குச் சல்லி ஆச அதுதான்" எனத்தனக்குத் தானே கூறிக்கொண்டாள். தங்கைமாருக்-காகப் போக நினைக்காதவன், இப்போது போகப்போகிறான் என்பதை நினைத்த போது அவளுக்குக் கவலையாக இருந்தது.

"அர்சாத் நானா போறது நல்லம் தானே சாச்சி" எனச் சமாளித்தான் இர்சாத். ஆனால் அர்சாத்துக்குக் கொடுத்த சீதனப் பணத்தாலேயே இஸ்மத் அவனை அனுப்ப முயல்வதை இர்சாத் கூறாதிருந்தான்.

மறுநாள் அர்சாத் பயணம் சொல்ல வந்தான். தாயோடும் தங்கைமாருடனும் பயணம் சொல்லிக் கொண்டான்.

ஸபீனாவை இடைக்கிடையே போய்ப்பார்க்கும் படியும் கேட்டுக்கொண்டு அவன் புறப்பட்டபோது ஆயிசாவும் பெண்மக்களும் கண்கலங்கினார்கள்.

அர்சாத் போய் திங்கள் பல கழிந்தன. அவன் கேட்டுக் கொண்டபடி ஆயிசாவும் பிள்ளைகளும் ஸபீனா வீட்டுக்குப் போய் வந்தார்கள்.

இப்போது ஸபீனா மனதில் ஒரு புதுக்கவலை உருவாகி-யிருந்தது. அர்சாத்தின் உழைப்பு குமர் கரை சேர்க்கப் போய்-விடுமோ, விதவிதமான உடைகள், நகைகள், எல்லாம் கற்பனை-யாகி குமர்களுக்காகி விடுமோ என்பதே அவளது கவலையானது. அதை அவள்தன் வீட்டாரிடம் வெளிப்படுத்தி பகிர்ந்து கொண்டாள்.

"அதுகளும் பாவம் தானே.." என்றாள் ஸபீனாவின் உம்மும்மா.

"நீ யோசிச்சாத அத நான் பாத்துக்கொளியன்." எனத் தங்கைக்குத் தெம்பூட்டினான் இஸ்மத். நாளுக்கு நாள் கடிதத்திற்குக் கடிதம் அர்சாத்திற்கு வீட்டாரைப் பற்றிய எண்ணம் மறக்கடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவனுக்கும் அவன் குடும்பத்திற்குமிடையில் பாலம் துண்டிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

# 21.

"பாத்துமா தாத்தா"

"ஆ.... வாங்கொ நஜ்மா..... வாங்கொ அயிசாமாமி.."

சிரித்தபடி அழைத்தாள் பாத்திமா.

இருவரும் வீட்டினுள் நுழையும்போது வாசலில் எதிர்ப்பட்டான் இஸ்மத். அலட்சிய முகத்தோடு,

"அடேய் இந்தப் புட்வெமெல்லாத்தைம் ஒரத்துக்காக்கு"

கதிரைகளை நடுவாசலுக்கிழுத்து விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளை அதட்டியபடி அவன் வெளியில் கிளம்பினான்.

"ஸபீனா எங்கியன்?"

"தங்கச்சீ...." உள்ளே குரல் கொடுத்தாள் பாத்திமா. ஸபீனா வந்தாள். மற்றவர்களும் வந்தார்கள்.... பேசினார்கள், இஸ்மத்தின் மனைவியைத்தவிர. அவள் எட்டிப் பார்த்து விட்டு உள்ளே போய் விட்டாள். பாத்திமாவின் முன்றானையைப் பிடித்துக்கொண்டிருந்த சின்னஞ் சிறுமி குறும்பாகப் பேசியது. நஜ்மா அவளை அருகே இழுத்து மடியில் அமர்த்திக் கொண்டு பேச்சுக் கொடுத்தாள்.

"பாட்டெல்லாம் பாடிய..." என்றாள் ஸபீனாவின் உம்மும்மா.

"பாடிக்காட்டுங்கே" எனக் கொஞ்சினாள் நஜ்மா. "மகள் அந்தச் சவ்க்காரப்பாட்டப்பாடுங்கொ" எனத் தொடர்ந்தாள் கிழவி. அவள் விளம்பரத்தையே அவ்வாறு கூறினாள். கிழவி அர்சாதைப் பற்றியும் பேச்சுக் கொடுத்தபோது.....

"அர்சாத் சம்பாரிச்சி ஆருக்குக் குடுக்கியண்டு பாப்பமே' என்றாள் மூன்றே வயதுடைய அந்தக் குழந்தை. அதோடு கிழவியின் வாய் அடைபட்டது. பாத்திமா சிறுமியைத் தூக்கிக் கொண்டு விளங்காமல் நழுவினாள். நடந்ததெல்லாம் றிஸாயா-விடம் ஒப்புவித்தாள் நஜ்மா. அவள் எதிர்பார்த்தது தான்.

குழந்தைகள் பேசுவது, உள்ளெடுக்கப்பட்ட பெரியவர்களது பேச்சுக்களின் பிரசவிப்புகளே என்பதை அவள் அறிந்திருந்தாள்.

"வாப்போவ் ஏழு சேனை நெருப்பும் அவண்ட மொகத்தில"

"ஆரடயன் உம்மா?" ஆயிசா கூறியது புரியாமல் மஸீயா கேட்டாள்.

"அவட நானாவச் செல்லிய.." றிஸாயா 'அவ' எனக்குறிப்பிட்-டது ஸபீனாவை. அவர்கள் அவ்வாறு தான் ஸபீனாவைக் குறிப்பிடுவார்கள்.

முற்றத்தில் நின்ற நிஸ்ரின்,

"றிஸாயாதாத்தா ஆரோ வார..." என்றபடி ஓடிவந்தாள்.

"ஆரன்?" ஒரு மித்துக் கேட்ட நஜ்மாவும், றிஸாயாவும் பரபரப்படைந்தனர். கதிரைகளை ஒழுங்கு படுத்தி திரைச் சேலைகளைச் சரிசெய்து சில கணங்களுள் வீட்டைச் சீராக்கினர்.

"உம்மா ஒங்கட பொடவ பிஞ்சி " நிஸ்ரின் காட்டினாள். கிழிந்த இடத்தை மறைத்து முன்றானையைத் தலையில் போட்டுக் கொண்டு வாசலில் நின்று எட்டிப் பார்த்தாள் ஆயிசா. கடவலைக் கடந்து கொண்டு வந்தவர்களுக்குப் பின்னால் சர்மிளாவைக் கண்டாள்.

"வாங்கொ..."

"இவங்க எங்கட தாத்தாவும் மகளுகளும்" வீட்டினுள் நுழையும் போதே அறிமுகம் தொடர்ந்தது. றிஸாயாவும், நஜ்மாவும்

சிரித்துக் கொண்டு வாசலுக்கு வந்தனர். மஸீயாவும் தைப்பதை நிறுத்தி விட்டுப் பின்னால் வந்து நின்றாள்.

"இங்கால வாங்கொ மஸீயா" என்ற சர்மிளா. "அவதான் மூத்த மகள்" என மஸீயாவைக் காட்டினாள். றிஸாயாவையும் நிஸ்ரினையும் காட்டி விட்டு "இவதான் நஜ்மா" எனக்கூறி நஜ்மாவின் கன்னத்தில் கிள்ளினாள்.

புறப்படும் போது, அவர்கள் ஆயிசாவோடு ஏதோ கூறியதையும் அவள் முகம் மலர்ந்ததையும் றிஸாயா கண்டாள். என்ன கூறினார்கள் என்பது அவளுக்குத் தெரியாது. ஆனால், அவள் பிள்ளைகளைப் பற்றியதல்லாமல் அவள் முகமலர்ச்சிக்குக் காரணம் வேறு எதுவாக இருக்க முடியும் என எண்ணிக் கொண்டாள் றிஸாயா. தங்கள் வீட்டைப் பார்த்து விட்டு அவர்கள் என்ன நினைத்திருப்பார்களோ. என்ற தாழ்வுணர்ச்சியில் கூனிக்குறுகிப் போயிருந்தார்கள் றிஸாயாவும் நஜ்மாவும்

"தாத்தா எப்பிடியன்...?" போகும் போது சர்மிளா கேட்டாள்.

"பஸத்தான புள்ளைக" என்ற அவள் சகோதரி,

"இந்தப் பஸந்து ஒத்தரடைம் கண்ணில படல்லயா?" எனக்கேட்டாள்.

"பொண் பார்க்க வாரவங்க சொத்து எம்மட்டு எடுக்கேலுமன் எண்டு தான் பாக்கிய" என்றாள் சர்மிளா.

# 22.

**சின்னச்** சின்னச் செடிகளுக்குள் புகுந்து விளையாடி அழகு காட்டியது மாலைத் தென்றல். அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் றிஸாயா.

"றிஸாயா தாத்தா..." பூச்சி கடித்த இலைகளைத் தேடி அப்புறப்படுத்திக் கொண்டிருந்த நிஸ்ரின் பேசினாள்.

"இந்தக் கொடி இவ்ளவ் சுருக்க வளந்தத்தப் பாருங்கே" நிஸ்ரின் காட்டினாள்.

"சின்னச் சின்னப்பூ நெறச்சி எனா" என்றபடி றிஸாயா பார்த்தது அதன் வளர்ச்சியையல்ல. செந்நிற நட்சத்திரங்களாய்ப் பூக்களைத் தாங்கி மென்தென்றலில் அசைகின்ற கொடியையும்..... கொடியில் தலைசீவித் தெறிக்கின்ற மஞ்சள் வெயிலின் அழகையுமே அவள் ரசித்தாள்.

அடுத்த வினாடிகளில் அவள் வாசற்படியில் அமர்ந்து செக்கர் வானில் எதையோ தேடத்தொடங்கினாள். அந்திமாலை வானின் தங்கப்பந்துக்குள் ஏதோ இன்பம் புதைந்து கிடப்பது போன்ற.... அவளுக்கே புரியாத ஓர் உணர்வு.

ஒவ்வொரு அஸ்தமனத்தின் பின்னாலும் ஒவ்வொரு விடிவு இருப்பதாலோ என்னவோ விடிவைத் தேடும் அவள் இதயம் அஸ்தமனப் பொழுதில் குதூகலிக்கிறது.

செடிகளுக்கு நீர் ஊற்றுவதற்காக நஜ்மா வாளியில் நீரோடு வந்தாள்.

"மகள் முத்தத்தில கொஞ்சும் தண்ணி தெளீங்கொ தூசி பறக்கிய..." எனக்கூறியபடி றிஸாயாவுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டாள் ஆயிசா.

"போன வரிசம் இவளவ்கு எங்கட அர்சாதட கலியாணம்..... திண்டு தண்ணி குடிச்சிய மழ" தன்பாட்டில் பேசினாள் ஆயிசா. சிறிது நேரம் அமைதி நிலவியது. பின் அவளே தாழ்ந்த குரலில் "மஸீயாக்கும் இருவத்தேழு வயஸாகீட்ட" என்றவள் தன்னுள் ஊறிக்கிடந்த கவலையை ஊதி விட்டது போல் பெருமூச்செறிந்-தாள்.... அவளது வேதனையின் வெளிப்பாடு பக்கத்திலிருந்த றிஸாயாவின் மனதை முள்ளாகக் கீறியது. அவள் தாயின் கவனத்தைத் திசைதிருப்ப முனைந்தாள். ஆயிசா கூறிய எதுவும் விளங்காதவள் போல்....

"உம்மா அந்த ஓலயப் பாருங்கே" விடைபெறப்போகும் வேளை தென்னோலையில் தஞ்சம் கொண்ட மஞ்சள் வெயிலைக் காட்டினாள்.

"ம்.. பேய் நெல்லுக்காச்சிய வெய்ல்.." அசுவாரஸ்யமாகக் கூறினாள் ஆயிசா.

"எங்கியன் உம்மா?" கேட்டபடி வந்தாள் நிஸ்ரின். றிஸாயா சிறுமியாக இருக்கும் போதும் அவளிடம் ஆயிசா இவ்வாறு கூறியிருக்கிறாள். அப்போது.... மரக்கிளைகளில் அவள் தாய் சொன்ன காட்சியைத் தேடியிருக்கிறாள்.

இப்போது நிஸ்ரின், மேலே பார்த்து விட்டு மென்புன்னகையொன்றை உதிர்த்தாள்.

ஆயிசா மீண்டும் பிள்ளைகள் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அர்சாத்தைப் பற்றிய எந்தச் செய்தியும் அவர்களுக்குக் கிட்டவில்லை. அதனால் மகனின் நலன் அறியும் ஆவலில் அடிக்கடி மருமகள் வீட்டுக்குப் போனாள் ஆயிசா. ஆனால், அர்சாதின் தகவல் பரிமாற்றமெல்லாம் இஸ்மத்தோடு

நடைபெற்றுக் கொண்டிருப்பதை அறிந்து அவள் மனம் நொந்தாள்.

"ஏண்ட புள்ள...... மச்சன் மச்சன் எண்டு அவன் தடமாறிய" அவள் மனம் எரிந்தாள்

"யோசிச்ச வேணம் நானா நல்லாயிருச்சிய தானே..." மஸீயா சமாளித்தாள்.

"அந்தப்பரீனா..... அஸ்மாவோட போனால் சிரிச்சிப்பேசிய.... மரலியாவோட போனால் மொகத்தத் திருப்பிக்கொண்டு போற" மீண்டும் இஸ்மத்தின் மனைவியைச் சாடினாள்.

"அவங்க அப்பிடித்தான் உம்மா.... அவங்கட கொணத்த மாத்தேலுமன்" றிஸாயாவும் தாயைச் சமாளிக்க முயன்றாள். இவருவரும் மாறிமாறித் தாயின் மனதை ஆற்றினர். ஆயினும் ஆயிசாவின் மனம் அமைதி காணவில்லை. குமைந்து கொண்டிருந்தது. பிள்ளைகள் எதையாவது கேட்டும் சொல்லியும் அவள் முகத்தில் சிரிப்பை வரவழைக்க முயன்றனர்.

காலத்தின் பந்தாட்டத்தில் நாட்கள் வீழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தன.

றிஸாயா ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்து போட்டிப்பரீட்சையும் எழுதியிருந்தாள். அவளுக்குக் கிடைத்த தகவல்களின் படி, ஆசிரிய நியமனம் தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அவள் அதைத் தாயிடம் கூறி அவளைச் சந்தோசப்படுத்தினாள்.

'இப்பிடிச்சரி உம்மா கொஞ்சும் சந்தோசப்படட்டுமே...' என்பதே அவளது எண்ணமாக இருந்தது. மஸீயா குடும்பச் சுமையோடு ஏமாற்றங்களையும் சுமந்தாள். ஆனால், அவளை உம்மாவை சகோதரிகளை தன் ஏக்கங்களை எல்லாமே மனதில் சுமந்தாள் றிஸாயா.

# 23.

**ஆயிசாவின்** உற்சாகம் கரைகடந்தது. வேலிக்கருகில் போய் நின்று ஸபீயாவோடு பேச்சுக் கொடுத்தாள். பேச்சுவாக்கில், "எங்கட றிஸாயாக்கு டீச்சர் வேல கெடச்சீச்சி" என்றாள்.

"அப்பிடியா?" ஸபீயா ஆச்சர்யமாகக் கேட்டாள்.

"நஜ்மாக்கும் எழுதிப் போட்டீச்சி" என்றாள் மீண்டும். அந்தத் தகவல் பரிமாற்றமே போதுமானது. ஸபீயா அதை ஊரெங்கும் தெளித்தாள். இந்தச் செய்தி ஸபீனா வீட்டுக்கும் இறக்கை கட்டியது. ஸபீனா வீட்டுக்கு வெகுநாட்கள் செல்லாததால் இவ்வேளையில் நஜ்மாவோடு அங்கு சென்றிருந்தாள் றிஸாயா. கிழவியும் பாத்திமாவும் வழமைபோல இருந்தார்கள். மாறாக ஸபீனாவின் உம்மா நேயமாகக் கதைத்தாள்..... ஸபீனாவும் பரீனாவும் அதிகமதிகம் உபசரித்தார்கள்.

"சோறு திண்டுட்டுத்தான் போகோணும்" ஸபீனா வற்புறுத்தினாள்.

"இல்ல சொனங்கினால் உம்மா பயப்புடியொண்டும்" அவசரப்பட்டாள் றிஸாயா, நஜ்மாவும் பக்கதிலிருந்து அவளைச் சுரண்டிக்கொண்டிருந்தாள். ஸபீனாவைச் சமாளித்து விட்டு இருவரும் செல்வதற்காக எழுந்து, சில அடிகள் வைத்தபோது.... றிஸாயாவின் கையைப் பிடித்து நிறுத்தினாள் பரீனா. "இரீங்கொ" என்றவள் தன் முன்றானையால் கதிரையிலிருந்த தூசியைத் துடைத்து விட்டாள். றிஸாயாவும் நஜ்மாவும் ஒருவரையொருவர்

பார்த்துக்கொண்டனர். றிஸாயா நஜ்மாவைப் பார்த்து மெல்ல நகைத்தாள். நஜ்மாவின் இதழ்களிலும் ஓர் இழிவுப்புன்னகை தவழ்ந்தது. "நாங்க தான் சோறாக்க வேணும்" எனக்கூறி அங்கிருந்து விடுவித்துக் கொண்டு வந்துபோது...... வீட்டில் மஸீயா சமைத்துக் கொண்டிருந்தாள். ஆயிசா அவளுக்கு உதவியாக தேங்காய் துருவிக் கொண்டிருந்தாள்.

அன்று பின்னேரம் ஆயிசா பிள்ளைகளிடம் ஸபீனா வீட்டுக்குப் போன செய்திகளை விசாரித்துக் கொண்டிருந்தாள். அங்கு, அவர்களின் உபசரிப்பைக் கூறி நஜ்மா சிரித்தாள். அவள் சிரித்துக் கொண்டே திரும்பிய போது..... மென்முறுவலோடு வாசலில் நின்றான் இர்சாத்.

"கண்டீக்குப் போக வாரா?"

"எங்கைக்கன் இர்சாத்?" அழைப்பு புதிதாக இருந்ததால் இவ்வாறு கேட்டாள் றிஸாயா.

"வாப்பாக்குத் தெரிஞ்ச ஒரு எடத்துக்கு..... வாப்பா போகச்சென்ன...... அஸ்மா மைனியும் போற..... நிஸ்ரின் வாரா?" நிஸ்ரினின் பெயரில் அவன் நஜ்மாவுக்கு அழைப்பு விடுத்தான்.

நிஸ்ரின் உம்மாவைப் பார்த்தாள்.

"றிஸாயா தாத்தா போறா?" தன்னுள் எழுந்த ஆசையைக் கேள்வியில் மறைத்தாள் நஜ்மா.

"மஸீயா தாத்தாவ உட்டுட்டு எனக்குப் போக ஏலாதே" என்றாள் றிஸாயா.

"அஸ்மா போறண்டால் ஆரு சரி போங்கொ.... நிஸ்ரினுக்குச் சோதின ஈச்சிய சுட்டி நஜ்மா போங்கொ" ஆயிசா இவ்வாறு கூறியபோது நஜ்மாவின் இதயச் சுவர்களுக்குள் 'சோ'வெனச் சொரிந்தது மகிழ்ச்சி மழை..... ஆனால், அந்த மகிழ்ச்சியை நீடிக்க விடாது றிஸாயா தடைபோட்டாள். இது இர்சாத்துக்கும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. அந்த ஏமாற்றத்தை அவன் அஸ்மாவோடு பகிர்ந்து கொண்டான்.

"நஜ்மா வரப்போன..... றிஸாயா உடல்ல மைனி"

"என்தியன்?" திகைப்போடு கேட்டாள் அஸ்மா.

"பொறத்தி ஊடொண்டுக்குப் போறது சரியில்லயாம்.."

கூறிவிட்டுச் சோர்வோடு அப்பால் நகர்ந்தான் இர்சாத். தலையில் கைவைத்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள் அஸ்மா. நாலைந்து நாட்களுக்கு முன் வீட்டில் நடந்தவை அவளது மனதில் விரிந்தன....

"வாப்பா இர்சாதுக்கு அயிசச்சாச்சீட மகளொண்ட எடுத்துக் கொண்டால்?" என அஷ்ரப் கேட்ட போது "அயிசாட மகள் இர்சாதைம் பாக்க மூப்பலியன்" என்றார் கரீம்.

"றிஸாயாவ?"

"மூத்தது ஈச்சச்செல்ல ரெண்டாவத எப்பிடியன் எடுக்கிய?"

"இல்லவாப்பா"

"அத உடு" தொடர விடாமல் மகனின் பேச்சைத் துண்டித்-தார் கரீம். அவன்வாய் பொத்திய போது அவர் தொடர்ந்தார்.....

"ஒனக்கு ஹனிபா ஹாஜியாரத் தெரியுமோ?"

"தெரியா"

"எங்கட பெரிய கடைக்கு ரெண்டு மூணு பைனம் வந்துட்டுப் போன"

"அந்தக் கண்டி ஹாஜியாரா?"

"ஓ.... நான் ஹஜ்ஜிக்குப் போன நேரம் அவரப் பழக்கமான. அவருக்கிட்டக் கோடிக்கணக்குல சல்லீச்சி.... எல்லாச் சொத்துக்கும் ஒரேயொரு மகள் மட்டுமாம்..... கறுப்புத்தானாம்."

"இனி?"

"மகள் கறுப்பண்டு அவருக் கவல இல்ல. சொத்தீச்சிய சுட்டி..... அப்பவே பேசிப் பேசி வாராம். 'புள்ளயப் படிச்ச உட்டீச்சி இன்னம் நாலஞ்சி வரிசம் போகட்டும் முடிச்சிக் குடுக்க' எண்ட அவர்"

"ம்"

"நான் எங்கட இர்சாத்துக்குப் பேசிப்பார்த்த.... அவரோட பழகின மொஹப்பத்தட மாதிரிக்கு அவரு புரியப்பட்ட. பேசியும் நாலு வரிசமாகீட்ட"

"இர்சாத்துக்குத் தெரீமா?"

"தெரியா..... இப்ப தெரியாமீச்சிய நல்லம். யாவாரத்தப் பழகிக் கொளட்டும் எண்டு தான் நான் ஊட்டுக்காகீச்சியதும். டைம் கிட்டவாகிச் செல்லிக் கொளோம்"

"அந்தப் புள்ளைகளும் நல்லதுக" மிக மெதுவாகக் கூறினான் அஷ்ரப்.

"எங்கியாலும் பேசச் செல்லு..... நாங்க ஒதவி செய்ததானே" கூறிவிட்டு அவர் அஷ்ரபைப் பார்த்த போது..... அவன் தரையைப் பார்த்தபடி யோசனையிலிருந்தது அவருக்குத் திருப்தியாகவில்லை.

"ஒனக்கு சொத்துகளோட பொண் எடுத்த..... சாஜஹானுக்கு அதைபாக்க மிச்சம் எடுத்த..... எளயவனும் பாவமலியன்"

"சரிவாப்பா"

அவரது முடிவுக்கு மகன் இணங்கினான். ஆனாலும், அவருள் ஒரு புதுப்பயம் ஏற்பட்டது. அதற்கான மாற்று நடவடிக்கையாகவே அவர் அஸ்மாவைக் கண்டிக்கு அனுப்பினார்.

# 24.

**இர்சாதின்** மனதினுள் மூடிவைத்த அவளது நினைவுகள், தளம்பித்தளம்பி வெளியில் பாயத்துடித்தன. அவனும் தவிக்கும் தன் இதயத்தை அவளிடம் கொட்டி ஆறுதல் தேடத்துணிந்தான். பல தடவைகள் தன்னுள் ஒத்திகை பார்த்துக் கொண்டு அவன் தயாரான போதெல்லாம் அங்கே யாராவது வந்து விடுவார்கள்.

அவன் இங்கே இவ்வாறு ஒத்திகை பார்க்க... வீட்டில் வேறோர் காட்சி அரங்கேறத் தயாராகிக் கொண்டிருந்தது.

சுடச்சுடக் கோப்பியைக் கொண்டுவந்து மாமனாருக்கு நீட்டினாள் அஸ்மா.

"ஹாஜியார் என்தியன் அஸ்மா சென்ன?" தஸ்பியை உருட்டியபடி கேட்டார் கரீம்.

"இந்த வரிசத்துக்குள்ளே கலியாணத்த எடுக்கோம் எண்ட"

"ஆ... வேற?"

"கடய ஒடச்சிக் கெட்டிக்கொணடீச்சியாம்"

"கெட்டட்டும்.... கெட்டட்டும்...... அது எங்கட இர்சாதுக்குத்தானே இனி" ஒரு மிடர் கோப்பியை உறிஞ்சியபடி அஸ்மாவை நோக்கினார்.

"கஷ்டப்பட்டுத் தேங்கா கொணந்த என்துக்கன் எண்டு அவரு ஏசிய"

“கஷ்டம் என்தியன்...... வேன்ல தானே கொண்டுபோன? சின்னமீனப் போட்டுத்தானே.... பெரிய மீனப்புடிச்சோணும்?” தஸ்பிமணிகள் அவரது கைக்குள் படாத பாடு பட்டுக் கொண்டிருந்தன.

“மரியம் பீபீ ”

உற்சாகம் கரைகடக்கும் போது மனைவியை அவர் முழுப்பெயரிலும் தான் அழைப்பார். மர்யம் வந்து அவருக்குப் பக்கத்தில் தரையில் அமர்ந்தாள். அவள் மனதிலும் பெருமை நிரம்பி வழிந்தது.

“கேட்டுக்கொண்டோ ஈந்த?”

“ஓ”

“லேசான சொத்தோ இர்சாதுக்குக் கெடச்சப்போற? பேரப்புள்ளைகளுக்கெல்லம் சொத்து வேங்கிப் போட்டு ஹாஜியாரு”

“எங்கட புள்ளைகளுக்குக் கெடச்ச எடமெல்லம் அப்பிடித்தான்” என்றாள் மர்யம் பெருமை பொங்க.

“எனக்கிப்ப நிம்மதி” கரீம் நாற்காலியில் நிமிர்ந்து சாய்ந்தார். அஸ்மா அங்கிருந்து மெல்ல நகர்ந்தாள். அவள் மனக்கண்களில் அவள் பார்த்து விட்டு வந்த ஸுலைஹாவின் முகம் வந்து நின்றது.

“பொண் எப்பிடியண்டு மாமா கேக்கல்ல.... மாமியும் கேக்கல்ல” என அவள் எண்ணிக்கொண்டாள். கேட்டாலும் அவளால் என்ன சொல்ல முடியும்? பார்த்தவுடன் அவள் கறுப்பு நிறம் தோன்றும். உற்று நோக்கும் போது ஒரு எழில் தோன்றும். அவள் குணங்களைப்பற்றி எதுவும் தெரியாது.

அஸ்மா குசினிக்குச் சென்று ரொட்டிக்கு மாவைப்பிசையத் தொடங்கினாள். அவளது மனத்திரையில் மஸீயா தோன்றினாள். 'அவள் இர்சாத்தை விட மூப்பு' என்றது மனம். அடுத்து றிஸாயா வந்தாள்.... நஜ்மா வந்தாள்....

'இதுகட மொகத்தப் பாக்கியதே சந்தோசம்' என அவளது உள்மனம் கூறிக்கொண்டது.

இரவு குழந்தைகள் தூங்கிய பிறகு அஷ்ரப் கேட்டான். "போன எடம் எப்பிடியன்?"

"நல்லம்" என்றாள் அஸ்மா சுருக்கமாக "ஊடு எப்பிடியன்?"

"பெரிய ஊடு.... ஊட்டு மனிசருக மூனு பேரு தான்"

"ஹாஜியாலும் பொண்டாட்டியும் மகளுமோ?"

"ஓ..... ட்ரைவர்மார் ரெண்டு பேரு, கடைக்குப் போற பொடியன், சோறாக்கிய குட்டி, எல்லாரும் ஊட்டுல தானே நிச்சிய?" அஷ்ரப் அமைதியானான்.

"பொண்ணப்பத்திக் கேக்கல்லயே?"

"கேட்டு என செய்யவன்? பொண் எப்பிடி இருந்தாலும் வாப்பா சென்னால் இர்சாத் முடிச்சத்தான் வேணும்"

மாமனாருக்கு வரும் நெஞ்சு நோவை நினைத்துக் கொண்டு மௌனமானாள் அஸ்மா.

இர்சாத் சொன்ன செய்தியொன்றால் நிஸாயா இடிந்து போயிருந்தாள். சகோதரிகளோடு சேர்ந்து அவளும் தைத்த உடுப்புகளை மடித்துக் கொண்டிருந்தாள். நஜ்மாவும் நிஸ்ரினும் தாயின் இறந்தகால நினைவுகளுக்குக் கொக்கிபோட்டுக் கொண்டிருந்தார்கள். நிஸாயா மட்டும் எதுவும் பேசாதிருந்தாள். 'அவன் முடிச்சிட்டாம்' என இர்சாத் கூறிய வார்த்தையில் அவள் இதயம் நொறுங்கிப் போயிருந்தது..... இதுவரையும் அவள் மாயமானை விரட்டி ஓடிக்கொண்டிருந்தாள்..... கையில் பிடிபடும் என்ற நம்பிக்கையில்லாத போதும் தென்படுவதால் விரட்டிக் கொண்டிருந்தாள். இப்போது அவள் என்ன செய்வதென்றறியாத நிலையில் இருந்தாள். உடுப்புகளை மேசைமேல் அடுக்கி வைத்து விட்டு, உம்மாவைக் கவனித்தாள். உம்மா இளமைக்கால நினைவுகளை மீட்டிக் கொண்டிருந்தாள்.

"எங்கட அழ்க்காமத்துக்குப் போனால் நான் வாரல்ல.... குறிஞ்சன் கொடீல உஞ்சில் ஆடிய..... சிமிட்டிக்க பிச்சித் தின்னிய"

"அதென்ன காயன் உம்மா?" நஜ்மா கேட்டாள்.

"அதுக இப்ப இல்ல.... அங்க எங்கடுட்டுப் பின்னுக்கு பக்கினிக்க மரம்.... மௌலங்க மரம் எல்லம் ஈந்த" நஜ்மா புரியாமல் றிஸாயாவைப் பார்த்தாள். அவள் 'தெரியாதென' உதட்டைப் பிதுக்கினாள்.

"எங்கட காணில மாங்கமரமொன்டீந்த இப்பிடி" ஆயிசா கையை சரிவாக வைத்துக் காட்டி விட்டுத் தொடர்ந்தாள்..." நாங்க அதிலேறி குறிஞ்சன் கொடீல எறங்கிய. பிலா மரமொண்டீந்த இப்பிடி புழுந்துக் கொண்டு" கையைக் கிடையாக வைத்துக் காட்டினாள்.

'உம்மா இதமான ஒரு கிராமியச் சூழலில் சுமைகளற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்திருக்கிறாள்' என எண்ணியது றிஸாயாவின் உள்ளம்.

தொடர்ந்தும் அவளது நாட்கள் சோகப்பக்கங்களாகவே புரட்டப்பட்டுக் கொண்டிருந்தன. அவள் எதிர்பார்த்தபடி ஆசிரிய நியமனமும் அவளுக்குக் கிடைக்கவில்லை. அதுவும் இஸ்மத்தின் நண்பரின் தங்கைக்குக் கிடைத்திருந்தது. இது கூட இஸ்மத்தின் வேலையென ஆயிசா நினைத்தாள். இது இஸ்மத்தின் வேலையாகத்தானிருக்குமென றிஸாயாவும் நம்பினாள். அவன் அப்படிப்பட்டவன் தான். தங்கள் குடும்பம் கரைசேர விடாமல் இப்படியே இந்த இஸ்மத் தடை போட்டுக் கொண்டிருந்தால் தாங்கள் கரைசேர்வதெங்ஙனம்?" என எண்ணி அவள் உள்ளம் இடிந்தாள். ஆயிசா அவனுக்குச் சாபமிடத்தொடங்கினாள்.

"தெரியாம ஏச வேணம் உம்மா" என்றாள் மஸீயா

"மைனீட காதுல புழுந்தால் சரியில்ல" என்றாள் நிஸ்ரின் "காதுல புழட்டுமே.... எங்களுக்கு அவங்களால என்தியன் பொரோசனம்? சோத்துக்கு உப்போ கறிக்கு மௌகோ?" அவள் தன் ஆத்திரத்தைப் பேசியாவது குறைத்துக் கொள்ளட்டும் என தாயைப்பேசவிட்டுப் பார்த்திருந்தாள் றிஸாயா.

# 25.

**மின்விசிறி** சுழல்கின்றதா அல்லது தன் தலை தான் சுழல்கின்றதா? என இர்சாதுக்குப் புரியவில்லை. ஆனால், சுழலுகின்ற அதன் சிறகுகளுக்கு மத்தியில் அவன்.... அவள் முகத்தையே கண்டான்.

வாப்பா திடீரென்று இப்படியொரு குண்டைப் போடுவா-ரென அவன் எதிர்பார்க்கவில்லை. 'வாப்பா இப்பிடிச் செல்வீட்ட' என எண்ணியெண்ணித் தளர்ந்தான்.

கரீம் பெருமையாக அவனிடம் திருமண விடயத்தைப் பற்றிக் கூறினார். அதனைக் கேட்டபோதே..... இர்சாத் திடுக்கிட்டான்.... அவ்வேளை.... அவனது இதயம் ஒரு கணம் நின்று..... துடிப்பதாக அவன் உணர்ந்தான்.

"வாப்பா"

"நீ பேசாத.... நான் எல்லம் பாத்துக் கொளியன்"

"இல்ல.... இப்பவே என்துக்கன்?"

"இப்பவல்ல அஞ்சாறு மாதம் போகும். நீ யாவாரத்தப் பாத்துக்கொ.... எல்லம் நானாங்க செய்தொண்டும்" மகன் கூச்சப்படுகிறான் என்ற நினைப்பில் கூறிவிட்டு அவர் அமைதியாக எழுந்து சென்றார். அவனது வாய் அடைக்கப்பட்டது. வாப்பா-விடம் முடியாதெென மறுத்து விடுவதா? மருந்துண்ட நோயாளியின்

உடலில் ஏற்படுவது போன்றதொரு நடுக்கம் அவன் உடலில் பரவியது. தட்டுத்தடுமாறி நடந்து.... கட்டிலில் விழுந்தவன் தலையைப் பிய்த்துக்கெண்டு யோசித்தான். அவனுக்கு வழியேதும் தோணவில்லை.... யாது செய்வதென நினைத்து நினைத்துக் குழம்பினான் .... இர்சாத்.... மர்யம் வந்து சாப்பிட அழைத்த போது அவன் மறுத்து விட்டான். வீட்டில் உள்ளவர்கள் சாப்பிட்டு உறங்கி நடுஇரவைக் கடந்த பிறகும்...... அவன் உறக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தான். தொடர்ந்த அவனது நாட்கள் தூங்காத இரவுகளாகவே கழிந்தன.

"நஜ்மாவக் கூட்டிக்கொண்டு எங்கியாலும் பெய்த்திட்டால்' இவ்வாறு அவன் எண்ணமிட்ட போதும் தந்தையை நினைத்துத் தயங்கினான்.

வீட்டிலே அவனது திருமணத்தைப் பற்றிய பேச்சுவார்த்தை-கள் அதிகரித்த போது, அவன் உம்மாவோடும் அஸ்மாவோடும் முணுமுணுக்கத் தொடங்கினான். அவனது முணுமுணுப்புகள் எப்பயனையும் அளிக்கவில்லை.

"தெரீம் தானே இர்சாத்..... வாப்பா ரெண்டு பைனம் பேச்சு மூச்சில்லாப் போனது" என்ற அஸ்மாவின் வார்த்தைகளால் அவன் செயலற்றுப் போனான். அவனால் எப்படியாவது திருமண ஏற்பாடுகளை நிறுத்தி விட முடியும் தான். ஆனால்.... அதன் விளைவுகள்...... அவனால் எதிர்கொள்ளக் கூடியவை அல்ல. 'வாப்பாக்கு ஒண்டும் ஆகீடக்கூடாது' என அவன் பயந்தான். யோசித்து யோசித்து இறுதியில் அவன் மனம் வலுவிழந்தது. பாத்திஹா ஓதுவதற்கான ஏற்பாடுகளோடு நாட்களும் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன. இவ்வேளையில்...... தலையைப் பிடித்தபடி வந்த இர்சாத்..... ஆயிசா வீட்டு முற்றத்தில் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்தான். தலை வெடித்து விடப்போவது போன்று வலித்தது. தலையைக் கைகளில் தாங்கிக் கொண்டு தரையை நோக்கினான்.

"இர்சாத் நானா என்தியன்?" கேட்டபடி ஓடி வந்தாள் நஜ்மா

"தலக்குத்தா?"

"ம்"

"நில்லுங்கொ மரந்து..." கூறியபடி வீட்டினுள் செல்லத் திரும்பியவளை "வேணம்..." எனத்தடுத்தான் அவன்.

"நான் மருந்தல்லம் எடுத்த..." அவளை உள்ளே செல்லாது தடுக்க... அவன் பொய் கூறினான்.

"மரந்தெடுத்தும் உடல்லயா...?"

அவள் கவலையோடு கேட்டாள்.... அவனது முகம் சோர்ந்திருந்தது.

"என்துக்கன் தலநோவு வந்த...?" அவளது பரிவான வார்த்தையில் அவன் உருகிப் போனான்.

'களங்மில்லாமல் பேசும் இவளிடம் எதைச் சொல்வது...? இவளுக்கு என்ன தெரியும்?' என உள்ளுக்குள் அவன் கலங்கினான். அவனது விழிகள் அவளில் நிலைத்த போது....... அவளும் ஆழ்ந்த கவலையில் அவனை நோக்கினாள்.

கணங்கள் அங்கே அமைதியில் மடிந்தன. அவனுக்கு எவ்வாறு உதவுவது என்ற சிந்தனையில் அவள் ஆழ்ந்திருந்தாள். விரல்களால் நெற்றியை அழுத்தியபடி கதிரையில் சாய்ந்து அவன் அவளையே பார்த்திருந்தான்..... அங்கே...... ஓசையில்லா வார்த்தைப் பரிமாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்த போது..... றிஸாயா வரும் பேச்சுக்குரல் கேட்டு அவன் எழுந்து கொண்டான்.

"உள்ளுக்கு வாங்கொ..." பரிவோடு அவள் கேட்டபோது அவளை ஏக்கத்தோடு பார்த்தான் இர்சாத்.....

"நான் பொறகு வாரன் நஜ்மா..." எனக் கூறியபடி வெளியேறியவனை நெஞ்சம் விம்மப் பார்த்திருந்தாள் நஜ்மா...

'ரெண்டு மூணு நாளாக இர்சாதக் காணல்ல' என றிஸாயா நினைத்துக் கொண்டிருக்கும் போதே.....

"நாலண்டைக்கு இர்சாதுக்குப் பாத்தியா ஓதியாம்" என்ற செய்தி அவள் காதுகளிலே கூராய்ப் பாய்ந்தது.

எப்பவாவது நடக்கும் என அவள் எதிர்பார்த்தது தான்...... என்றாலும் தொடர்ந்து வரும் ஏமாற்றங்களைத் தாங்கவும்

அவற்றை உள்ளுக்குள் வைத்து மறைக்கவும் கூடிய திடத்தை அவள் இழந்து கொண்டிருந்தாள்.

"மர்யம் தாத்தாவும் அவங்கட காரியத்தப் பாத்துக் கொண்ட" எனப் பெருமூச்சு விட்டாள் ஆயிசா....

றிஸாயா அறிந்வைகளை உம்மாவோ, மஸீயாவோ, நஜ்மாவோ அறிந்திருக்கவில்லை.... மஸீயா உழைப்பால் சுமைதாங்கியானாள்..... றிஸாயாவோ வேதனைச் சுமையை இதயத்துள் தாங்கினாள்.... உம்மா அடிக்கடி கூறும் 'ஏழுசேனை நெருப்பும்' இஸ்மத்தின் முகத்தில் அல்ல. தன் இதயத்தில் இருப்பதை உணர்ந்தாள் றிஸாயா.

அன்று மாலை.......

"வரவோப்பா..." எனக்கேட்டபடி வந்த சர்மிளாவைக் கண்டபோது அவளால் மனதுக்கு ஓர் ஆறுதல் கிடைக்கும் என றிஸாயா நம்பினாள். ஆனால், அவள் வந்து பேசிய பின் இருந்த நிம்மதியையும் இழந்தாள்.... சில சமயம் தன் மனக்குறைகளை அவள் இர்சாதோடு பகிர்ந்து கொள்வாள். இனி அவனும் வரமாட்டான் என நினைத்த போது இதயத்தில் வேதனை சுமையானது.

# 26.

**சர்மிளாவும்** ஏமாற்றத்தையே கொண்டுவந்திருந்தாள். நஜ்மாவை தன் தம்பிக்கு எடுக்க எண்ணியிருந்தாளாம்.... ஆனால் அவன் வெளிநாட்டில் யாரோ ஒருத்தியை மணந்து கொண்டதாக அறிவித்திருக்கிறானாம்.... சர்மிளா கூறிக் கவலைப்பட்டாள். ஆனால் அவள் சொன்ன செய்தி றிஸாயாவின் மனதைப் பெரிதாகத் தாக்கும் என அவள் எதிர்பார்க்கவில்லை.

"எங்களுக்கு எல்லம் இல்லாமலாகித்தான் போற" என அவள் விரக்தியில் உதிர்த்த வார்த்தைகள் சர்மிளாவின் விழிகளை வினாக்குறிகளாக்கின.

"றிஸாயா என்தியன் செல்லிய?" என அவளது கைகளைப் பற்றினாள். றிஸாயாவின் விழிகள் கலங்கியிருந்தன. அடிமேல் அடிபட்டு புண்பட்டுப்போன தன் இதயத்தைப்பற்றி சர்மிளாவுக்கு என்ன தெரிந்திருக்க முடியும் என நினைத்தவள். "வாங்கொ டீச்சர்" என சர்மிளாவின் கைகளைப் பிடித்து ஜம்புக்காய் மரத்தடிக்கு அவளை அழைத்து வந்தாள். அழைத்து வந்தவள் ஜம்புமரத்தடியில் சிலையாகி நின்றாள்......

"செல்லுங்கொ..." என சர்மிளா அவளை உலுக்கிய பிறகுதான் அவள் சொல்லத் தொடங்கினாள். தான் அஸ்ரானை நம்பியது, தனக்கு தொழில் தவறிப்போனது, இர்சாதின் ஒருதலைக்காதல், மஸீயாவின் வாழ்க்கை எல்லாமே அவளிடம் கூறிவிட்டுச் சும்மா இருக்கவில்லை. அவள் தன் உள்ளக் குமுறலையும் சேர்த்தே கொட்டினாள்.

இருள் சூழ்வது கூட விளங்காமல் அவள் கூறுவதை-யெல்லாம் கேட்டிருந்தாள் சர்மிளா... 'அழகான இந்தப் பூவுக்குள் இத்துனைப் பூகம்பமா?' என்ற எண்ணமே அவளுள் மேலிட்டது. முற்றத்தில் மின்வெளிச்சம் பாய்ந்த போது தான் இருட்டிவிட்டதை இருவரும் உணர்ந்தனர். அவளைத் தேற்றும் வழி தோன்றாது புறப்பட்டாள் சர்மிளா. வீட்டில் சர்மிளாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவள் தன் தம்பியையும் இர்சாத்தையும் நினைத்துப்பார்த்தாள். இருவரும் இருவேறு விதத்தில் நஜ்மாவுக்கு வாய்க்காமல் போனதை எண்ணி அவள் மனம் நொந்தாள் "நல்ல காலம் இதொண்டும்

நஜ்மாக்கு தெரியாமப் போனது" எனத் தன்னைத் தேற்றிக் கொண்டாள் சர்மிளா.

நஜ்மாவின் குடும்பத்திற்குத் தன்னால் செய்யக்கூடியது யாது என அவள் வழி தேடினாள்.

இரண்டு நாட்கள் விரைந்து மறைந்தன.... இர்சாதுக்குப் பாத்திஹா ஓதும் வைபவமும் ஆரவாரமாக நடந்து முடிந்தது....

நஜ்மாவின் இதயம் வெடிவைக்கப்பட்ட கற்பாறையாகத் தகர்க்கப்பட்டது.... என்றாலும் மற்றவர் பார்வையில் சிதறுண்டு உருக்குலைந்து போய்விடாமல் இயல்பாயிருக்க அவள் சிரமப்பட்டாள். ஆழிப்பேரலையாய்ப் பாய்ந்து வரும் உள்ளக் குமுறலை அடக்க முடியாமல் அவள் கிணற்றடித் தட்டுவேலிக்குப் பின்னால் போய் நின்று..... நின்று..... அழுதாள்.... அழுதழுது முகம் கழுவினாள்.

"பொடவ கழுகப் போற..." எனக் கூறிக் கிணற்றடிக்குத் துணிமணிகளைச் சுமந்து சென்று துணி கழுவும் கல்லில் அமர்ந்து, ஏங்கி ஏங்கி அழுதாள்.... அவளைப் பொறுத்தவரை ஆறுதல் தேட யாருமே இல்லை. அவளது இதயம் அவனிடம் கூட விரிக்கப்பட-வில்லை. அவளுள் கண்டறியப்படமுடியாத ஊமைக்காயங்கள்.... அவளைப் போலவே மறுபுறம் அவனும் வேதனையில் வெந்து கொண்டிருந்தான்.

ஒருமௌனராகம் இப்போது, வேதனைராகமாக மாறி-யிருந்தது. கரீம் பணஆசை பிடித்தவராக இருந்தாலும் பிள்ளைகள்

மீது அதிக பாசமுள்ளவர் என்பதை இர்சாத் அறிந்திருந்தான். அவர், பணமுள்ள இடம் தேடுவதெல்லாம் தன் பிள்ளைகளின் நன்மைக்காகத்தான் என்பதே இர்சாதின் எண்ணமாகவும் இருந்தது. நஜ்மாவை மறக்க முடியாதது போலவே அவனால் வாப்பாவையும் மீற முடியாமல் இருந்தது. நஜ்மாவைத்திருமணம் செய்து கொண்டு எங்காவது தொலைதூரத்திற்குச் சென்று வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக் கூடிய வசதி அவனுக்கிருந்தது. ஆனால், அதன் பிரதிவிளைவுகளை எண்ணிப்பார்க்கவே அவன் பயந்தான்.

# 27.

**நாட்களின்** உருமாற்றத்தில் இரண்டு வாரங்கள் முழுமையடைந்தன. வெயிலின் கடுமை குறையாத பிற்பகல் வேளை. செடிகொடிகள் கூட ஆயாசத்தோடு தான் அசைந்து கொண்டிருந்தன. கடவலைக் கடந்து கொண்டு முற்றத்தில் அடிவைத்த சர்மிளாவின் பார்வையில் ஆயிசா வீட்டு முற்றம் சோபையிழந்து காணப்பட்டது.

"றிஸாயா..." என அழைத்தபடி அவள் உள்ளே சென்றாள். சர்மிளா தன் குடும்ப செல்வாக்கைப் பயன்படுத்தி றிஸாயாவுக்கான தொழில் முயற்சியில் ஈடுபட்டிருந்தாள்.

நஜ்மாவுக்காக அந்த வீட்டுக்கு வந்தவள், றிஸாயாவோடு நெருக்கமாகி, மஸீயாவிடம் உடுப்புகள் தைக்கக் கொடுத்து, இப்போது அந்தக் குடும்பத்தின் துயர்கண்டு வேதனைப்படவும் தொடங்கியிருந்தாள்.

நஜ்மாவின் குடும்பத்தை அழகியதொரு பூந்தோட்டமாய் அவள் கண்டாள். ஒவ்வொரு மலரும் ஒவ்வொரு அழகில் தோன்றுவது போல் நஜ்மாவும் சகோதரிகளும் நான்கு வண்ண மலர்களாய் மனதை ஈர்த்தார்கள்.

ஆனால் இப்போது....

றிஸாயா வாட்டத்தோடு நின்றாள். ஆனாலும் சிரித்துக் கொண்டாள். சர்மிளாவின் குரல் கேட்டு தூங்கிக் கொண்டிருந்த

நஜ்மா எழுந்து வந்தாள். அவளைக் கண்டதும் திகைத்துப் போனாள் சர்மிளா.

"நஜ்மா என்தியன் இது?" அவளது திகைப்பு வார்த்தைகளாக வெளிவந்தன. "நஜ்மா காச்சல்ல ஈந்த டீச்சர்" என்ற ஆயிசா...

"தின்னாமக் குடிச்சாம படுத்த படுக்கைல ஈந்த" என முடித்தாள். அவள் மெலிந்து போய் மின்னும் அவள் விழிகள் சோர்ந்திருந்தன.

"அல்லா...... இப்ப நல்லமோ?"

"நல்லம்" என்றாள் நஜ்மா ஒற்றையாக. அவளது குரல் கூட நலிவுற்றிருந்தது. முகத்தில் சோகம் குடிகொண்டிருந்தது. அவள் அதிகம் பேசாது அமைதி காத்தாள். 'இவளுக்கு என்ன நடந்தது?' எனத் தனக்குள்ளேயே கேட்டுக் கேட்டு குழம்பிப் போனாள் சர்மிளா. மஸீயா அதிகம் பேசமாட்டாள். அளந்து பேசுவாள்.

றிஸாயா அமைதியாகப் பேசுவாள். நிஸ்ரின் புரியாமல் பேசுவாள். அந்த வீட்டில் சிரித்துச் சிரித்துப் பேசுபவள் நஜ்மா ஒருத்தி தான். அவள் பேசாத சித்திரமாய் அமர்ந்திருப்பதைப் பார்த்து சர்மிளா கவலையடைந்தாள்.

காலம் இருப்புக்கொள்ளாமல் ஓடிக்கொண்டிருந்தது. காலமாற்றத்தில் ஆயிசா வீட்டிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.... றிஸாயாவுக்குக் கொழும்பிலுள்ள நிறுவனமொன்றில் வேலை கிடைத்தது. பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான ஆசிரிய நியமனத்தில் நஜ்மாவும் தெரிவாகியிருந்தாள். மத்திய மலைநாட்டுப் பகுதியிலுள்ள பெருந்தோட்டப் பாடசாலையொன்றில் அவளுக்கு நியமனம் கிடைத்தது. அவள் இயற்கை எழில் கொஞ்சும் மலைநாட்டுப் பகுதியை நோக்கிப் பயணமானாள்.

இளமைப்பருவத்தின் இனிமை சுதந்திரம் ஆசைகள் எல்லாவற்றையும் அனுபவிக்கத் துடிக்கும் பருவம்.... கனவுகளும் எதிர்பார்ப்புகளும் ஆட்டிப்படைக்கும் காலகட்டம்.... ஏழ்மையின் இயலாமையும் ஏமாற்றங்களும் உள்ளத்தில் குமிழியிட்டுத் தகிக்க வைத்த போதும் ஏதோ ஒரு நம்பிக்கையில் கற்பனைச் சிறகு விரித்துக் காதல் வானில் பறந்தவள்..... விதியினால் சிறகொடிக்-

கப்பட்டு வீழ்த்தப்பட்டாள். அந்த வீழ்ச்சியின் அதிர்ச்சி இன்னும் மாறாமல் இருந்ததால் புதிய இடமாற்றம் அவள் மனதுக்கு ஒத்தடமாயமைந்தது. சர்மிளாவின் ஏற்பாட்டில் தங்குமிடமும் நல்லதாக அமைந்தது.

ஆயிசாவுக்கு ஒருபுறம் மகிழ்ச்சியும், மறுபுறம் மகளைப் பிரிகின்ற கவலையுமாய் இருந்தது.

நஜ்மா ஊரைவிட்டே போய்விட்ட செய்தி இர்சாதை எட்டியபோது...... அவனுள் நெருப்பொன்று கிளம்பியது.

அவள் தொலைவில் செல்வதை அவனால் அனுமதிக்க முடியாதிருந்தது. ஒருநாள் திடீரென்று புறப்பட்டுச் சென்றவன் தன்னால் இயன்றவரை தேடிப்பார்த்தான். அவள் இருக்குமிடம் தெரியவில்லை.

விசாரிக்காமல் வந்ததில் தன் எதிர்கால மாமனாரை எத்தியது தான் மிச்சம். அவனைக் கண்டது அவருக்குச் சந்தோசமாக இருந்தது. அவனை வீட்டுக்கு அழைத்தார். பஸ்ஸில் செல்லாது தன் வாகனத்தை எடுத்துச் செல்லுமாறு எவ்வளவோ கேட்டுக்-கொண்டார். அவனுக்குப் பெரும் சங்கடமாகி விட்டது. மறுத்து விட்டு அவன் வந்து விட்டான்.

"கண்டீல டீச்சிங் கெடச்சி நஜ்மா பெய்த்தாம்" என்று தான் வீட்டில் பேச்சடிபட்டது. கண்டியில் எந்தப் பகுதியில் என்று யாரிடம் கேட்பது? சர்மிளாவுக்குத் தெரிந்திருக்கும். அவளிடம் கேட்க முடியாது.....

செய்வதறியாது அவன் குழம்பியிருக்க அவனது திருமணத்-தை சஃபான் மாதத்தில் வைப்பதென முடிவாகித் தேதியும் குறிக்கப்பட்டது.

மர்யம் தான் "பராத்துமாதம் சபான் நல்லம்" என்றாள். கரீமும் அதற்கு உடன்பட்டார்.

# 28.

**மாதங்கள்** உருண்டு புரண்டு ஓடிக்கொண்டிருந்தன. மர்யம் வீட்டிலே கல்யாண ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

"ஊட்டுல கடசிச்சீரு... பெரிசாச் செய்யோணும்" என்ற மர்யத்தின் ஆசையைக் கணவரும் ஒத்துக் கொண்டார். சஃபான் பிறையும் பிறந்து வளர...... மர்யம் வீடு கல்யாணக் கோலம் பூண்டது..... பெரிய இடத்து மனிதர்களும் தோட்டம் நிறைந்த வாகனங்களுமாக ஒரு வாரமாக வீடு அல்லோலகல்லோலப்பட்டது. ஆடம்பரமான கல்யாணம்.... வலீமா எல்லாம் நடந்து முடிந்த போது இர்சாத் மட்டும் வாப்பாவைப் பார்த்துப் பார்த்து ஜடமாக..... ஊமையாக.... மாறியிருந்தான்.

மகன் மாமனாரின் சொத்துக்களையெல்லாம் பொறுப்பேற்பதில் சுனங்கக் கூடாது என்பதற்காக, மகனைக் கட்டித்தழுவி மருமகளின் தலையைத்தடவி அவர்களை வழியனுப்பி வைத்தார் கரீம்.

ஸுலைஹா கணவனுக்கு நல்ல விதமாகப் பணிவிடைகள் செய்தாள். சுவையான உணவுகள் படைத்தாள். இர்சாத் எதையுமே கண்டு கொள்ளவில்லை. அவள் விழுந்து விழுந்து உபசரித்த போதும் அவன் ஏறெடுத்தும் பார்க்காதிருந்தான். அவனுக்குத் தனிமை தேவைப்பட்டது. தனிமையை நாடினான். அவனது இப்போக்கு அவளுக்குப் புரியவில்லை. அவள் காரணம்

கேட்டாள். அதற்கு அவன் சொன்ன பதிலைக் கேட்டபோது அவளது மனக்கோட்டைகளெல்லாம் சரசரவெனச் சரிந்து விழுந்தன.

"இந்தக் கலியாணத்தில எனக்கு விருப்பமில்ல" அவள் சிறிதும் எதிர்பாராத வார்த்தைகள்.... விருப்பமில்லாததன் காரணத்தை அவள் வினவிய போது தன் மனதில் வேறொருத்தி இருப்பதாக அவளது முகத்தைப் பார்க்காமலேயே கூறிவிட்டான். அவனது அலட்சியத்தைக் கண்டு மனமுடைந்து அவள் அழுதாள் ஆனாலும் தைரியத்தை இழக்காது தன்னைத் தேற்றிக் கொண்டாள் ஸுலைஹா.

காலையில் ஜன்னலைத் திறக்கும் போதே ஜன்னலோரத்தில் பூத்துச் செழித்த மலர்க்கொத்து அவனுக்கு அவள் ஞாபகத்தையே கொண்டு வந்தது. எழுந்து தோட்டத்துக்குச் சென்றான். கதிரொளி பட்டுச் சிரித்த பனிமலர்களும் அவளையே நினைவூட்டின. அந்த விசாலமான தோட்டத்தின் எல்லை வரை சென்றான் இர்சாத்.... கண்ணுக்கெட்டிய தூரம்வரை பரந்து விரிந்த பசுமை அவன் கவனத்தை ஈர்க்கவில்லை. இயற்கை அன்னையின் எந்த அழகும் அவனைக் கவரவில்லை. அந்தச் சூழலில்..... அவள் அங்கிருக்க வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. அவன் கொண்டு வந்து கொடுத்த பூங்கன்றுகள் கொத்துகளை அவள் ஆசையோடு நட்டதை எண்ணிப்பார்த்தான். இதயத்தில் பெரும் பாறாங்கல் வைக்கப்பட்டது போலிருந்தது.

ஒவ்வொருநாள் கழிவதும் அவனுக்குச் சுமையாகியதால் அவன் அங்கு வந்த சில நாட்களிலேயே மாமனாரிடம் பேசி வியாபாரப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தான். அவனது இச்செயல் மாமனாருக்குச் சந்தோசத்தையே அளித்தது.

ஆனால், ஸுலைஹா எவ்வளவு தியாகங்கள் செய்தும் கணவனின் இதயத்தில் இடம்பெற முடியாமல் போனதால் அவள் ஏமாற்றமும், வெறுப்பும் அடைந்திருந்தாள்.

இர்சாத் காலையில் சிறிது நேரம் தோட்டத்தில் உலவி விட்டுக் கடைக்குப் போய்விடுவான். அவளது முகத்தைப் பார்த்து இதுவரை கதைத்ததில்லை. ஆனாலும், அவள் தைரியத்தை இழக்காதிருந்தாள்.

இதுவரை அவன் பின்னால் நின்றிருந்த ஸுலைஹா மெல்லக்.... கேட்டாள்.

"கோப்பி குடிக்கல்லயா?"

"இல்ல"

"எடுத்துக்கொண்டு வரவா?"

"வேணம்" திரும்பாமலேயே கூறினான்.

'எவ்வளவு அலட்சியமான பதில்?' அவள் பொறுமை-யிழந்தாள்.

"ஒங்களப்போல சொத்தாச புடிச்சவங்க வேற...

விரும்பியிருக்கக் கூடாதே" என்றாள் திடீரென. எதிர்பாராத அந்த வார்த்தைகளால் தாக்குண்டு ஆத்திரத்தோடு திரும்பினான் .... இர்சாத்..... அவளுக்கு ஒன்று அறைந்திப்பான். ஆனால் அஸ்மா சொன்னவை அவன் காதுகளில் ரீங்கரித்தன....

"வாப்பாக்காக எல்லம் பொறுத்துக்கொங்கொ இர்சாத்" அவன் பொறுத்துக்கொண்டான்..... அப்போது தான் அவன் மனைவியின் முகத்தையே பார்த்தான்.

'காக்க மாதிரி. ஏண்ட நஜ்மாக்கு கிட்டயும்

வெச்சேலா' என நினைத்துக் கொண்டவன்.....

"அது ஏண்ட விருப்பம்" என்றான் சட்டென்று.

"அப்ப என்னய முடிச்சது?" அவளது குரல் தழுதழுத்தது.

"வாப்பாவச் சுட்டி" என்றான் அவன்.

"எங்கட உம்மாவும் நோயாளி தான்" என அவள் விம்மினாள். செடிகளடர்ந்த அந்த இடத்திலே அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லாததால் அவளது விம்மல் அழுகையானது. தேக்கி வைத்த வேதனைகள் கரைந்தோட அவள் அழுதாள். அவளது அழுகை அவனது மனதை இளகச்செய்தது.

அவன் நஜ்மாவை விட்டு வந்ததே தன் தந்தைக்காகத்தான்.

இவ்வளவு சொத்துக்களோடு இருந்தும் கூட தன் மகள் வாழவில்லையென்றால் அந்தப் பெற்றார் தாங்குவார்களா? என நினைத்தபோது.... அவனுக்குக் கவலையாக இருந்தது. நீண்ட அமைதிக்குப் பின் திரும்பி அவளைப் பார்த்து,

"வாங்கொ போவம்..... நான் கடைக்குப் போக வேணும்" என்றபடி அவன் முன்னால் நடந்தான்.

அவனது அந்த வார்த்தைகளில் மனம் தேறிய அவள், கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கணவனின் பின்னால் நடந்தாள்.

மகளும் மருமகனும் தோட்டத்தில் உலவிவிட்டு வருவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர்.... ஹனியா ஹாஜியாரும் அவர் மனைவியும்.

# 29.

**நிலமகளின்** கரடு முரடும், குழிகளும், பசுஞ்செடிகளின் அடர்த்தியில் மறைவது போல, நஜ்மாவினது உள்ளத்தின் கீறல்களெல்லாம் மலையகத்தின் எழிற்கோலங்களிலும், கடமையின் ஈடுபாட்டிலும் மறைந்து போயின. விடுமுறை நாட்களில் றிஸாயாவும் அங்கு சென்றாள். சென்ற போதெல்லாம்.....

"வெளீகள்ள திரிய வேணம்" எனக்கூறி வைத்தாள். அவள் கூறியதன் உள்ளர்த்தம் நஜ்மாவுக்குப் புரிந்தது. அவள் வெளியில் எங்கும் செல்லவில்லை. தன் சக ஆசிரியை ஸல்மாவோடு அவள் வீட்டுக்கு மாத்திரம் பல தடவைகள் போனாள்.

அன்றும், தன் நண்பியொருத்தி வருவதாகக் கூறி அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள் ஸல்மா. அந்த நண்பியைப் பற்றி ஏற்கனவே ஸல்மா கூறியிருந்ததால் அவளும் ஸல்மாவோடு சென்றாள். அங்கே ஸல்மாவின் நண்பி காரில் வந்திறங்கினாள். வேலைக்காரப்பெண் அவளோடு கூட வந்தாள்.

"ஸுலைஹா" என்றபடி ஓடிச்சென்று அவளைக் கட்டித் தழுவி அழைத்து வந்தாள் ஸல்மா.

"இவதான் நஜ்மா. இவவும் களுத்துறதான்" என அவளிடம் அறிமுகப்படுத்தியவள்.....

"நஜ்மா இவ முடிச்சிருக்கிறது ஒங்கட ஊருல தான். அவர் பேரு இர்சாத்" என்றாள்.

அவள் திடீரென அவன் பெயரைக் கூறியதும் நஜ்மாவின் இதயம் பிய்த்தெடுக்கப்படுவது போலிருந்தது. இது...... அவள் சிறிதும் எதிர்பார்த்திராத தாக்குதல்.... ஒரு கணம் தடுமாறியவள் பிறகு சமாளித்துக் கொண்டாள். எதுவும் சொல்லத் தோன்றாது அவளைப் பார்த்தாள். அவளும் இவளை வியப்போடு பார்த்தாள்.

ஸுலைஹா கறுப்பாக கொழுப்பாக இருந்தாள். அவளது விழிகளில் ஒரு சோகம் பொதிந்திருந்தது.

அவள் ஸல்மாவோடு நிறையப் பேசினாள். அவர்களைக் கதைக்க விட்டு ஒதுங்கிப் போனாள் நஜ்மா.

'றிஸாயா தாத்தா தெரிந்து தான் சொல்லியிருக்கிறாள். தான் இங்கு வந்ததும் தவறு' என உணர்ந்தாள் நஜ்மா. ஸுலைஹா அங்கிருந்து போனதன்பிறகு....

"பாவம் இவ" எனக் கவலைப்பட்டாள் ஸல்மா. அவளைக் கேள்விக்குறியோடு நோக்கினாள் நஜ்மா.

"முடிச்சதிலிருந்து மாப்புள அவட மொகத்தக்கூடப் பாக்கல்லயாம். அவரு வேற ஆரயோ விரும்பினாம். வாப்பாட பேச்சத்தட்ட ஏலாமத்தான் இவள முடிச்சதாம். இவட உம்மா நோயாளியெண்டு தெரிஞ்ச பிறகு தான் இவவோட பேசுறாம். அதுவும் பிடிப்பில்லாமல் கடமைக்காக"

எதுவும் பேசாது கேட்டிருந்தாள் நஜ்மா. ஸல்மாவே தொடர்ந்தாள்.

"முடிச்சி ரெண்டு மாதம்...... இன்னும் போலியான ஒரு வாழ்க்க தான் நடக்குது.."

"இவ பணக்காரி, தைரியசாலி. அதனால சரி.."

"இவ பஸந்துமில்ல தானே. பஸந்தீந்தால் எப்படியோ சரிப்பட்டிருந்திருக்கும்..."

ஸல்மா கூறிக்கொண்டிருந்தாள். நஜ்மா பேசவில்லை அவளுள் இதயம் பிழியப்பட்டுக் கொண்டிருந்தது. அவனை மறக்க முயன்று கொண்டிருக்கையில் இவள் ஞாபகப்படுத்துகிறாளே-யென உள்ளுக்குள் அவள் அழுதாள். அதிக நேரம் அங்கே இருக்கப்

பிடிக்காது தலைவலி எனக் கூறிவிட்டு விடுதிக்குத் திரும்பினாள் நஜ்மா.

இதுவரை வீட்டுக்குச் செல்ல நினைக்காத நஜ்மாவுக்கு இப்போது வீட்டுக்குச் செல்லும் எண்ணம் ஏற்பட்டிருந்தது. ஒரு வெள்ளிக்கிழமை, விடுமுறை நாளானதோடு மூன்று நாட்கள் தொடர்ந்து விடுமுறையாதலால் அவள், றிஸாயாவுக்கு அறிவித்து விட்டு வீட்டுக்கு வந்தாள். அவள் வந்ததோடு றிஸாயாவும் வந்து சேர்ந்தாள். நஜ்மா இருந்ததை விடவும் பொழிவு பெற்றிருப்பதைக் கண்டு ஆயிசா சந்தோசப்பட்டாள். ஆனால், மஸீயாவைக் கண்டு மனம் நெகிழ்ந்தாள் றிஸாயா. வெகுநாட்களுக்குப் பிறகு இப்போது தான் அவளும் வீட்டுக்கு வந்திருந்தாள். தையலும் வீட்டு வேலையுமாகி இருந்ததால் மஸீயா இளைத்திருந்தாள். இனிமேல் தைக்க வேண்டாமென நஜ்மாவும் றிஸாயாவும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்ட பிறகு அவளும் தைப்பதை விட்டுவிட உடன்பட்டாள்.

"பெரியம்மூட்டுச் செய்தி என்தியன்?" றிஸாயா தான் கேட்டாள்.

"இர்சாத் பொண் ஊட்டுல தான் அவவும் இங்க வந்து நிச்சியல்ல. உம்மாவோட வந்துட்டுப் போற" என்றாள் ஆயிசா அதோடு நிறுத்திக் கொண்டாள் றிஸாயா. தங்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் மஸீயாவுக்காக, இனிமேல் தாங்கள் வாழ்வதென, அவள் வாழ்வில் மலர்ச்சி காணவே தாங்கள் உழைப்பதென அவளும் நஜ்மாவும் உறுதி பூண்டிருந்தனர். ஆனால், மஸீயாவோ றிஸாயாவைப்பற்றி எண்ணினாள். வயதேறுமுன் அவளுக்குத் திருமணம் நடக்க வேண்டுமென மனதுள் தவித்தாள். ஆனால் வெளியிடத் தயங்கினாள். தன்னால் முடியாது போனாலும் தன் தங்கைகளாவது கரைசேரட்டும் என அவள் ஆசைப்பட்டாள்.

*******

நிலமங்கை இருளாடை கலைகின்ற அதிகாலைப்பொழுது. சில்லிடும் குளிரிலும் தெருவில் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது... எறும்புக்கூட்டமாய் ஓடிக்கொண்டிருந்த வாகனங்களிடையே மெல்ல ஊர்ந்து சென்றது, இர்சாதின் கார். காரை மெதுவாக

அவன் செலுத்திக் கொண்டிருந்த போது.... அகிற் புகையாய்ப் பரவிய பனித்துகள்களுடே அந்த இரு முகங்களையும் அவன் கண்டான். ஒரு கணம்..... அவனது கரங்கள் ஸ்டியரிங்கோடு தடுமாறின.... விடிந்தும் விடியாத அவ் வைகறையில் இரு ரோஜாக்கள் பூத்திருப்பது போல... பஸ்நிலையத்தில் அவள் நஜ்மா றிஸாயாவோடு நின்றாள். அவனும் அவர்களுக்குச் சிறிது தூரத்தில் காரை நிறுத்தினான். ஆனால் இறங்கவில்லை.

கருவானில் தோன்றிய பூரண நிலவு போல் கறுப்பு பர்தாவில் பளிங்காகத் துலங்கியது அவளது பூ முகம். காற்றில் மிதந்து... கன்னங்களில் புரண்டு..... கதைபேசும் அவளது அலையலையான கூந்தல் பர்தாவுக்குள் மறைக்கப்பட்டிருந்தது.... மறைத்தலின் அழகு, அவள் முகத்தில் ஒளிர்ந்தது.

'நஜ்மா.... நீ எவ்வளவு பஸந்து... நான் பாக்கியம் கெட்டவன்' காரின் கண்ணாடியூடு அவளது எழில் முகத்தை வியப்போடு வேதனையோடு அவன் பார்த்திருந்தான்.

நஜ்மாவும் றிஸாயாவும் பஸ்ஸில் ஏறி மறைந்தனர். அவர்கள் கரைசேர மார்க்கம் தேடிச் சென்று கொண்டிருந்தார்கள்..... அவர்கள் சென்ற பின்னரும் கூட இதயம் 'நஜ்மா நஜ்மா' என அடித்துக்கொள்ள விழிநீர் கண்களை மறைக்க ஸ்டியரிங்கைப் பிடித்தபடி அங்கேயே அசைவற்று இருந்தான்.... அவன்.

மஸீயா, றிஸாயா, நஜ்மா, ஸுலைஹா எல்லோரும் ஏதோ ஒரு வகையில் கரையைத்தான் தேடுகிறார்கள். ஆனால் ராட்சஸ பேரலைகளால் சிதறிப்போகும் சிற்றலைகள் போல இவர்களும்.... கீழ்மை உள்ளமும் பணப்பித்தும் கொண்டவர்களால் கரைகாண முடியாமல் உள்ளிழுக்கப்படுகிறார்கள்.....

ஆயினும், அந்த அலைகள் ஓயவில்லை. காலத்தின் வேகநடையும் ஓயாதபோது...

றிஸாயாவினதும் நஜ்மாவினதும் அயரா உழைப்பிலே ஒருநாள் மஸீயா கரைசேர்ந்தாள். அவளது கனவுமலர்கள் மலரத் தொடங்கின.

இக்கதையாடல் பிரமிக்கவைக்கிறது. சிறந்ததொரு திரைப்பிரதியின் நுட்பமான கோணங்கள் போன்று கதைசொல்லியினது காட்சிகள் நம்மோடு பேசுகின்றன. செய்நேர்த்தியும் கலைநயமும் மிக்க கதைசொல்லியின் குணாம்சங்கள் இப்பிரதியில் அற்புதமாகக் காண்பிக்கப்படுகின்றன.

தனது வாசகனது சராசரி எதிர்பார்ப்புகளைக் கூட ஓங்கி மறுதலித்து விட்டுப்போகும் இக்கதை படித்து முடிந்து வெகுநேரமாகியும் நம் கூடவே உட்கார்ந்திருக்கின்றது. சற்றும் பிசிறடிக்காத கதை சொல்லியின் குரல் செவிகளுக்குள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

கதைமாந்தரும், கதை நிகழ்களமும் தீவிர அவதானிப்புத் திறனூடே வந்தடைகின்ற கதைசொல்லியின் உணர்தலை நமக்குள்ளும் அப்படியே இடம் மாற்றி விடுகின்றது. அவையே நமக்குள் வித்தைகள் பல புரிகின்றன. மூச்சுத் திணறும் மட்டும் நம்மைப் பிடித்து களுகங்கை போலும் ஒரு நதிக்குள் மூழ்கடிக்கவும் செய்கின்றது.

சுமார் முந்நூறு பக்கங்கள் விரித்துச் சொல்லக் கூடிய கதை அடக்கி வாசிக்கப்பட்டிருக்கின்றது. நமது நாவல் இலக்கியப் பரப்பில் ஸனீராவின் எழுத்துக்களை புதியதொரு பாய்ச்சலாகவே பார்க்கிறேன்.

ரேஷ்மா

20 / 04 / 09

ISBN 978 - 955 - 51618 - 0 - 0